
www.padippakam.com

16 - 31 மே 1997 □ ரூ. 3.50

நாடெங்கும் போலீசின் நரவேட்டை

# புதிய ஜனநாயகம்




## திடீர் தமிழனின் தன்மான எழுச்சி!

படிப்பகம்

www.padippakam.com

# மின் துறையைத் தனியார்மயமாக்காதே! நாட்டை மறுகாலனியாக்காதே!

கூடாரத்திற்குள் நுழைந்த ஒட்டகத்தின் கதையைக் கேள்விப்பட்டிருப்பீர்களே, அது தான் இன்று இந்தியாவில் நடந்துவருகிறது. 1991-ஆம் ஆண்டு புதிய பொருளாதாரக் கொள்கை எனும் பெயரில், தனியார்மயம் - தாராளமயம் - உலகமயத்தை நடைமுறைப்படுத்தத் தொடங்கிய ஆட்சியாளர்கள், இந்தியத் தொழிற்துறையில் பன்னாட்டு மூலதனம் தடையின்றி நுழைவதற்கு வசதியாக, அதற்கு முன்பிருந்த அற்பமான கட்டுப்பாடுகளையும் அடித்து நொறுக்கினர். இதன்பின், மூலதனப் பற்றாக்குறை என்ற காரணத்தைக் காட்டி, விவசாயம், கல்வி, மருத்துவம் போன்ற மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு அளித்து வந்த மானிய உதவிகள் குறைக்கப்பட்டன; இலாபமீட்டும் பொதுத் துறை நிறுவனப் பங்குகள் சந்தையில் விற்கப்பட்டு, அவை தனியாருக்கும் பன்னாட்டு முதலாளிகளுக்கும் தாரை வார்க்கப்பட்டன. இறுதியாக, நமது நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பான மின்சாரம், தொலைதொடர்பு, சாலை, துறைமுகம், வங்கி, காப்பீடு போன்ற அடிக்கட்டுமான துறைகளையும் ஏகாதிபத்தியங்களுக்குத் திறந்துவிட்டு, நாடு மீண்டும் காலனியாவதைத் துரிதப்படுத்தி வருகின்றனர்.

இந்த அடிக்கட்டுமானத் துறைகளுள் மின்சாரம் நவீனப் பொருளாதாரத்தின் உயிர்நாடி. உலக வங்கியின் உத்தரவுப்படி, இத்துறையில் தரகு முதலாளிகளும், பன்னாட்டு முதலாளிகளும் நுழைவதற்கு வசதியாக மாநில மின்சார வாரியங்கள் சீரமைக்கப்படுகின்றன; மின்சார உற்பத்தியையும், விநியோகத்தையும் தனியாகப் பிரிக்கச் சட்டம் இயற்றப்படுகிறது. நாடெங்கும் மின் கட்டணங்கள் உயர்த்தப்படுகின்றன. மகாராஷ்டிராவில் என்ரான், கர்நாடகாவில் கோஜெண்டிரிக்ஸ், தமிழ்நாட்டில் எஸ்.டி. - சி.எம்.எஸ். எனப் புற்றீசல் போல் பன்னாட்டு நிறுவனங்கள் மின் உற்பத்தியில் மூலதனமிட்டுள்ளன.

மின்துறை தனியார்மயமாவது நாடு மீண்டும் காலனியாகிவருவதின் எடுப்பான சான்று. எனவே, நாட்டைச் சூழ்ந்துவரும் இப்பேரபாயத்தைத் தமிழக மக்கள் மத்தியில் விரிவாக எடுத்துச் சென்று, அவர்களின் அரசியல் விழிப்புணர்வைத் தட்டியெழுப்பும் முகமாக மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி - இம்மூன்று அமைப்புகளும் இணைந்து, ''நெய்வேலி சீரோ யூனிட் அனல் மின் நிலையத்தை அமெரிக்காவிற்கு விலை பேசும் ஒப்பந்தத்தை ரத்து செய்!'' என்ற முழக்கத்தை முன்வைத்தன. இதனடிப்படையில் மக்களை அணிதிரட்டி, தொழிலாளர் தினத்தன்று நெய்வேலி நிலக்கரி கழகத்தின் முன் மறியலில் ஈடுபடும் போராட்டத்தையும் அறிவித்தன.

கடந்த ஏப்ரல் மாதம் தொடங்கியே, இம்மறியல் போராட்டம் பற்றிய பிரச்சாரம் தமிழகமெங்கும் விரிவாக எடுத்துச் செல்லப்பட்டது. நெய்வேலி நிலக்கரிக் கழகம் தொடங்கவிருந்த சீரோ யூனிட் அனல் மின் நிலையத்தை, அமெரிக்காவின் எஸ்.டி. - சி.எம்.எஸ். நிறுவனத்திற்குத் தாரை வார்க்க, ஜெயா ஆட்சி தொடங்கி நடந்த திரைமறைவுச் சதிகளையும், மின் கட்டண உயர்வு, இலவச மின்சாரம் ரத்து என மக்களை நேரிடையாகத் தாக்கும் பாதிப்புகளையும், நாட்டை அந்நியக் 'கடன் வலைக்குள் நெட்டித் தள்ளும் அபாயம் தனியார்மயமாக்கலின் பின்னிருப்பதையும் விளக்கித் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. சுவரெழுத்து, பேருந்துப் பிரச்சாரம், தெருமுனைக்கூட்டங்கள் வாயிலாகவும் மின் துறையைத் தனியார்மயமாக்கும் திட்டத்தை எதிர்க்குமாறு மக்கள் அறைகூவி அழைக்கப்பட்டனர்.

மறியல் போராட்டத்தின் முதற்கட்டமாக திருச்சி, தஞ்சை, சென்னை, உசிலம்பட்டி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்ட மற்றும் தாலுகா தலைநகரங்களில் 12.04.97 அன்று தமிழகம் தழுவிய தொடர் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. போராட்டக் களமான நெய்வேலியில் பொதுக்கூட்டங்கள், ஆலை வாயிற் கூட்டங்கள் மூலம் சுரங்க மற்றும் அனல் மின்நிலையத் தொழிலாளர்கள் மத்தியில் மறியல் போராட்டப் பிரச்சாரம் எடுத்துச் செல்லப்பட்டது.

பல்வேறு ஓட்டுக்கட்சிகளும், தொழிற் சங்கத் தரகர்களும், கழிசடை சினிமா கதாநாயகர்களும் தொழிலாளர் தினத்தன்று ஊர்வலம் நடத்திக் கொள்ள அனுமதியளித்த தி.மு.க. அரசு, நெய்வேலியில் ம.க.இ.க. — பு.மா.இ.மு — வி.வி.மு. தோழர்களும், ஆதரவாளர்களும் ஊர்வலமாகச் சென்று மறியல் நடத்த அனுமதிக்கப்படவில்லை. நெய்வேலி - மந்தாரக்குப்பத்தில் மே 1 அன்று பொதுக்கூட்டம் நடத்திக்கொள்ள மட்டுமே அனுமதி அளித்த போலீசு, அவ்விடத்தைவிட்டு ஓரடி நகர்ந்தால்கூட கைது செய்வோம் என மிரட்டியது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நெய்வேலி நோக்கி திரண்ட தோழர்கள், தாங்கள் பயணம் செய்த ரயில் பெட்டிகளையும்கூட ஏகாதிபத்திய எதிர்ப்பு மேடையாக்கினர். அங்கு நாட்டை மறுகாலனியாக்கி வரும் ஓட்டுக் கட்சிகளின் துரோகம் திரைகிழிக்கப்பட்டது. மே 1 அதிகாலை தொடங்கியே நெய்வேலி - மந்தாரக் குப்பம் பகுதியில் அசுர கானமும், பறை முழக்கமும், ஏகாதிபத்திய எதிர்ப்பு முழக்கங்களும் ஒன்றையொன்று விஞ்சும் வண்ணம் விண்ணதிர முழங்கின.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என 900 பேர் திரண்டிருந்த அப்பொதுகூட்டத்திற்கு விவசாயிகள் விடுதலை முன்னணி மாநில அமைப்பாளர் தோழர் நாராயணன் தலைமை தாங்கினார். ''செருப்பு ஊர்வலத்திற்கு அனுமதி உண்டு; ஆனால் நமக்கில்லை'' என ஓட்டுக் கட்சிகளின் சனநாயக விரோதத் தன்மையைச் சாடிய அவர், ''புரட்சியாளர்களைப் பொருத்தவரை மே 1 அரசியல் ஆர்ப்பாட்ட நாள். கருவறை நுழைவுப் போராட்டம், இறால் பண்ணை அழிப்புப் போராட்டம் என்ற போராட்ட வரலாறு நமக்குண்டு'' எனக் குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்றிய வி.வி.மு. ஆண்டிப்பட்டி வட்டாரச் செயலர் தோழர் செல்வராசு, ''இந்த மறியல் எதற்கோ, யாருக்கோ நடைபெறும் போராட்டமல்ல'' எனக் குறிப்பிட்டு, ''மின்சாரம் இல்லையென்றால் பயிருக்கு எப்படி தண்ணீர் பாய்ச்சுவது? சால் ஓட்டி நீர் பாய்ச்ச முடியுமா? இனி பின்னோக்கிப் போக முடியாது; முன்னோக்கி போகப்

தொடர்ச்சி 23-ஆம் பக்கம்

**மறியல் போராட்டத்தை விளக்கி திருச்சியில் நடந்த ஆர்ப்பாட்டம்**





படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

தொகுதி: 12

இதழ்: 12 - 13

1 மே '97 - 31 மே '97

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.

# காங்கிரசின் கைப்பாவையாக ஐக்கிய முன்னணி அரசு

மார்ச் 30-ஆம் தேதி தொடங்கி தலைநகர் புது டெல்லியில் நடந்த அரசியல் கூத்துகள் எல்லாம் இந்த நாட்டின் அரசியல் அமைப்பு எவ்வளவு தூரம் பலவீனமானது, கேடு கெட்டு அழுகி நாறுவது என்பதை நாட்டு மக்கள் அனைவருக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டன.

''பத்து மாத கால கௌடா அரசு நேர்மறையான பங்களிப்புகளைக் காட்டத் துவங்கி யிருக்கும் வேளையில், வரலாறு காணாத வகையில் சிறந்த பட்ஜெட்டை வைத்து நாடா ளுமன்றம் விவாதித்துக் கொண்டிருக்கும் வேளையில், அணிசேரா நாடுகளின் மாநாடு கூடும் வேளையில், என்றும் இல்லாதவாறு இந்தியா - பாக். உறவு சீர்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு பேச்சுவார்த்தைக்காக பாக். வெளியுறவு அமைச்சர் வந்துள்ள வேளை யில் திடீர் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. இதற்குக் காரணம் பொறுப்பற்ற அரசியல் தலைவர்கள், குறிப்பாக காங்கிரசு தலைவராகியுள்ள சீதாராம் கேசரியின் பதவிவெறி - சுயநலம்தான். அரசியலே தரந்தாழ்ந்து விட்டது'' என்று அரசியல் விமர்சகர் களும், பத்திரிகைகளும் ஒப்பாரி வைக்கின்றனர்.

நாடாளுமன்ற அரசியல் கட்சிகளுக்கிடையே இப்போது நடந்துவரும் அருவெறுக் கத்தக்க, நாய்ச் சண்டை கேவலமான வெறும் பதவிப் போட்டி, கோமாளித்தனமான கூத்து, ''அதிகார வெறிபிடித்த ஒரு கிழவனின் அவசரச் செயல்'' என்று ''இலண்டன் டைம்ஸ்'' சித்தரித்ததையே பிற கட்சிகளும் பத்திரிகைகளும் பிடித்துக்கொண்டு நாட்டு மக்களை நம்பச் செய்கின்றன. பஞ்சாப், காஷ்மீர் தேர்தல்களில் படுதோல்வி கண்டது. பகுஜன் சமாஜ் கட்சியுடன் சேர்ந்து உத்திரப்பிரதேசத்தில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள் ளும் வாய்ப்பை பாரதீய ஜனதாக் கட்சி தட்டிப் பறித்துக் கொண்டது ஆகிய காரணங்க ளால் காங்கிரசு அவசரப்பட்டு கௌடா அரசைக் கவிழ்த்தது என்று அரசியல் அலசல் - ஆய்வுகளும் கூறப்படுகின்றன.

கௌடா அரசைக் கவிழ்ப்பதற்கு சீதாராம் கேசரி பின்வரும் காரணங்களை அரசுத் தலைவரிடம் சொன்னார்: ''காங்கிரசை ஓரங்கட்டி ஒழித்துவிடவும், தேசியப் பிரச்சினை களை ஒதுக்கி வைக்கவும் கௌடா அரசு முயலுகிறது. சட்டம் - ஒழுங்கு நிலைகுலைந்து போய்விட்டது. விலைவாசி ஏறவும், வேலையில்லாத் திண்டாட்டம் பெருகவும் வழிவ குக்கும் வகையில் பொருளாதாரம் சீர்குலைந்து போனது.''

''வகுப்புவாத, பிளவுவாத, பிரிவினைவாத சக்திகளைக் கட்டுப்படுத்தத் தவறியது. பஞ்சாப் மற்றும் பிற இடைத் தேர்தல்களிலும், குறிப்பாக உ.பி.யிலும் காங்கிரசுடன் ஐக்கிய முன்னணி இணைந்து பணிபுரியாததால் மதவாத சக்திகள் வளர்ந்து விட்டன. ஐக்கிய முன்னணிக் கட்சிகள் காங்கிரசு - எதிர்ப்புவாதத்தைக் கடைப்பிடிக்கின்றன.''

''ஒருங்கிணைந்த பொறுப்பின்றி அமைச்சரவை செயல்படுகிறது. நாட்டின் இரா ணுவ, பாதுகாப்புத் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன. சிவில் அதிகாரிகளும், அரசு அமைப்புகளும் தார்மீக பலமிழந்து பலவீனமாகி விட்டன''.

சண்டித்தனம் செய்யும் நொண்டிக் குதிரை சறுக்கியதற்குச் சாக்காக சொல்லும் சொத்தை வாதங்கள்தாம் இவை. இதற்கு முந்தைய காங்கிரசு ஆட்சியும் இப்படித்தான் இருந்தது. கௌடா அரசைக் கவிழ்த்ததற்கு உண்மையான வேறு காரணம் இருந்தது. ஆனால் எழுதப்படாத ஒப்பந்தம்போல் எந்தக் கட்சியும் அதை முன்வைக்கவில்லை. பிரதமர் பதவிமேல் அந்தக் கிழவனுக்கு ஏற்பட்ட மோகம்தான் காரணம் என்பதாகத் தேவே கவுடா உட்பட பிற கட்சிகளும் மழுப்பின. விடாக்கண்டன் - கொடாக்கண்டன் கதையைப்போல எல்லாம் நடக்கின்றன.

அதாவது நூறுக்கும் மேற்பட்ட காங்கிரசின் முன்னாள் அமைச்சர்கள், எம்.பி.க்கள், கட்சிப் பிரமுகர்கள் மீதான பல்வேறு கிரிமினல் குற்ற வழக்குகள் முக்கிய கட்டத்தை எட்டிவிட்டன. சதீஷ் சர்மா, ஷீலா கௌல் இருவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டதோடு, அதிகார முறைகேடு விசாரணை துவங்கிவிட்டது. கல்பனாத் ராய்க்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை வந்துவிட்டது. ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா வழக்கில் பல முன்னாள் மந்திரிகள், கர்நாடகா - அரியானா முன்னாள் முதல் மந்திரிகள்மீது குற்றப் பத்திரிகைகள் தாக்கலாகிவிட்டன. ஜார்கண்ட் எம்.பி.க்களுக்கு லஞ்சம் கொடுத்த வழக்கு, சுக்ராம் வீட்டில் பல கோடி ரூபாய் பிடிபட்ட வழக்கு ஆகியவற்றில் காங்கிரசின் பொருளாளர் என்கிற முறையில் சீத்தாராம் கேசரியும் குற்றவாளி ஆகும் நிலை; அதைவிட முக்கியமாக வரம்புக்கு மீறிய சொத்து மற்றும் அவரது மருத்துவர் தன்வர் கொலை வழக்கிலும் கேசரி சிக்கும் நிலை.

அதேசமயம் ஒரு தலைமை பதவியை இழந்தாலும் காங்கிரசுக் கட்சிக்குள் குழுவாக இயங்கும் நரசிம்மராவ் மீதும், அவரது மகன் மீதும் உள்ள நான்கு கிரிமினல் வழக்குகளில் தேவே கவுடா அரசின் அணுகுமுறை வேறுமாதிரி இருந்தது. இந்த வழக்குகளில் இருந்து நரசிம்மராவைத் தப்புவிக்கும் வகையில் மத்தியப் புலனாய்வுத் துறை இயக்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

எதிர்தரப்பில் சிலரும், நீதித் துறையில் சிலரும் மேற்கொண்ட ஓரளவு உறுதியான நிலை காரணமாக நரசிம்ம ராவ் கும்பலால் இன்னமும் தப்பிக்க முடியவில்லை. *சீத்தாராம்* கேசரி காங்கிரசின் தலைமைக்கு வந்த பின்னரும் நரசிம்மராவுடன் தேவே கௌடா நெருக்கமான உறவைத் தொடர்ந்தார். சிறுபான்மை அரசை ஐந்தாண்டுகள் நடத்திய அவரது கொள்கையை, அவரது வழியிலேயே கடைப்பிடிக்க எத்தனித்தார். காங்கிரசின் ஒரு பிரிவினர் மீது வழக்குகளைத் தீவிரமாக நடத்துவதாக மிரட்டிப் பணிய வைப்பது. இன்னொரு பிரிவினர் மீதான வழக்குகளில் நீக்குப்போக்காக நடந்து, அவசியப்படும் போது காங்கிரசைப் பிளந்து தனது ஐக்கிய முன்னணியில் சேர்த்துக் கொள்வது என்ற கொள்கையை கௌடா கடைபிடித்தார். இதற்காக சிவசேனா தலைவர் பால் தாக்கரே, நடிகர் அமிதாப் பச்சன், தரகு முதலாளிகள் அம்பானி, விஜய் மல்லையா, காங்கிரசு சகுனி நரசிம்ம ராவ் வரை பலருடனும் இரகசிய உறவு வைத்திருந்தார்.

எல்லாவற்றிலும் முக்கியமாக போஃபர்ஸ் பீரங்கி பேர வழக்கில் ராஜீவ் விசுவாசிகளை உருட்டி மிரட்டுவதற்கான ஆயுதம் கௌடா கையில் சிக்கியது. அதன் வழக்கு விசாரணைக் கெடு முடியும் தருணம் தொடங்கியது. மேற்கண்ட பல வழக்குகளை, முக்கியமாக போஃபர்ஸ் பீரங்கி பேர வழக்கை முடக்கி வைக்கவேண்டி அவசர நடவடிக்கை எடுத்து கௌடா அரசைக் கவிழ்த்து மூப்பனார் போன்ற காங்கிரசு, ராஜீவ் - சோனியா விசுவாசியின் பொம்மை ஆட்சியை நிறுவுவதற்கான சதியில் காங்கிரசு இறங்கியது. *சீத்தாராம்* கேசரி பிரதமராகும் முயற்சி அவரது தனிப்பட்ட பேராசையாக இருக்கலாம். தேவே கௌடா - நரசிம்ம ராவ் கும்பலை அடக்கி, காங்கிரசும் பங்கேற்கும் ஒரு கைப்பாவை அரசை நிறுவிக் கொள்வதுதான் அவர்களுடைய இலக்காக இருந்தது. அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுவிட்டது என்றே கருதலாம்.

ஏப்ரல் இறுதியில் போஃபர்ஸ் பீரங்கி பேர ஊழல் விசாரணையை முடித்துவிடப் போவதாக சி.பி.ஐ. கெடு வைத்திருந்தது. சமீபத்திய ஆட்சிக் கவிழ்ப்புக் கூத்தில் அது கிடப்பில் போடப்பட்டது. காங்கிரசின் தயவைப் பெற்று குஜ்ரால் பிரதமரானதும் வந்த முதல் அறிவிப்பு: அந்த ''வழக்கு விசாரணையில் இந்தியப் பகுதி மட்டுமே முடிந்துள்ளது; வெளிநாடுகளில் விசாரணை தொடங்கி முடிய பல மாதங்களாகும்.''

ஆனால் மறுவார்ப்பு செய்யப்பட்ட ஐக்கிய முன்னணி அரசை கொஞ்ச நாள்கூட நிம்மதியாக தொடர விடமாட்டோம் என்று தேவே கௌடா - நரசிம்மராவ் கும்பலும் பாரதீய ஜனதாவும் அரசு எந்திரத்தில் உள்ள அவர்களது ஆட்கள் மூலம் கைவரிசை காட்டத் துவங்கி விட்டனர். இவ்வளவு நாள் கௌடா தூண்டுதலின்பேரில் பீகார் முதல்வர் லல்லு பிரசாத் யாதவுக்கு அரணாக நின்ற சி.பி.ஐ. இயக்குநர் ஜோகிந்தர் சிங், எதிராக மாறி பீகார் மாட்டுத் தீவன ஊழல் வழக்கை முடுக்கிவிட்டு ஐ.மு. அரசுக்கும் ஆளும் ஜனதா தளத்திற்கும் தலைவலியை ஏற்படுத்தி விட்டார்.

கௌடா அரசைக் கவிழ்ப்பதென்று *சீத்தாராம்* கேசரி அறிவித்தவுடனே ''தனக்கு இரண்டு கண்களும் போனாலும் பரவாயில்லை, எதிரிக்கு ஒரு கண்ணாவது போக வேண்டும்'' என்கிற முறையில் கௌடா செயல்படத் தொடங்கிவிட்டார். கேசரி கும்பலுடன் சமரசம் செய்து கொண்டு தேர்தலைத் தவிர்க்கும் முகமாக, பிரதமர் பதவியையும், பிறகு ஐ.மு. நாடாளுமன்றத் தலைமைப் பதவியையும் கைவிடும்படி கூட்டணிக் கட்சிகள் கோரியதை ஏற்க மறுத்து முரண்டு பிடித்தார். நரசிம்ம ராவுடன் சேர்ந்து, சரத் பவாரை இழுத்து காங்கிரசைப் பிளவுபடுத்தி பதவியைத் தக்க வைத்துக் கொள்ள கடைசிவரை முயன்றார். நாடாளுமன்றத்தில் குழாயடி கூச்சல் போட்டார். தேர்தலைச் சந்திக்கத் தயார் என்று சவடால் அடித்தார். இவையும், கோடிக்கணக்கில் செலவுசெய்து நடத்திய யாகங்களும் சிறப்புப் பூசைகளும் வேறு எதுவும் கௌடாவின் பதவியைக் காத்திட



வில்லை.

தேவே கௌடாவைக் கைகழுவி விட்டு காங்கிரசுக்கு ஏற்புடைய வேறொருவரைத் தேர்ந்தெடுப்பது என்று பிற ஐ.மு. கட்சிகள் முடிவு செய்த பின்னரும் நாட்டின் மிகப் பெரிய அரசியல் தரகர் சுர்ஜீத் சிங் தலைமையிலான இடதுசாரி முன்னணி அவரைக் கைவிட மறுத்து சண்டித்தனம் செய்தது. பிறகு, வட நாட்டைச் சேர்ந்த, மதச் சார்பற்ற ஒரு பிரதமரை முன்னிறுத்துவது அடுத்த தேர்தலைச் சந்திப்பதற்கு அவசியமாக இருக்கும் என்கின்ற ''சாணக்கிய'' அரசியல் தந்திர அடிப்படையில் முலயம் சிங் யாதவை தனது தெரிவாக இடது முன்னணி நிறுத்தியது. ''புரட்சியும் இல்லை, ஒரு புடலங்காயும் இல்லை'' என்று நாடாளுமன்ற சகதிக்குள் எவ்வளவு தூரம் இ.மு. மூழ்கிப் போயுள்ளது என்பதை நடந்து முடிந்த ஆட்சிக் கவிழ்ப்பும் புதிய ஆட்சி அமைப்பும் காட்டிவிட்டது.

''பிரதமர் பதவிக்கு எந்தத் தகுதியும் தேவையில்லை, யார் வேண்டுமானாலும் வரலாம்'' என்கிற பாணியில் பொம்மை, மூப்பனார், லல்லு, முலயம், பல்வான், சரத் யாதவ் போன்றவர்கள் களத்தில் குதித்து குட்டையைக் குழப்பியபோது நாடே நாறியது. நம் பிக்கை வாக்கெடுப்புக்கான நாடாளுமன்ற விவாதங்களின்போது கொள்கை - கோட்பாடு ஏதுமின்றி தனிப்பட்ட வாய்ச் சண்டை நடத்தி சாக்கடையை கிளறி விட்டனர். இந்த இலட்சணத்தில், ஐ.மு. அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்வதாக அரசுத் தலைவர் சர்மாவிடம் கேசரி கொடுத்த கடிதத்தை முதலில் திரும்பப் பெறுவது; முலயம் சிங்கை பிரதமராக்காவிட்டாலும் காங்கிரசு பினாமி மூப்பனார் பிரதமராவதைத் தடுத்தது; தமது பழைய சகபாடியான குஜ்ராலைப் பிரதமராக்கியது ஆகியவை தமது சாதனைகள் என்று இடது முன்னணி பீற்றிக் கொள்கிறது.

ஆனால், ஐக்கிய முன்னணி அரசின் குடுமியை கேசரி கும்பல் வலுவாகப் பிடித்துக் கொண்டுவிட்டது என்பதுதான் உண்மை. தனது நம்பகமான விசுவாசியைப் பிரதமராக்கி, கிரிமினல் குற்ற வழக்குகளை கிடப்பில்போட வைத்துவிட்டது. நேரடியாக அரசில் பங்கேற்க முயலுவதோடு அரசை வழி நடத்திச் செல்வதற்கு ஐ.மு. - காங்கிரசு கூட்டுக் கமிட்டி அமைப்பதை உறுதிப்படுத்திக் கொண்டது. வரும் அரசுத் தலைவர், துணைத் தலைவர் தேர்தலில் தனது விசுவாசியைக் கொண்டு வருவதையும் நிச்சயமாக்கிவிட்டது. இவற்றோடு உலகமயமாக்கல் - தாராளமயமாக்கல் - தனியார்மயமாக்கல் கொள்கையையே இந்த அரசும் பின்பற்றும்போது ஐ.மு. அரசு என்பதே காங்கிரசின் கைப்பாவையாகிப் போனது என்றுதான் பொருள்.

காங்கிரசு மட்டுமல்ல 15, 20 எம்.பி.க்களைக் கொண்டுள்ள எந்தவொரு கட்சியும், கும்பலும் இந்த ஆட்சியை உருட்டி, மிரட்டிக் காரியத்தைச் சாதித்துக்கொள்ள முடியும். இந்த நிலை நமது அரசியல் அமைப்பின் ஓட்டாண்டித்தனத்தைக் காட்டவில்லை; அரசியல் கட்சிகள், அவற்றின் தலைவர்களின் சீரழிவைத்தான் காட்டுகிறது என்று ''ஜனநாயகக் காவலர்கள்'' வக்காலத்து வாங்குகின்றனர். நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு என்பது ஓட்டுப் பொறுக்கி அரசியல் கட்சிகளையும் கொண்டதுதான். அவற்றின் மூலமாகத்தான் மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு ''ஜனநாயகம்'' எனப்படுவதே செயல்படுகிறது. இந்த அங்கம் சீரழிந்து விட்டது என்றால் அப்புறம் ஜனநாயகம் என்பதே கேலிக் கூத்து என்றுதானே கொள்ள வேண்டும்? தவிரவும், இந்த ஓட்டுப் பொறுக்கித் தலைவர்களுடன் சி.பி.ஐ. இயக்குநர், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் முதல் எல்லா மட்ட அதிகாரிகளும் கூட்டுச் சேர்ந்தே இயங்குகின்றனர். மக்கள் உணர்வுகள், தேவைகளைக் கொஞ்சமும் மதியாத அதிகார வர்க்கப் பாணியில் இயங்கும் மன்மோகன் சிங், சிதம்பரம், குஜ்ரால் போன்ற ஏகாதிபத்தி விசுவாசிகளே நிர்வாகத் திறனும், சீலமும் மிக்க தலைவர்களாக நிறுத்தப்படுகின்றனர். ஆனால் அரசியல் சூதாட்டத்தில் செல்லாக் காசுகளாக இவர்கள் தூக்கியெறியப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

## • கௌடா அரசு கவிழ்ப்பு சதியில் மூப்பனார்

## • மூப்பனாருக்குப் பிரதமர் பதவி பார்ப்பன ஏடுகள் பரப்பிய வதந்தியே

சுந்தரப் பெருமாள் கோவில் - கபிஸ்தலம் பண்ணையார் கோவிந்தசாமி கருப்பையா மூப்பனார். ஆயிரம் வேலி நிலத்துக்கு — 5000 ஏக்கர் நிலத்துக்கு — சொந்தக்காரர். சாணிப்பாலும் சவுக்கடியுமாக பண்ணைக் கூலிகளுக்கு பாடம் புகட்டிய பரம்பரை மிராசுதாரர் அவர். நாட்டின் பிரதமராக இருந்த வாய்ப்பு கடைசி நேரத்தில் கை நழுவிப் போய்விட்டது; இல்லை, இல்லை தட்டிப் பறித்துவிட்டார்கள் துரோகிகள் என்று ஆத்திரத்தில் சீறுகிறார் கோபாவேசத்தில் பொங்கி எழுகிறார்கள் அவரது தொண்டர்கள். முறுக்கி முறுக்கி எழுதுகின்றன, பார்ப்பனப் பத்திரிக்கைகள்.

"மூப்பனார் என்கிற தமிழன், இந்த நாட்டின் பிரதமர் ஆவதை இன்னொரு தமிழனாகிய கருணாநிதியால் சகித்துக் கொள்ள முடியவில்லை. கருணாநிதியும், அவரது மருமகன் முரசொலி மாறனும் சதி செய்து, துரோகம் செய்து ஒரு தமிழன் பிரதமராவதைக் கெடுத்து விட்டார்கள். கருணாநிதியைத் தமிழ்நாட்டின் முதல்வராக்கினார் மூப்பனார். ஆனால் மூப்பனாரின் முதுகில் குத்தி, நம்பிக்கை துரோகம் செய்து, திராவிடக் கட்சிக்காரர்களின் புத்தியைக் காட்டிவிட்டார்கள்" என்று ஆவேசப்படுகிறது, "திமிர்த் தமிழர்" கும்பல்.

தி.மு.க. - த.மா.கா கூட்டணியை உடைத்து அரசியல் ஆதாயம் தேடும் நோக்கத்தோடு இந்தப் பிரச்சினையை மீண்டும் மீண்டும் விசிறி விடுகிறது சோ, சு.சாமி, ஜெயலலிதா மற்றும் ஜூ.வி., தமிழன் எக்ஸ்பிரஸ் அடங்கிய பார்ப்பனக்’கூட்டம்.

மூப்பனாரைத் தமிழ்நாட்டின் முதல்வராக்குவது என்கிற கனவோடு திட்டமிட்டுப் பிரச்சாரம் செய்யும் அதே பார்ப்பனக் கும்பல்தான், அவர் பிரதமர் ஆகிவிடும் வாய்ப்பிருப்பதாக வதந்தியையும் பரப்பி, இப்போது "தமிழனுக்கு துரோகம்" என்கிற நச்சு அரசியலையும் விதைத்திருக்கிறது. இராஜாஜிக்குப் பிறகு ஜெயலலிதா முதல்வரானதும் "இது நம்மவாள் ஆட்சி" என்று உச்சி மோந்து வரவேற்றனர், பார்ப்பனர். அதுவும் வீழ்ந்தபின், மீண்டும் ஒரு பார்ப்பன முதல்வரை உருவாக்காவிட்டாலும் காமராஜர் - பக்தவச்சலம் போல, எம்.ஜி.ஆரைப் போல பார்ப்பனீய தாசராக மூப்பனார் இருப்பார் என்று அவர்கள் நம்புகின்றனர். எனவேதான் காமராஜர் ஆட்சியை மீண்டும் கொண்டுவரும் தியாகசீலர், அப்பழுக்கற்றவர், தன்னலமற்றவர், பதவியை நாடாதவர், அரசியல் ஒழுக்கமும் கண்ணியமும் மிகுந்த தேசியவாதி என்றெல்லாம் புளுகி வருகின்றனர்.

மூப்பனார் அப்பழுக்கற்ற, தியாக சீலர் என்பது முதலாவது புளுகு. அரசுடைமை வங்கியாகிய இந்தியன் வங்கிக்குத் தனது கூட்டாளியைத் தலைவராகவும் நிர்வாக இயக்குநராகவும் வைத்து, விதிகளுக்குப் புறம்பாக அவரது பதவிக் காலத்தை மீண்டும் மீண்டும் நீட்டிக்க வைத்து, தனது கட்சிக் கும்பல் 1400 கோடி ரூபாய் வரை சுருட்டிக் கொள்ள ஏற்பாடு செய்தவர். இதிலும் போஃபர்ஸ் பீரங்கி பேர ஊழல் வரை இந்திரா, ராஜீவ், நரசிம்மராவ் நடத்திய பகற் கொள்ளை விவகாரங்களில் எல்லாம் அவர்களை விசுவாசமாக ஆதரித்தவர்.

காங்கிரசில் இருந்து பிரிந்து வந்தபோதும் அதன் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விடாமல் பிடித்துக் கொண்டுள்ளவரை பதவியை நாடாதவர் என்பதே புளுகுதான். காமராஜர் சமாதியின் கல்லறை மண் காய்வதற்கு முன்பே அவரது (ஸ்தாபன) காங்கிரசு கட்சியை இந்திரா காங்கிரசுடன் இணைத்துக் கொண்டு, அதன் தமிழ்நாட்டுத் தலைவராகி, அவசர நிலையின் போது அதிகாரபூர்வமற்ற முதல் மந்திரியாக ஆட்டம் போட்டவர். அதன்பிறகு அனைத்திந்திய கட்சிப் பொதுச் செயலாளராகவும், தமிழ்நாட்டுக் கட்சித் தலைவராகவும் பதவி வகித்து வருகிறார். இப்போதும் தமிழ்நாட்டில் முறையான கட்சித் தேர்தல்களை நடத்தாது தனது விசுவாசிகளின் பெயர்களடங்கிய சீட்டுக் கொடுத்து அவர்களையே தேர்ந்தெடுக்க வைத்து, அவர்கள் வாக்களிக்கத் தானே கட்சித் தலைவரானார். புறக்கடை வழியாகவே அதிகாரம் செலுத்தும் மூப்பனாரைப் பற்றி, "தென்னிந்தியாவைச் சேர்ந்த வீட்டின் பின்கட்டு அரசியல் தரகர்" என்று மிகச் சரியாகவே பி.பி.சி. வர்ணித்தது. இந்திரா, ராஜீவ், நரசிம்மராவின் தூதுவராகப் பல மாநிலங்களுக்குப் போய் தரகுவேலை பார்த்ததுதான் அவரது அரசியல் அனுபவம்.

மூப்பனாரும் சரி, பா.ம.க. ராமதாசும் சரி தமக்கு எந்தப் பதவியும் வேண்டாம் என்று சொல்வதே பம்மாத்துதான். தனக்கு பதவி தரும் தகுதி யாருக்குமில்லை; தானே பிறருக்குப் பதவிப் பிச்சை போடுபவர் என்கிற பண்ணையார் முறுக்குதான் இவர்களிடம் உள்ளது. இதன் மூலம் எல்லோருக்குமேலே நின்று கட்சியையே ஆட்டுவிக்கும் பெரிய பதவியை ஆயுட்காலத்துக்கும் வைத்திருப்பது தான் இவர்களது போக்காக இருப்பதைப் பார்க்கிறோம். அணிகளிடமும், சக கட்சிப் பிரமுகர்களிடமும் கொஞ்சமும் சகிப்புத் தன்மையில்லாமல் ஆணவத்துடன் இவர்கள் நடப்பதே இதற்குச் சான்றாக உள்ளது.

மூப்பனாருக்குப் பிரதமர் பதவி என்பதே பார்ப்பன அரசியல் பிரமுகர்களும், பத்திரிகைகளும் குறிப்பாக சோ, ஜூனியர் விகடன் போன்றவை உருவாக்கி, ஊதிப் பெருக்கியதுதான். தேவ கொளடாவைப் பிரதமராக்கியபோது பத்தோடு பதினொன்றாக மூப்பனார் பெயரும் முன் மொழியப்பட்டது. அதோடு விட்டுவிடாது "அடுத்த பிரதமர் மூப்பனார்" "தேவ கௌடா த.மா.கா. உறவில் விரிசல் - மூப்பனாரைப் பிரதமராக்க காங்கிரசு முயற்சி?" "மூப்பனாரைத் தேடி மீண்டும் பிரதமர் பதவி?" என்று கடந்த ஆண்டு நவம்பரிலேயே ஜூனியர் விகடன் அட்டைப் படக் கட்டுரை எழுதியது. "த.மா.கா. தலைவர் மூப்பனாரைக் காங்கிரசில் சேர்த்து பிரதமராக்க காங்கிரசு முயற்சிக்கிறது. காங்கிரசில் இருந்து வெளியேறி மீண்டும் இணைந்த சிந்தியா, திவாரி, அர்ஜூன் சிங் போன்ற தலைவர்களும் கேசரி, தவான், கருணாகரன் போன்ற காரியக் கமிட்டித் தலைவர்களும் இதையே விரும்புகின்றனர். மூப்பனாரும் இதற்குத் தயார்" என்று அப்போதே எழுதியது.

தேவ கௌடா அரசை காங்கிரசு கவிழ்க்கும் வரையும் அதன் பின்னரும் பலமுறை இப்படியே எழுதி வந்தன பிற பார்ப்பன ஏடுகளும். "பார்லிமெண்டின் பட்ஜெட் கூட்டத் தொடருக்குப்பின் தேவ கௌடாவைப் பிரதமர் பதவியிலிருந்து இறக்கி விட்டு மூப்பனார் தலைமையில் புதிய ஐக்கிய முன்னணி அரசை நிறுவ காங்கிரசு முயற்சி செய்கிறது என்பது வெட்டிப் பேச்சல்ல. அது சீரியசான முயற்சிதான் என்பதை காங்கிரசு வட்டாரங்கள் ஒப்புக் கொள்கின்றன" என்று மார்ச்சு முதல் வாரத்தில் ஜூ.வி. எழுதியது.

ஆக, கௌடா ஆட்சியைக் கவிழ்த்து மூப்பனாரைப் பிரதமராக்குவது என்பதுதான் காங்கிரசின் திட்டம். இதற்கு மூப்பனார் சம்மதமும் இருந்தது என்பதுதான் உண்மை. "மூப்பனாரும் காங்கிரசுக்காரர்தான்; மூப்பனார் பிரதமர் ஆவதை கேசரியும் வரவேற்றார். மூப்பனாருக்கும் - கேசரிக்கும் உள்ள நெருக்கம் நரசிம்மராவுக்கும் - கௌடாவுக்கும் இருந்த நெருக்கம் போன்றது. கேசரியும் மூப்பனாரும் சந்தித்துப் பேசினார்கள். முதலில் நீங்கள் (கௌடா அரசுக்கு) ஆதரவைத் திரும்பப் பெறுங்கள். அதன் பிறகு என்னிடம் பேசுங்கள் என்று கேசரியிடம் மூப்பனார் சொன்னார்" என்று காங்கிரசு ஆதரவு ஏடான 'சண்டே' எழுதியுள்ளது.

"சரியான சமயத்தில் - காங்கிரசுக்கு உதவி செய்வோம் என்று மூப்பனார் போன்றவர்கள் அளித்த வாக்குறுதியை நம்பித்தான் கேசரி, கௌடா ஆட்சியைக் கவிழ்க்க - ஆதரவைத் திரும்பப் பெறும் கடிதத்தை கொடுத்தார் என்று காங்கிரசு எம்.பி.க்கள் புரிந்து கொண்டனர்" என்று காங்கிரசார் நம்பும் ஃபிரண்ட் லைன் எழுதியது.

"மூப்பனாரின் அனுமதியில்லாமல் கேசரி இப்படி ஆதரவை வாபஸ் வாங்கியிருக்க மாட்டார் என்று காங்கிரசுத் தலைவர் ஒருவர் நம்மிடம் தெரிவித்தார்" என்று



படிப்பகம்

www.padippakam.com

ஜூ.வி. எழுதியுள்ளது. ''ஆதரவு வாபஸ் விஷயம் மூப்பனாரை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை! வழக்கம்போல ஜாலி மூடில் இருந்தார்!'' என்றும், ''சீத்தாராம் கேசரிக்கு ஜனாதிபதி பதவி தரலாம், கௌடா அல்லாத ஒருவர் பிரதமரானால், காங்கிரசு ஆதரவு நீடிக்கும் என்ற திசையில் ப. சிதம்பரம், சரத்பவார், மூப்பனார் ஆகியோர் நள்ளிரவில் சந்தித்து ரகசியப் பேச்சு வார்த்தை நடத்தினார்கள்'' என்றும் ''கேசரி கிட்டத்தட்ட தினமும் மூப்பனாருடன் பேசிக் கொண்டிருக்கிறார் என்ற செய்தி, உளவுத்துறை மூலம் பிரதமருக்குக் கிடைத்தது'' என்றும் ஜூ.வி. எழுதியுள்ளது.

இறுதியாக, கௌடா அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் தோற்றதும் நாடாளுமன்ற மத்தியக் கூட்டத்தில் மூப்பனாரைப் பார்த்ததும் ''ஜெய்! ஜெய்! (வெற்றி! வெற்றி!)'' என்று எக்காளத்தோடு கூச்சலிட்டார், கேசரி என்று காங்கிரசு ஆதரவு ஏடான, ''தி வீக்'' எழுதியுள்ளது. ''மூப்பனார்தான் பிரதமர் ஆகப் போகிறார் என்ற நம்பிக்கையில், ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவைத் தொடருவதாகக் கூறும் கடிதத்தை தமது விருப்பம் போல் எழுதித் தரும்படி, சிதம்பரத்திடம் தான் கேசரி கேட்டு வாங்கினார்'' என்று ஜூ.வி. எழுதுகிறது.

ஆக, கௌடா அரசைக் கவிழ்ப்பது, மூப்பனாரைப் பிரதமராக்குவது என்கிற சதித்திட்டம் துவங்கியதில் இருந்தே மூப்பனார் கும்பல் அதில் பங்கு பெற்றிருக்கிறது என்பதுதான் உண்மை. எனவே, தானே பங்கேற்கும் ஐக்கிய முன்னணி அரசைக் கவிழ்த்து விடும் சதிச் செயலில், துரோகத்தில் ஈடுபட்ட மூப்பனார் கும்பல் வேறு எவரையும் பார்த்து துரோகம் செய்துவிட்டதாகக் கூச்சலிடுவது, நரித்தனமான பிரச்சாரம்தான். ஐக்கிய முன்னணிக் கட்சிகளான சி.பி.எம், தி.மு.க. ஆகியவை, குறிப்பாக கருணாநிதியும் மாறனும் துரோகம் செய்து விட்டனர். எனவே தி.மு.க.வுடனான உறவை த.மா.கா. துண்டித்துக் கொள்ள வேண்டும் என்று பார்ப்பன அரசியல்வாதிகளான சு.சாமி, ஜெயாவும் பத்திரிக்கைகளும் விசிறி விடுவதற்கான காரணம் நாம் அறிந்ததே. சி.பி.எம். மூப்பனாரை ஆதரிப்பதாகவோ எதிர்ப்பதாகவோ சொல்லவும் இல்லை; அதுவும் பார்ப்பன ஏடுகள் தாமே பரப்பிவிட்ட வதந்திதான். அதே போல தமிழ்நாட்டில் தி.மு.க.வுக்கு மாற்றாக வளர முயலும் த.மா.கா. தலைவர் பிரதமராவதை கருணாநிதி தடுத்திருந்தாலும் அது துரோகமில்லை. முதலாளித்துவ அரசியலில் அது அவசியமானதுதான். ''தமிழ்நாட்டில் காமராஜர் ஆட்சி அமைப்போம்'' என்று மூப்பனார் பேசுவது மட்டும் துரோகமில்லையா? ஏறி வந்த ஏணியையே எட்டி உதைப்பதில்லையா?

மூப்பனார் தன்னலமற்றவர், எந்தப் பதவியையும் நாடாதவர், பதவிகளை வேண்டாமென்று ஒதுக்கியவர், பிரதமர் பதவியும் அவரை நாடி வந்ததுதான், அதற்கும் அவர் ஆதரவு திரட்டாது ஒதுங்கியிருந்ததால்தான் கவிழ்த்துவிட்டார்கள் என்பதும் புளுகுதான். கௌடா அரசைக் கவிழ்ப்பது தொடங்கியவுடன் மூப்பனார் தனது கட்சி எம்.பி.க்கள், எம்.எல்.ஏக்கள், மந்திரிகளை டெல்லியில் முகாமிடச் செய்து சாதி ரீதியாகப் பிரிந்து ஆதரவு திரட்டச் செய்தார் என்பதும் ஜூ.வி. செய்திதான். மூப்பனாரின் சொந்த ஊரிலிருந்து டெல்லியுடன் நேரடி தொலைபேசி தொடர்பை நிரந்தரமாக்கிக் கொண்டு அவ்வப்போது செய்திகளைப் பரப்பியதோடு, கலியாண வீடுபோல வந்தவர்களுக்கெல்லாம் விருந்து வைத்தனர், அவரது குடும்பத்தினர். அவர் நிச்சயம் பிரதமராகி விடுவார் என்று நம்பி, பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ள அவரது குடும்பத்தினரும் துதிபாடிகளும் டெல்லி செல்வதற்கு தனிவிமானம் ஏற்பாடு செய்து, தயார் நிலையில் வைத்திருந்தனர். ஆனால் ஏமாற்றமே முடிவாக, கண்டவர் மீது எரிந்து விழுந்தனர்.




தனக்குப் பிரதமர் பதவி கிடைக்கவில்லை என்பதை வைத்து, ஆத்திரத்தில் தனது கட்சியினர் யாருக்கும் பதவி கூடாது என்கிற முடிவில் ஐ.மு. அரசில் பங்கேற்பதில்லை என மூப்பனார் முடிவு செய்தார். முக்கியமாக தற்போது செல்வாக்குப் பெற்று வரும் சிதம்பரத்தை மட்டம்தட்டி, தன் தயவில்தான் மற்றவர்களுக்குப் பதவி கிடைத்தது என்பதைக் காட்டவே அப்படிச் செய்தார். சிதம்பரமோ மூப்பனார் காலில் விழுந்து தனது விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார். ''ஐ.மு.யிடம் த.மா.கா.வுக்குள்ள விசுவாசத்தைச் சந்தேகித்து விட்டார்கள்; ஆகவே தன்மானம் போய்விட்டது. அரசில் பங்கேற்க மாட்டோம்'' என்று முறுக்கிக் கொண்டார். இது ஏதோ கட்சியின் பிற தலைவர்கள், அணிகளின் முடிவென்றும், ஐ.மு. தலைவர்களின் மறுபரிசீலனைக் கோரிக்கை ஜனநாயகப்படி மற்றவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என்றும் நாடகமாடினார். மூப்பனார் கட்சியில் ''கங்காணிகளும் பண்ணை அடிமைகளும்'' தான் உள்ளனர்; அவர் இட்டதுதான் சட்டம், சொல்வதெல்லாம் ஆணைதான் என்பது எல்லோரும் அறிந்த இரகசியமே! ''இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் மூப்பனாருக்கே'' என்கிற தீர்மானமே இதற்குச் சான்று.

இந்திரா - ராஜீவ் - சோனியா பரம்பரையின் நம்பிக்கையான விசுவாசியாக இருந்து வரும் மூப்பனாரை காங்கிரசின் ஏவலாளாகவே செயல்படுவார் என்று சந்தேகிப்பதிலும் தவறே இல்லை. அந்தப் பரம்பரைக்கு மட்டுமல்ல, நரசிம்மராவுக்கும் கூட நம்பகமான விசுவாசியாக இருந்து ஊழியஞ் செய்து வருபவர்தான். ஜெயலலிதாவுடன் கூட்டு வைப்பது தவிர வேறு எந்தக் கொள்கை கோட்பாட்டில் காங்கிரசிடமிருந்து மூப்பனார் மாறுபடுகிறார்? அவரைப் பிரமதராக்குவது சோனியாவின் பினாமியாகி, போஃபர்ஸ் பீரங்கி பேர ஊழல் முதல் காங்கிரசுக்காரர்களின் எல்லா கிரிமினல் குற்ற வழக்குகளையும் கிடப்பில் போடுவதாகவே முடிந்திருக்கும்.

தமிழன் மானத்தை டெல்லிக்காரனுக்கு அடகு வைப்பதையே அரசியல் பணியாகக் கொண்டிருக்கும் மூப்பனாருக்கு அவ்வப்போது மானப் பிரச்சினைதான் உறுத்தும். இப்போது அவர் திடீரென்றுதான் ''தமிழன்'' என்பதை வேறு கண்டு கொண்டார். தமிழனின் மொழி, இன, பண்பாட்டு உரிமைகளை டெல்லிக்காரன் ஒடுக்குவதற்கு கருங்காலியாக இருந்த ஊழியஞ் செய்பவன்தான் இந்த ''திடீர்த் தமிழன்''. தாய்மொழி தமிழை இழிவு செய்யும் ''திருவையாறு தியாகராசர் ஆராதனை கமிட்டித் தலைவராக'' இருந்து, பார்ப்பனக் கும்பல் கீர்த்தனைகள் பாடும்போது இஞ்சி தின்ற குரங்காக இருப்பவர். அங்கே தமிழின இசை மீட்புப் போராளிகள் புகுந்தபோது போலீசை ஏவி அடித்து நொறுக்கும்படி கூச்சலிட்டவன் தமிழனா? இந்தி மொழித் திணிப்பு, ஈழத் தமிழர் படுகொலை, காவிரி நதிநீர் உரிமைப் பறிப்பு ஆகிய எதிலுமே தமிழர் நலனுக்குக் குரல் கொடுக்காதவன் தமிழனா? தமிழன் என்ற பெயரால் இந்தத் தமிழன துரோகி ஒரு வேளை பிரதமராகி இருந்தால் அது தமிழனுக்கு அவமானமாகி போயிருக்கும். அந்த வகையில் தமிழனின் மானம் தப்பியது.

• ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

# ஆந்திராவில் மீண்டும் சாராய வெள்ளம்

'ஒய்யாரக் கொண்டையாம்; உள்ளே இருக்குதாம் ஈறும், பேனும்!' என்பதைப் போல ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் சாயம் வெளுக்கிறது. என்.டி.ஆரின் வாரிசு தான் மட்டுமே என வரிந்து கட்டி நின்றார். ஆனால் என்.டி.ஆரின் கவர்ச்சித் திட்டங்களைத் தொடர முடியவில்லை.

ஏழைகளுக்கு கிலோ அரிசி இரண்டு ரூபாய் இருந்ததை ரூ. 3.50 ஆக உயர்த்திவிட்டார். விவசாயத்திற்கான மின்சாரம் யூனிட் ஒன்றுக்கு 3 பைசாவிலிருந்து 16 பைசாவிற்கு உயர்த்தி விட்டார்.

சட்டமன்றத்தில் இது பற்றி பேசும் போது 'அரசு கருவூலம் காலியாகவுள்ளது. மானியங்கள் வழங்குவதைக் குறைக்காமல் எந்தவொரு ஆக்கபூர்வ முன்னேற்ற நடவடிக்கையும் எடுக்க இயலாது' என சந்திரபாபு நாயுடு பேசினார்.

எடுக்கப்படும் ஆக்கபூர்வ நடவடிக்கைகள் பட்டியல் இதோ:

- இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு மது பானங்கள் விற்க, தயாரிக்க அனுமதியளிப்பது.
- 39 பொதுத்துறை நிறுவனங்களை இழுத்து மூடுவது. இதில் சிலவற்றை மறுகட்டமைப்பு செய்வது. இதன் மூலம் சுமார் 1.5 லட்சம் தொழிலாளர்களை வீதிக்கு விரட்டியடிப்பது.
- மின் உற்பத்தி அதிகரிப்பதற்கான எந்த ஆக்கபூர்வ திட்டமுமில்லை.
- இதனால் ஆந்திராவில் புதிய தொழில் தொடங்க யாரும் முன்வரவில்லை. ஏற்கனவே தொடங்க உத்தேசித்த சிலரும் வேறு மாநிலங்களுக்கு சென்று விட்டனர்.
- முதல்வர், மந்திரிகள், எம்.பி. - எம்.எல்.ஏ.க்கள், அதிகாரிகள் என சகலரும் லஞ்ச ஊழலில் ஊறித் திளைக்கின்றனர். மக்களின் வரிப்பணம் சூறையாடப்படும்போது கருவூலம் காலியாகாமல் என்னவாகும்?

ஆந்திராவில் பெருமளவில் பெண்கள் திரண்டு போராடி வெற்றி பெற்றது சாராய விற்பனையை ஒழித்து கட்டியதில்தான். சீமைச் சாராயக் கடைகளை மூட மறுத்த காங்கிரசை வீட்டுக்கு அனுப்பினர். தெலுங்கு தேசம் கட்சி ஆட்சிக்கு வந்ததும் தேர்தலில் வாக்குறுதி அளித்ததைப் போல முழுமையான மது விலக்கை நடைமுறைப் படுத்தினர். அப்போது நிதி மந்திரியாக இருந்த இதே சந்திரபாபு நாயுடு என்ன விலை கொடுக்க வேண்டியிருப்பினும் முழுமையான மது விலக்கைத் தளர்த்த மாட்டோம் என்றவர் தான்.

இன்றோ கருவூலம் காலியாகிவிட்டது என்பதைக் கூறியே சீமைச் சாராயக் கடைகளுக்கும், உற்பத்திக்கும் அனுமதி அளித்துள்ளார். இதன்மூலம் அரசுக்கு வரும் வருமானம் ரூ. 500 கோடி மட்டும்தான். இதைக் கொண்டு பற்றாக் குறையை ஈடுசெய்ய முடியாது. ஆக்கபூர்வமாக ஏதும் செய்ய இயலாது என்பதே உண்மை.

தவிர, மதுவிலக்கு சட்ட திருத்தம் கொண்டு வந்த போது மதுவிலக்கை நடைமுறைப்படுத்த மக்கள் ஒத்துழைக்கவில்லை என்று குற்றம் சாட்டினார். ஆனால் மதுவிலக்கு கமிஷனர் ஜஸத் ஹூசைனோ ஆளும் கட்சி மந்திரிகளும், எம்.பி. - எம்.எல்.ஏ.க்களும் கள்ளச் சாராயத் தொழிலில் கொடி கட்டிப் பறப்பதை அம்பலப்படுத்துகிறார். முதல்வரின் சகோதரரும் எம்.எல்.ஏ.வுமான ராமமூர்த்தி நாயுடு மற்றும் மந்திரிகள் ரமேஷ் ரெட்டி, பாலயோகி முதலியோர் கள்ளச்சாராய தாதாக்களாக வளர்ந்திருப்பது ஊரறிந்த உண்மை. முதல்வரோ எதுவும் தெரியாதென நடிக்கிறார்.

தவிர, காங்கிரசார் குற்றம் சாட்டுவதைப் போல பல கோடி ரூபாய் கையூட்டுப் பெற்றுக் கொண்டு சீமைச் சாராயக் கடைகளுக்கு அனுமதி கொடுத்துள்ளார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. தற்போது ஆந்திர உயர் நீதிமன்றம் சாராயக் கடைகள் ஏலம் விட தடை உத்தரவு போட்டுள்ளது.

அடுத்ததாக பொதுத் துறை நிறுவனங்கள் நட்டம், அதனால் மூடப் போவது பற்றிய செய்தி. பொதுத் துறைகள் மூடும்போது அத் தொழிலாளர்களுக்கு மாற்று ஏற்பாடு ஏதுமில்லை. இருப்பவற்றை மூடும் போது தொழிலாளர்கள் கதி என்ன என்பது பற்றி யோசிக்கக் கூட முதல்வருக்கு நேரமில்லை.

ஏனெனில், இவரது குப்பம் தொகுதியைக் கவனிக்கவே முதல்வருக்கு நேரம் சரியாகப் போகிறது. இத்தொகுதிக்கான திட்டங்களை நிறைவேற்ற கோடி கோடியாக செலவிடுகிறார். அத் தொகுதியில் ஒரு விவசாயியின் சராசரி வருட வருமானம் ரூ. 18,000/- ஆக உயர்ந்துள்ளது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இங்கு பல்வேறு நலத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறதா எனக் கண்காணிக்கவே இரு ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். கேட்டால் இது 'மாதிரி' தொகுதி என சப்பைக் கட்டு வேறு. முதல்வரைப் பொறுத்தவரை குப்பம் தொகுதி மட்டுமே ஆந்திரா போலும்.

ஆந்திர முதல்வர் வீட்டு மனை வியாபாரத்தில் கொழிக்கிறார். ஹைதராபாத் நகரைச் சுற்றிலும், பெங்களூர் உட்பட கர்நாடகாவின் பல பகுதிகளிலும் வீட்டு மனைகள் வாங்கிக் குவித்துள்ளார்.

இதற்கும் சப்பைக் கட்டாக 'ஹெரிடேஜ் ஃபுட்ஸ் லிட்.' என்ற கம்பெனி உரிமையாளராயிருக்கிறார் நாயுடு என்கின்றனர். சந்திரபாபு முதல்வரானபின் தனது நிறுவனத்தின் சேர்மன் பதவியிலிருந்து விலகிவிட்டார். அதன்பின் மூன்று இடங்களில் இந்நிறுவனம் பால் பதனிடும் ஆலைகளைத் துவங்கியுள்ளது. தவிர ரூ. 120 கோடி முதலீட்டில் மூன்று சர்க்கரை ஆலைகளைத் துவங்க அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளது. அந்த அனுமதி வழங்க தேவகவுடா சம்மதம் தராதது தான் தேவகவுடா - சந்திரபாபு இடையே முரண்பாடு வரக் காரணம். ஆனால் அலமாட்டி அணை கட்டும் பிரச்சினையில்தான் பிரதமருடன் கோபம் கொண்டார் என காதில் பூச்சுற்றுகின்றன பத்திரிகைகள்.

'பெண் குழந்தை' திட்டம், 'இளைஞர் திட்டம்' என மேலும் பல கவர்ச்சித் திட்டங்கள் மக்களிடையே எடுபடவில்லை. எனவே சரிந்து வரும் தனது செல்வாக்கை மீட்க என்ன வழி என திணறிக் கொண்டிருந்தபோதுதான் கேசரியின் ஐக்கிய முன்னணி ஆதரவு வாபஸ் என்ற குண்டு வெடித்தது. இதை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு பிரதமர்களை உருவாக்கும் தேசியத் தலைவர் என்று ஒளிவட்டம் போட்டுக் கொண்டார்.

ஆந்திராவில் மோதல் என்ற பெயரில் படுகொலைகளை நடத்தி புரட்சியாளர்களைக் கொன்றொழிக்கும் நடவடிக்கைகளைப் போல தனது அரசியல் எதிரிகளையும் களை எடுத்து வருகிறார். ஆனால் இதனாலெல்லாம் சரிந்து வரும் ஆதரவைத் தூக்கி நிறுத்த முடியாது. 'சாராய' நாத்தம் குடலைப் புரட்டுகையில் உண்மை உலா வந்துவிடுகிறது, என்ன செய்ய?

• நாகராசு

நாயுடுவின் சாராயக் கொள்ளையை எதிர்த்து ஆந்திர சட்டசபை முன்பு மகளிர் அமைப்பினர் நடத்திய ஆர்ப்பாட்டம்.





படிப்பகம்

www.padippakam.com

# சாதிக் கலவரங்களில் அரசியல் ரவுடிகள்

தென் மாவட்டங்களில் சாதியக் கலவரம் நீறுபூத்த நெருப்பாக, விட்டுவிட்டு தொடர்ந்துகொண்டுதான் உள்ளது. ஏப்ரல் 13-ஆம் தேதி கோவில்பட்டியில் தொடங்கிய கலவரம் நெல்லை, சிதம்பரனார் மாவட்டங்களில் பெரும் பதற்றத்தையும், பீதியையும் கிளப்பியது.

அடங்கிக் கிடந்த சாதியினர் அடிமைகளாக இல்லாமல் சுதந்திரமாகச் செயல்படுவதைக் காணச் சகியாத ஆதிக்க சாதியினர்தான் கலவரத்தை நடத்துபவர்களாக உள்ளனர். இடையில் சாதி வெறியர்களும், சமூக விரோதிகளும் கலவரத்தைச் சாதகமாக்கி ஆதாயம் தேடுகின்றனர்.

கோவில்பட்டி செண்பகவல்லி கோவில் திருவிழாவில் ஒன்பதாவது நாளில் தேரோட்டம் நடக்கும். இந்தத் தேருக்கு தடி போட மூப்பன்பட்டியைச் சேர்ந்த ஏழு பள்ளர் குடும்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. அவர்களும் சுழற்சி முறையில் இதைச் செய்து வருகின்றனர்.

இம்முறை தேவேந்திரர் கூட்டமைப்பினர் 'தேரோட்ட நாளன்று மண்டகப்படி உரிமையும், தேரோட்ட உரிமையும் தமக்கே வழங்க வேண்டும்' எனப் பேசி உள்ளனர். அதற்காக உண்ணாவிரதமும் இருந்துள்ளனர். ஆனால் தேருக்கு தடி போடும் குடும்பத்தினர் இதில் கலந்து கொள்ளாது ஒதுங்கியே இருந்தனர்.

பாரம்பரியமாக இவ்விழாவை நடத்தி வந்த எட்டயபுரம் ராஜா, 25 ஆண்டுகளுக்கு முன் பிற சாதியினர் முறைவைத்து ஒவ்வொரு நாளும் விழா நடத்த முறைப்படுத்தியுள்ளார். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மண்டகப்படி உரிமை தராமல் தேருக்கு தடிபோட்டு வழிநடத்தும் அனுமதி மட்டும் வழங்கியுள்ளார்.

அன்றைக்கு அது பிரச்சினையில்லாமலிருந்திருக்கலாம். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் உரிமை கேட்டபின் கோவில் நிர்வாகமும் அரசும் தலையிட்டு பிரச்சினையைப் பேசித் தீர்த்திருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள் தமது உரிமையைக் கூட களப்பலி கொடுத்துத்தானே பெற வேண்டியுள்ளது?

ஒன்பதாவது நாள் மண்டகப்படி நடத்தும் உரிமை உள்ளதாக கூறும் நாயக்கர் சாதியினர், மண்டகப்படி உரிமை கேட்ட தாழ்த்தப்பட்டவர்களின் தடி போடும் அனுமதியையும் பறிப்பது என சாதி ஆதிக்க வெறியுடன் திட்டமிட்டனர். அதற்காக தடி, அருவாள் என ஆயுதங்களைக் குவித்தனர். தேரைத் தள்ளிவிடும் அனுமதியுள்ள குடும்பத்தினர் வந்தபோது திட்டமிட்டபடி தாக்குதல் நடத்தி விரட்டியடித்தனர். போலீசும் நாயக்கர் சாதி வெறியர்களுக்கு ஆதரவாகவே இருந்தது.

தப்பித்து ஓடிய தாழ்த்தப்பட்டவர்கள் காவல் நிலையத்தில் முறையிட்டனர். அதன்பின் பி.டி.ஓ., காவல்துறை உயர் அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர் அனைவரும் வந்து சமாதானம் பேசியுள்ளனர். ஒரு மணி நேரம் நாயக்கர் சாதியினர் தேர் இழுப்பது, அதன்பின் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் தேர் இழுத்து முடித்து தேரை கோயில் குருக்களிடம் ஒப்படைப்பது என முடிவானது.

ஆனால், உயர் அதிகாரிகள் போனதும் நாயக்கர் சாதி வெறியர்கள் மீண்டும் கொலை வெறித் தாக்குதல் நடத்தி தாழ்த்தப்பட்டவர்களை விரட்டியடித்து தேரிழுத்து முடித்தனர்.

தப்பி ஓடிய தாழ்த்தப்பட்டவர்கள் மீண்டும் ஓரணி திரண்டு எதிர்த் தாக்குதல் நடத்தத் தொடங்கினர்.

நாயக்கர் சாதி வெறியர்களுக்கு பக்கபலமாக ஜெய விலாஸ் பேருந்து உரிமையாளர் மூன்று லாரிகளில் அடியாட்களை அனுப்பியும், பணத்தை வாரியிறைத்தும் உதவியுள்ளார். எனவே, கலவரம் உடனே நிற்காமல் ஒரு வாரம் தொடர்ந்துள்ளது. இரு பக்கமும் வீடுகள், கடைகள், சிறு தொழிற்கூடங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. அப்பாவி தாழ்த்தப்பட்ட இளைஞரும் தொழிலாளியுமான மாரியப்பன், நாயக்கர் - தேவர் சாதி வெறியர்களின் கொடுவாளால் கூறுபோடப்பட்டார். இப்படிப்பட்ட கலவரத்தை சந்தித்திராத கோவில்பட்டி செயலற்று திகைத்து நின்றது. சுற்றுவட்டார கிராம மக்களும் பாதிக்கப்பட்டனர். இடையில் சமூக விரோதிகள் கொட்டமடித்தனர்.

☆ ☆ ☆

வைகை வீரன் அழகுமுத்து மாவட்டத்தில் தேனிக்கு 15 கி.மீ. தொலைவிலுள்ளது கண்டமனூர். அங்கு ஆறு மாதத்திற்கு முன் ஒன்றரை அடி உயரமுள்ள தேவர் சிலை சேதப்படுத்தப்பட்டது. அன்று மறியல், கலாட்டா என நடந்து சிலை உடைத்ததாக 5 பேர் கைது செய்யப்பட்டபின் அமைதியானது.

பின் 4 அடி உயர தேவர் சிலை வைத்தபோது சிலை வைக்கக்கூடாது என எதிர்ப்பு வந்தது. போலீசும் சிலை திறக்க அனுமதி தரவில்லை. இந்நிலையில் ஏப்ரல் 24-ஆம் தேதி அனுமதி இன்றியே சிலை திறப்பது என முடிவு செய்து விட்டனர், தேவர் சாதியினர். ஆனால் 23-ஆம் தேதி காலை அந்தச் சிலையையும் யாரோ சேதப்படுத்தவே திரும்ப கலவரம் மூண்டது.

நிலைமையை சமாளிக்க அதிகாரிகள் சிலைக் கமிட்டியினரைக் கூப்பிட்டு "உடைந்த சிலைக்கு பதிலாக வேறு சிலை வைத்துக் கொள்ளுங்கள்..." எனக் கூறியதைப் பிடித்துக் கொண்டு அமைச்சர் ஐ. பெரியசாமி பொறுப்பிலிருந்த ஐந்தடி உயர தேவர் சிலையை அதே பீடத்தில் நிறுவினார்கள்.

"சிலை உடைத்தவர்களை கைது செய்யாமல், புதிய சிலையை வைக்கக்கூடாது..." என ஒரு கோஷ்டி எதிர்த்தது. அதை மீறி 24-இல் சிலை திறக்க ஏற்பாடு செய்யவே, மீண்டும் கலவரம் வெடித்தது. அதன்பின் தேவர்களும், தாழ்த்தப்பட்டவர்

சட்டசபை உறுப்பினர் கிருஷ்ணசாமி கைது செய்யப்பட்டதைக் கண்டித்து நடந்த ரயில் மறியல்.





படிப்பகம்

www.padippakam.com

களும் குண்டுகளை வீசி, தீ வைத்து கலவரத்தை உக்கிரப்படுத்தினர். போலீசு துப்பாக்கி சூட்டில் இருவர் பலியானார்கள். ஆனாலும் நாட்டு வெடிகுண்டு, பெட்ரோல் குண்டுகளை வீசி கலவரம் தணியாதபடி தொடர்ந்து நடத்தினர், சாதி வெறியர்கள்.

ஆண்டிபட்டி அருகிலுள்ள சேக்கிழார் பட்டியில் தேவேந்திரகுல சங்க கொடிமரத்தை யாரோ வெட்டிச் சாய்த்தனர். இதனால் தாழ்த்தப்பட்ட மக்கள் சாலை மறியல் செய்ததோடு, ஆண்டிபட்டி நகரினுள் புகுந்து கலவரம் தொடங்கினர்.

இப்பகுதிகள் முழுவதும் போலீசு குவிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் சேதத்தைப் பார்வையிடச் சென்ற தேவேந்திரகுல கூட்டமைப்பு எம்.எல்.ஏ. டாக்டர் கிருஷ்ணசாமி மே 2-இல் கைது செய்யப்பட்டார். இதனால திரும்பவும், தென் மாவட்டங்கள் முழுவதும் ஆங்காங்கே மறியல், போராட்டம் என பதற்றம் திரும்பிவிட்டது.

கண்டமனூர் பகுதியிலிருந்து பலரும் காலி செய்து வேறிடங்களுக்குச் சென்று கொண்டுள்ளனர்.

☆ ☆ ☆

மதுரை மாநகரின் வில்லாபுரம் பகுதி 59-ஆவது வார்டு கவுன்சிலராக வெற்றி பெற்றவர் சி.பி.எம். கட்சியின் லீலாவதி என்ற நெசவுத் தொழிலாளி. இவர் அப்பகுதியில் மக்கள் சொத்தை சூறையாடி வந்த தி.மு.க. ரவுடிகளுக்கு எதிராக போராடி வந்தார். ஏற்கனவே அந்த ரவுடி கும்பல் தேர்தலில் லீலாவதியிடம் தோற்றுப் போயிருந்தது. தனது மாமூல் வசூலுக்கும் அடாவடிகளுக்கும் தடையாயிருக்கிறாரே என, திட்டமிட்டு காலை 8 மணிக்கு கடைக்குச் சென்றவரை வெட்டிக் கொன்றனர். இதை முன்னின்று செய்தது வில்லாபுரம் வட்ட தி.மு.க. செயலாளர் முத்துராமலிங்கம், அவரது தம்பி அண்ணாதுரை, மைத்துனன் முருகன் மற்றும் சில கிரிமினல் ரவுடிகள்.

சில நாட்கள் கழிந்த பின்னரே போலீசு இவர்களைக் கைது செய்தது. கொலையைக் கண்டித்து மக்கள் கடையடைப்பு செய்தனர். சி.பி.எம். கட்சியினர் கண்டன ஊர்வலம், பொதுக்கூட்டம் நடத்தினர். ஊர்வல முடிவில் கிரிமினல் கும்பலுக்கு பதிலடி தரும் வகையில் அக்கொலைகாரர்களின் வீடுகளும், சொத்துக்களும் அடித்து நொறுக்கப்பட்டன. சி.பி.எம். சங்கரய்யாவோ இதைக் கண்டிப்பதாக அறிக்கை வெளியிட்டுள்ளார்.

கவுன்சிலர் லீலாவதி கொலையைக் கண்டிப்பதாக அவரது சௌராட்டிர சாதியினர் கடையடைப்பு போராட்டம் அறிவித்தனர். லீலாவதி ரவுடிகளுக்கு எதிராக போராடி வந்தபோது இச்சாதி சங்கம் வரவில்லை. சாவுக்குப் பின் சாதி பெயரில் ஆதாயம் தேட களமிறங்கியது. அதேபோல முத்துராமலிங்கம் கும்பல் சார்பாக தேவர் சாதியைச் சேர்ந்த தி.மு.க. துணை மேயர் மிசா பாண்டியன் உட்பட தி.மு.க. ரவுடிகளும் களமிறங்கினர். முதல்வரோ குற்றம் செய்தவர் யாராயிருப்பினும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். ஆனால் அப்போது கொலைகாரன் முத்துராமலிங்கத்தை கட்சியை விட்டு நீக்கவில்லை. கிரிமினல் கும்பலுக்கு தக்க பதிலடி தந்ததும், கருணாநிதி தமது கட்சியினருக்கு கொம்பு சீவி விட்டார்.

இப்போது கிரிமினல் - ரௌடி கும்பலின் கொலை வெறியாட்டம் ஒரு சாதிய மோதலாக நகர்ந்து கொண்டுள்ளது.

☆ ☆ ☆

கோவில்பட்டி சாதிக் கலவரத்தில் நாயக்கர் சாதி ஆதிக்கவாதிகள் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ''பள்ளர்'' சாதியினரை ஒடுக்குவது; அவர்கள் கேள்வி எழுப்பியதற்கே பாரம்பரிய அனுமதியையும் மறுத்து விரட்டியடிப்பது என்று செயல்பட்டுள்ளனர். குறைந்தபட்ச ஜனநாயகம்கூட இன்றி சாதி ஆதிக்க வெறியில் தாக்குதல் நடத்தி ஒடுக்க முனைந்தனர். காவல் துறையிலிருந்து மாவட்ட ஆட்சியர் வரை மேல்சாதி ஆதிக்க வெறியர்களுக்கு ஆதரவாகவே செயல்பட்டுள்ளது.

நடந்து கொண்டிருக்கும் கண்டமனூர் சாதிக் கலவரம் அதன் எல்லை தாண்டி தென் மாவட்டங்கள் முழுதும் மீண்டும் ஒரு தொடர் வன்முறைக்கு இட்டுச் சென்றுள்ளது. ஏற்கனவே 1995 இறுதியில் நடந்த தென்மாவட்ட சாதிக் கலவரங்களுக்கு சிலை உடைப்புதான் தொடக்கமாயிருந்தது. இப்போதும் சிலை உடைப்புதான் தொடக்கமாயுள்ளது. குறிப்பாக, முக்குலத்தோர் சாதியினர் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதாகத்தான் செயல்படுகின்றனர். ஆனால் மாறிவரும் சூழலில் சமூக, அரசியல், பொருளாதாரரீதியாக தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் விடுதலைக்கு நிற்கின்றனர். அதை சில பிழைப்புவாதத் தலைவர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர். சிலை உடைப்பு ஒரு சாக்காக மட்டுமே உள்ளது. அரசியல், பொருளாதார, சமூக அடிப்படையில் நேற்றுவரை அடிமைப்பட்டுக் கிடந்தவர்கள் இன்று தலை நிமிர்வதா என்ற சாதி ஆதிக்கவெறிதான் கலவரத்திற்கான காரணமாக உள்ளது. சிலை உடைப்பு நம்பும்படியாக இல்லை.

மதுரையில் ஏறக்குறைய இதே நிலைதான். சௌராட்டிர சாதியைச் சேர்ந்த பெரும்பான்மையினர் நெசவாளர்களாக, நடுத்தர வர்க்கமாக உள்ளனர். அதில் சிலர் தொழிலதிபர்களாக, பெரும் பணக்காரர்களாக உள்ளனர். முக்குலத்தோர் பிரிவைச் சேர்ந்த கள்ளர், தேவர் முதலியோர் கடும் உழைப்பாளிகளாக - ரிக்ஷா ஓட்டுபவர்களாக, சுமை கூலிகளாக பெரும்பான்மையினர் உள்ளனர். ஆயினும் ஒரு பிரிவினர் அடிதடி, கலாட்டா, அடாவடி என கிரிமினல் நடவடிக்கைகள் இறங்கி, ஒரு புதுவகை ஆதிக்க சக்தியாக மாறி உள்ளனர். தேவர் பிறந்த நாள் ஊர்வலம் வரும்போது ஒரு சிறு கடைகூட திறந்திருக்க விடுவதில்லை என்ற உண்மையே இதற்கு சான்று.

ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகள் இந்த கிரிமினல் ரௌடிகளை தனக்கான அடியாள் கும்பலாக வைத்து திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளாக வளர்ந்து வருகின்றனர். முக்குலத்தோரும் ரியல் எஸ்டேட், கந்து வட்டி, மீட்டர் வட்டி, இன்னும் மாமூல் வசூலிப்பது என முழுக்க முழுக்க கிரிமினல் நடவடிக்கையிலிறங்கி திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளாக பெருகியுள்ளனர். இவர்களின் ஆதிக்கத்தை மீறமுடியாதவர்களாக சௌராட்டிர சாதியினர் உள்ளனர்.

அதேசமயம் சௌராட்டிர சாதியினர் பாரம்பரியமாக காங்கிரசு கட்சியினராக, கம்யூனிச எதிர்ப்பாளராக உள்ளவர்கள்தான். தற்போது மதுரையில் வளர்ந்து வரும் ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணியின் பின்புலமாகவும் உள்ளனர். இதிலும் பலர் காங்கிரசு, பி.ஜே.பி., அதிமுக என கட்சிகளில் சேர்ந்து ஆதிக்கம் செய்ய முயல்கின்றனர். பாலகிருஷ்ணன், அமர்நாத், ராம்பாபு போன்றோர் அப்படி வளர்ந்தவர்கள்தான்.

இப்போது லீலாவதி கொலையில் முக்குலத்தோர் மீண்டும் தமது சாதி ஆதிக்கத்தை நிறுவ முயல்கின்றனர். சௌராட்டிரர் எதிர் தாக்குதலுக்கு தயாராகின்றனர். இப்படி இது ஒரு சாதிய மோதலாக மாறி வருகிறது.

போலி கம்யூனிஸ்டுகள் கூறுவதைப் போல நடந்து வரும் கலவரங்களை பொதுவாக சாதியக் கலவரம் என பார்க்க முடியாது. ஏற்கனவே காலங்காலமாக அரசியல், பொருளாதார, சமூக ரீதியில் ஆதிக்கம் செலுத்தி வந்த மேல்சாதி ஆதிக்க வெறியர்கள் மீண்டும் சாதிய ஒடுக்குமுறைக்கு ஆயுதம் ஏந்துகின்றனர். ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதியப் பிரிவினர் இதற்கு எதிராக தற்காப்புக்கும், சாதிய ஒடுக்குமுறையிலிருந்து விடுபடவும் ஆயுதம் ஏந்துவது தவிர்க்க முடியாத ஒன்றே.

தகவல்:
புரட்சிகர மாணவர் – இளைஞர் முன்னணி,
தென் மாவட்டங்கள்.

## காற்சதங்கையின் ஒலியை துப்பாக்கிக் குண்டுகள் மௌனமாக்கிடுமா?

*கத்தார், ஆந்திரத்துப் புரட்சிகரக் கலைஞர். அவர் காலில் சதங்கை கட்டி ஆடினார் என்றால், ஆளும் வர்க்கங்கள் பூகம்பம் வந்தது போல அஞ்சி நடுங்குவர். அவர் சார்ந்த மக்கள் கலாச்சாரப் படையான ஜன நாட்டிய மண்டலியைத் தடை செய்தனர் தொடை நடுங்கிகள்.*

*கம்யூனிசப் புரட்சியாளர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டு, போலீசுடன் 'மோதல்' என்ற பெயரில் பொய் நாடகத்தை அண்மைக் காலமாக அரங்கேற்றி வருகிறது ஆந்திர போலீசு. படுகொலை செய்யப்பட்ட போராளிகளின் உடலை போலீசு கொலைகாரர்களே எரித்து விடுவர். இக்கயவாளித்தனத்தைக் கண்டித்தார் கத்தார். வழக்காடினார்; வென்றார்; உடல்களைப் பெற்றார்.*

*தமது கொலைவெறியாட்டத்தை இனியும் மூடி மறைக்க முடியாததால் ஆத்திரமடைந்த போலீசு, கத்தாரைக் கொல்ல முயன்றது. குண்டுக் காயங்களுடன் தப்பிவிட்டார் கத்தார். ஆந்திரப் போலீசின் நயவஞ்சகத்தை, கொலை வெறியாட்டங்களை உழைக்கும் மக்களுடன் சேர்ந்து, அம்பலப்படுத்தி முறியடிப்போம்! புரட்சிப் போரில் முன்னேறுவோம்!*

— ஆசிரியர் குழு



படிப்பகம்

# நாடெங்கும் போலீசின் நரவேட்டை

**விசாரணை – கைது – வழக்கு என்பதெல்லாம் காலாவதியாகிவிட்டன. சித்திரவதை செய்து 'குற்ற'த்தை ஒப்புக் கொள்ளச் செய்வது; மோதல் என்ற பெயரில் சுட்டுக் கொன்றுவிட்டு, தீவிரவாதிகள் என முத்திரை குத்திவிடுவது – இவைதான் இன்று போலீசுத் துறையின் எழுதப்படாத சட்டம்**

போலீசை மக்களின் நண்பனாக மாற்றுவதற்காக அள்ளித் தெளிக்கப்படும் போசனைகளையும், கோமாளித்தனமான நடவடிக்கைகளையும் சொல்லி மாள முடியாது. போலீசுக்கும் பொது . மக்களுக்குமிடையே விளையாட்டுப் போட்டிகள் - கலந்துரையாடல்கள்; பணியில் சேரும் போலீசாருக்கு நன்னெறிகளைப் போதிக்க தனிப்பிரிவு; அரசியல்வாதிகளின் பிடியில் இருந்து போலீசு துறையை மீட்க வேண்டும்; போலீசாருக்கு மனித உரிமைகள் பற்றி போதிக்க வேண்டும் என்ற அதிகார வர்க்கத்தின் கூக்குரல்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் போலீசைப் புத்தனாக்கி விடுவோம் என்ற எதிரும் புதிருமான ஓட்டுக் கட்சிகளின் ஓலங்கள் - இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால், கடந்த நான்கு மாதங்களுக்குள் நாடெங்கும் நடந்துள்ள பேரலீசின் அத்துமீறல்கள், "நாய் வாலைக் கூட நிமிர்த்தி விடலாம்; போலீசைத் திருத்த முடியாது" என்பதை மீண்டும் எடுத்துக் காட்டிவிட்டன.

சிதம்பரனார் மாவட்டத்தில் கடம்பூருக்கு அருகேயுள்ள கோடங்கால் கிராமத்தைச் சேர்ந்த இந்திராணி என்பவர் மார்ச் 19-ஆம் தேதி அவரது வீட்டிலேயே கொலையுண்டு இறந்து' போனார்; வீட்டில் இருந்த பொருட்களும் கொள்ளை போயின. இக் கொலை - கொள்ளை தொடர்பாக எவ்விதத் தடயமும் கிடைக்காது தடுமாறி நின்ற போலீசார், யாரையாவது பிடித்து உள்ளே தள்ளிவிட சதித் திட்டமொன்றைத் தீட்டினர்.

இதன்படி தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெரிய தங்கவேல், மாணிக்கம், ஈஸ்வரன், பால சுப்பிரமணியம், ஐக்கையன், இராமமூர்த்தி, ஆவுடையம்மாள் ஆகியோரை விசாரணைக்கு இழுத்துச் சென்றனர் கடம்பூர் போலீசார். இவர்களுள் ஆவுடையம்மாள் இந்திராணியின் பக்கத்து வீட்டுக்காரர்; மார்ச் 31-ஆம் தேதி நள்ளிரவில் விசாரணை என்ற பெயரில் வீட்டில் இருந்து இழுத்துச் செல்லப்பட்டார், இவர். பெண் போலீசார் துணையின்றியோ, இரவிலோ பெண்களை போலீசு விசாரணைக்கு அழைத்துச் செல்லக் கூடாது என்ற சட்டமிருந்தும், கடம்பூர் போலீசு அது பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளவில்லை.

ஆவுடையம்மாளையும், பெரிய தங்கவேலையும் ஊருக்கு வெளியே ஆள் அரவமற்றவிடமான ஓடு பாதைக்குக் கொண்டு சென்ற போலீசார், ஆவுடையம்மாளின் சேலையை உருவிவிட்டு, ரவிக்கையைக் கிழித்தெறிந்தனர். "கொலையை ஒத்துக் கொள்; அல்லது யாரையாவது கை காட்டு" என மிரட்டிக் கொண்டே, லத்தியாலும், பனை மட்டையாலும் ஆவுடையம்மாளின் இடுப்புக்குக் கீழே இரத்தம் சொட்ட சொட்டத் தாக்கி வெறியாட்டம் போட்டன அம்மிருகங்கள். ஆவுடைம்மாளைப் போல, ஓடு பாதையில் நிர்வாணமாக நிற்க வைத்துத் தாக்கப்பட்ட பெரிய தங்கவேல், கடம்பூர் போலீசு நிலையத்தில் இறந்து போனார். இக் கொலை பற்றி விசாரணை நடத்த தமிழக அரசு உத்தரவிட்ட பின்பு, போலீசாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு தாக்கப்பட்ட ஐக்கையன் மர்மமான முறையில் மரணமடைந்துவிட்டார்; "நடந்ததை வெளியே சொல்லக் கூடாது" என ஆவுடையம்மாள் மிரட்டப்படுகிறார்.

கடம்பூர்க் கொலையின் அவல ஓலம் மறைவதற்குள்ளேயே, தமிழகப் போலீசின் அடுத்த பலி சென்னையில் விழுந்தது. சென்னை - மயிலாப்பூரிலுள்ள பல்லக்குமானியம் பகுதியைச் சேர்ந்த 12-ஆம் வகுப்பு மாணவன் ரமேஷ் என்ற இளைஞனை ஏப்ரல் 12-ஆம் தேதி இரவு அடித்தே கொன்று போட்டனர், மயிலாப்பூர் பகுதி போக்குவரத்து போலீசார். சிவப்பு விளக்கு எரிந்த பொழுதே சாலையைக் கடக்க முயன்றதும், அப்பொழுது தன்னை அடித்த போலீசுக்காரனை எதிர்த்துப் பேசியதும் தான் அவ்விளைஞனின் குற்றம்.

அடித்துக் கொன்ற ரமேஷின் உடலை, மயிலாப்பூர் போலீசு நிலையத்திற்கு அருகிலுள்ள பக்கிங்ஹாம் கால்வாயில் தூக்கியெறிந்து விட்டு, ரமேஷ் தப்பியோடி தண்ணீரில் விழுந்து தற்கொலை செய்து கொண்டதாக நாடகமாடியது போலீசு. அக்கால்வாய் ஓரத்தில் வசித்து வரும் மூர்த்தி என்ற காவலாளியை மிரட்டி புகார் எழுதி வாங்கிக் கொண்ட போலீசார், தற்கொலை செய்தியோடு ரமேஷின் புகைப்படத்தையும் தினகரன் பத்திரிகையில் வெளியிட்டு, தங்களை நியாயவானாகக் காட்டிக் கொண்டனர்.



போலீசுக்கு ஆள் காட்டியாய் மாற ஆவுடையம்மாள் மறுத்தது எந்த சட்டத்தின்படி குற்றம்? நேர்மையாய் வாழ நினைப்பவர்களுக்கு போலீசின் குண்டாந்தடி தான் பரிசா?

மறுநாள் ரமேஷின் மரணத்திற்கு நீதி கோரி மயிலை லஸ் முனையில் சாலை மறியலில் ஈடுபட்ட அப்பகுதி மக்களை அடித்துத் துரத்தி 500 பேர் கொண்ட போலீசு படை வீதியில் இறங்கியது. அதிகாரிகள் கைத் துப்பாக்கியோடும், போலீசார் இயந்திரத் துப்பாக்கி - லத்தியோடும் பொது மக்களைச் சுற்றி வளைத்துப் பீதியூட்டினர்; போலீசாரே பொது மக்களை நோக்கி செங்கல்லைத் தூக்கி எறிந்து, கலவரத்தைத் தூண்டி விட்டு, அப்பகுதியை இரணகளமாக்கினர். குடியிருப்புகளினுள் புகுந்து பண்ட பாத்திரங்களை அடித்து நொறுக்கினர். இம்மிருகத்தனமான தாக்குதலில் மோகன் குமார் என்பவர் குற்றுயிராக மண்ணில் சரிந்தார். எல்லாம் நடந்து முடிந்த பின்பு, எதிர்க்கட்சிகள் இப்பிரச்சினையை அரசியல் ஆக்கி ஆதாயம் தேடுவதற்குள் விசாரணைக் கமிசன் அமைப்பதாக அறிவித்தது, தி.மு.க. அரசு.

☆ ☆ ☆

மார்ச் 31-ம் தேதி மதியம் 2.30 மணி. தலைநகர் தில்லியின் "கன்னோட் பிளேஸ்" எனும் பகுதியில் பரகம்பா சந்திப்பில் பச்சை விளக்கிற்காகக் காத்து நிற்கிறது, மாருதி எஸ்டீம் கார் ஒன்று. திடீரென கண்ணிமைக்கும் நேரத்தில் அக்காரினை இயந்திரத் துப்பாக்கிக் குண்டுகள் சல்லடைக் கண்ணாகத் துளைத்தெடுக்க, காரினுள் இருந்த மூன்று நபர்களுள் இருவர் பிணமாகச் சரிந்தனர்; மற்றொருவர் ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இச்சம்பவம் நடந்து முடிந்த சிறிது நேரம் கழித்து தில்லி போலீசார் தலைமை நிலையத்தில் நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில், "உ.பி மாநிலத்தைச் சேர்ந்த கொடிய தீவிரவாதி முகம்மது யாசினையும், அவனது கூட்டாளியையும் மதியம் நடந்த மோதலில் சுட்டுக் கொன்று விட்டதாக" போலீசார் அறிவித்தனர். பத்திரிகையாளர் கூட்டம் நடந்து கொண்டிருந்த பொழுதே உள்ளே நுழைந்த அருண் கோயல், "டெல்லி போலீசின் இரத்தப் பசிக்குப் பலியான அப்பாவிகள் யார்?" என்ற உண்மையைப் போட்டு உடைத்தார். டெல்லி போலீசு கூறிய 'இம்மோதலில்' பலியானது முகம்மது யாசினும், அவனது கூட்டாளியும் அல்லர். மாறாக, அரியானாவைச் சேர்ந்த பண்ணை அதிபர் ஜக்ஜித் சிங்கும், அவரது நண்பர் பிரதீப் கோயலும் தான் போலீசின் துப்பாக்கி குண்டுகளுக்கு இரை

www.padippakam.com

யாகினர். படுகாயமடைந்த தன்வர் பிரதீப் கோயலுக்குச் சொந்தமான எரிவாயு நிறுவனத்தின் தொழிலாளி.

நடந்தது இதுதான். ''மார்ச் 31-ம் தேதி மதியம் 1.30 மணியளவில் யாசின் தனது நண்பனை கிழக்கு தில்லியிலுள்ள 'மதர் டெய்ரி' பால் பண்ணை அருகே சந்திக்கலாம்; யாசினின் நண்பன் நீல நிற மாருதி எஸ்டீம் காரோடு காத்து நிற்பான்'' என்ற தகவல் தில்லி போலீசுக்குக் கிடைத்தது. சுட்டுக் கொல்லப்பட்ட ஜக்ஜித் சிங்கை, யாசின் எனக் குருட்டுத்தனமாகக் கற்பிதம் செய்து கொண்ட தில்லி போலீசார், அவர் பயணித்த நீலநிற மாருதி எஸ்டீம் காரை இரகசியமாகப் பின் தொடர்ந்தனர். காரில் பயணம் செய்வது யாசின்தான் என உறுதி செய்து கொள்ளாமல் சர்வ சுதந்திரமாக அவ்விருவரையும் சுட்டுக் கொன்று விட்டு, 'மோதல்' என்று நாடகமாடியுள்ளனர், தில்லி போலீசார்.

தில்லி போலீசின் கபட நாடகம் இத்துடன் முடியவில்லை. இந்த அத்துமீறல் அம்பலமான பின், ''ஜக்ஜித் சிங்கை காரில் இருந்து இறங்குமாறு கூறிய போலீசை, ஜக்ஜித் சிங் துப்பாக்கியால் சுட முயன்றதால், தற்காப்பு கருதி காரில் இருந்தவர்களைச் சுட்டுக் கொல்ல நேரிட்டதாக'' கிளைக் கதையொன்றை உருவாக்கி, அதற்கு சாட்சியமாக ஜகஜித் சிங்கின் காரில் இருந்து 'கைப்பற்றிய' துப்பாக்கியொன்றைக் காட்டி வருகின்றனர். ஆனால், 'கைப்பற்றப்பட்ட' இத் துப்பாக்கி பல மாதங்களாகப் பயன்படுத்தப்படவேயில்லை என்ற உண்மை விசாரணையில் தெளிவானது.

☆☆☆

போலீசின் அருவெறுக்கத்தக்க வக்கிரத் தன்மைக்கு மத்தியப் பிரதேச மாநிலத்தில் கன்னித் தன்மை பரிசோதனை என்ற பெயரில் கோபால்புரா கிராமப் பெண்களின் மீது ஏவிவிடப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலைக் குறிப்பிடலாம்.

சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் இக் கிராம கிணற்றில், சிதைந்து போன நிலையில் ஆண் கரு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இக் கருவின் தாயைக் கண்டுபிடிப்பதற்காக மித்தல் என்ற போலீசு அதிகாரி கன்னித்தன்மை பரிசோதனை நடத்தினான். அக்டோபர் 6-ஆம் தேதி இப் பரிசோதனையை இமார்தி பாய் என்ற தாதி நடத்தினார். அக்கிராமத்தைச் சேர்ந்த பத்து வயது சிறுமி தொடங்கி, வயதான தாய்மார்கள், விதவைகள் என ஒருவர் பாக்கி இல்லாமல், வீடுவீடாகச் சென்று இப்பரிசோதனையை நடத்தி முடித்தான் அந்த அதிகாரி.

இப்பரிசோதனை முடிந்து இரண்டு நாட்கள் கழித்து அக்கிராமத்திற்கு வந்த மித்தல், ஏற்கனவே பரிசோதிக்கப்பட்ட பெண்களுள் 14 பேரை அவர்களின் பெற்றோர் சம்மதமின்றி இராணிதல் போலீசு நிலையத்திற்கு அழைத்துச் சென்று




சென்னை - மயிலையில் நியாயம் கோரித் திரண்ட பொதுமக்களுக்கு போலீசின் பதில் - துப்பாக்கிச் சூடு! (உள் படம்) போலீசாரால் படுகொலை செய்யப்பட்ட ரமேஷ்.

அதே பரிசோதனையைத் தொடங்கினான். இம்முறை மருத்துவ தாதியின்றி, தானே அப் பரிசோதனையை நடத்தினான் அந்த வக்கிர அதிகாரி. பரிசோதனை என்ற பெயரில் அப் பெண்களை மானபங்கப்படுத்தினான் என்பதுதான் உண்மை. போலியோ நோய் தாக்கி கால்கள் முடமாகிப் போன 12 வயது சிறுமியும் இப் 'பரிசோதனை'க்குப் பலியானாள். அப்பெண்கள் அனைவரும் அன்று முழுவதும் சட்டவிரோதக் காவலில் அடைக்கப்பட்டனர். பிள்ளைகளைக் கூட்டிச் செல்ல வந்த பெற்றோர்களை, சகோதரர்களை போலீசு நிலையத்திற்கு அருகேகூட நெருங்க விடாமல் அடித்துத் துரத்தியது அம்மனித மிருகம்.

இந்த அத்துமீறலை அம்பலப்படுத்திய உள்ளூர் பத்திரிகையாளர் மீது பொய் வழக்குகளை ஜோடித்து, சிறையில் அடைத்த மித்தல், பாதிக்கப்பட்ட பெண்களின் பெற்றோர்களிடம், ''நடந்ததை வெளியே சொல்லி விடுவேன்'' என மிரட்டியே பணம் பறித்துள்ளான். நான்கு மாதம் கழித்து எதிர்க் கட்சிகள் இச்சம்பவத்தை சட்டசபையில் அம்பலப்படுத்திய பின்தான், மித்தலையும் அவனுக்கு உடந்தையாக இருந்த போலீசாரையும் பதவி நீக்கம் செய்து, விசாரணைக்கு உத்தரவிட்டது ம.பி. மாநில அரசு. ''இனி என்னதான் நடந்தாலும் போன மானம் திரும்பி வரவா போகிறது?'' எனப் புலம்பும் பெற்றோர்களை எதைச் சொல்லித் தேற்றுவது?

தில்லியில் சுட்டுக் கொல்லப்பட்ட பிரதீப் கோயலின் உறவினர்கள் ஆத்திரத்தோடு போலீசாரைத் தாக்குகின்றனர். வரவேற்கக்கூடிய ஆத்திரம்தான்.



☆☆☆

மக்களை நர வேட்டையாடுவதற்காகவே ஆட்சியாளர்களால் தீனி போட்டு வளர்க்கப்படும் தனிவகை ஜாதிதான் போலீசு. மக்களின் மேல் விழுந்து கடித்துக் குதறியதற்குத்தான் அவர்களுக்கு பரிசும், பாராட்டும், பதவி உயர்வும் தரப்படுகின்றன. டெல்லியில் ஜகஜித் சிங்கைக் கொன்றொழித்த ரதி, 'மோதல்' கொலைகளின் கதாநாயகன்; அதனால்தான், துணை ஆய்வாளர் என்ற சாதாரண பதவியில் இருந்த அவனால், கிடுகிடுவென உயர்ந்து, உதவிக் கண்காணிப்பாளர் பதவியில் அமர முடிந்தது.

பஞ்சாபில் சீக்கிர மதத் தீவிரவாதிகளும், பீகார் - ஆந்திராவில் நக்சல்பாரி புரட்சியாளர்களும் 'மோதலில்' கொன்றொழிக்கப்பட்ட போதெல்லாம் போலீசைப் புகழ்ந்து தள்ளியவர்கள் கூட, டெல்லி படுகொலைக்குப் பின் பதைபதைத்துப் போய், ''போலீசு கொலையாளிகளாக மாறலாமா?'' என ஆதங்கப்படுகின்றனர். ஆனால் சிறப்பு அதிகாரங்கள் கொடுத்து பாசிச மயமாக்கப்பட்டுள்ள போலீசோ இப்படுகொலைகளுக்கு குறைந்த பட்சம் மன்னிப்பு கேட்கக் கூடத் தயாரில்லை. பம்பாய் நகரப் போலீசு படையின் ஒரு பிரிவினர் மோதல்களின் மூலம்தான் சட்டம் - ஒழுங்கை நிலை நாட்ட முடியும் என வெளிப்படையாகவே கூறியுள்ளனர். மேலும், ஒரு மாஃபியா கும்பலிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டு, அதற்கு எதிரான மாஃபியா கும்பலைக் கொன்றொழிக்கும் அளவிற்கு பம்பாய் போலீசு சட்டபூர்வ கூலிப்படையாகச் சீரழிந்து போயுள்ளது.

மக்களின் மிகுந்த வெறுப்புக்குள்ளாயிருக்கும் போலீசைக் காத்து நிற்பதில் ஓட்டுக் கட்சிகளுக்கு முக்கியப் பங்குண்டு. தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த பொழுது, ''70 சதவீத போலீசார் அழுகி நாறிப் போய் விட்டனர்'' என்றார். இப்பொழுதோ, ''60 சதவீத போலீசார் உத்தம சீலர்களாக மாறிவிட்டனர்'' என சட்டசபையில் நற்சான்றிதழ் வழங்கியுள்ளார். ஆனால் மாறியது கருணாநிதியின் மனம் தானேயன்றி, போலீசு அல்ல. கடந்த ஒரே ஆண்டில் மட்டும் தமிழ்நாட்டில் 13 கொட்டடிக் கொலைகள் நடந்துள்ளன; 24 இடங்களில் துப்பாக்கி சூடு நடத்தி 15 பேரைக் கொன்றொழித்துள்ளது, தமிழக போலீசு.

இந்த உண்மையைப் பிரதிபலிக்கும் முகமாகத்தான், போலீசு சித்திரவதை தொடர்பாக பதினோரு வருடங்களாக நடந்து வந்த வழக்கில் சமீபத்தில் தீர்ப்பளித்த சென்னை உயர் நீதிமன்றம், ''தங்களைக் கேள்வி கேட்கவோ, அல்லது கண்காணிக்கவோ உலகில் எந்தவொரு சக்தியும் கிடையாது; ஒரு சர்வாதிகாரிக்கு உரிய அதிகாரங்கள் தமக்கிருப்பதாக நினைத்துக் கொண்டு (தண்டிக்கப்



படிப்பகம்

www.padippakam.com

பட்ட) அப்போலீசார் நடந்து கொண்டிருப்பதாக"க் குறிப்பிட்டுள்ளது.

நாடெங்கிலுமே போலீசுத்துறை பாசிச குண்டர் படையாக கிரிமினல்களின் கூடாரமாகச் சீரழிந்து போய்விட்டது. இந்நிலையில் போலீசாரில் ஒரு பிரிவினர்தான் அத்துமீறி தவறு செய்கிறார்கள்; தவறுகளும் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தான் நடக்கின்றன என்று தி.மு.க. உள்ளிட்டு எல்லா ஓட்டுக் கட்சிகளுமே போலீசுக்குப் பரிந்து பேசுவது மோசடித்தனமானது; பேடித்தனம் நிறைந்தது.

எந்த சட்டத்தை மதிக்காமல் போலீசு ஆட்டம் போடுகிறதோ, அச்சட்டத்தின் கீழே அமைக்கப்படும் தண்டிக்கும் அதிகாரமற்ற விசாரணைக் கமிசன்களையும், தேசிய மனித உரிமைக் கமிசனையும் காட்டி போலீசைப் பயமுறுத்தி அடக்கி விடலாம்; நன்னெறிகளையும், மனித உரிமைகளையும் போதித்து பொது மக்களின் ஊழியனாக போலீசை மாற்றிவிடலாம் என்ற இவர்களின் ஏமாற்று வார்த்தைகளை இனியும் நாம் நம்ப வேண்டியதில்லை; மாறாக, பச்சை மனித இரத்தம் குடித்துப் பழகிப் போன இந்த அடக்குமுறைக் கருவியை அடித்து நொறுக்கும் புரட்சிகரப் போராட்டத்திற்குத் தயாராக வேண்டும்.

• ரஹீம்

# வசந்தத்தின் இடி முழக்கமாய் ஒலித்த நக்சல்பாரி பேரெழுச்சியின் முப்பதாம் ஆண்டு நிறைவு

நக்சல்பாரி — இது மேற்கு வங்கத்தின் வடபகுதியில் சிலிகுரி வட்டத்திலுள்ள சிறிய கிராமத்தின் பெயர் மட்டுமல்ல; இந்திய புதிய ஜனநாயகப் புரட்சியின் சரியான பாதையை நிறுவிய விவசாயிகளின் பேரெழுச்சி! நக்சல்பாரி எழுச்சி ஓர் உண்மையான, புரட்சிகரமான மார்க்சிய - லெனினிய கம்யூனிஸ்டுக் கட்சியை இந்தியாவில் தோற்றுவித்தது. அறுபதாண்டுகளுக்கும் மேலாக இந்தியாவைக் கவ்வியிருந்த திருத்தல்வாத - போலிக் கம்யூனிச இருளைக் கிழித்தெறிந்தது.

1967 மார்ச் 18-இல் தொடங்கிய நக்சல்பாரி விவசாயிகளின் போராட்டம் ஏப்ரல் மாதத்தில் பேரெழுச்சியாகப் பற்றிப் பரவியது. நிலப்பிரபுக்களிடமிருந்த விவசாயிகளின் கடன் பத்திரங்கள் பறிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. நிலப்பிரபுக்களின் ஆயுதங்களும், துப்பாக்கிகளும் பறிமுதல் செய்யப்பட்டன. கொடிய நிலப்பிரபுக்களுக்கு விவசாயிகள் கமிட்டி மரண தண்டனை வழங்கியது. வில்லும் அம்பும் கோடரியும் துப்பாக்கியும் ஏந்திய விவசாயிகள், அந்த வட்டாரத்தின் நிர்வாகத்தைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டனர். விவசாயிகளின் அனுமதியின்றி யாரும் அப்பிராந்தியத்தினுள் நுழைய முடியாது என்ற நிலைமை மே மாதத்தில் சாதிக்கப்பட்டது. "உழுபவனுக்கே நிலம் சொந்தம்; உழைப்பவனுக்கே அதிகாரம்!" என்ற முழக்கம் நடைமுறையில் நிரூபிக்கப்பட்டது. விவசாயிகள் முதன்முதலாக சுதந்திரக் காற்றை சுவாசிக்கத் தொடங்கினர்.



நக்சல்பரி பேரெழுச்சிக்கு ஆதரவாக கல்கத்தா நகர வீதியில் திரண்ட புரட்சியாளர்கள்.

மே மாத இறுதியில் நக்சல்பாரி விவசாயிகளுக்கு எதிரான அரசின் போர் தொடங்கியது. மே 25-இல் மே. வங்க கூட்டணி அரசின் போலீசு, இரு குழந்தைகள் உள்ளிட்டு 9 பேரைச் சுட்டுக் கொன்றது. விவசாயப் போராளிகள் கைது செய்யப்பட்டனர். மே. வங்க அரசின் அடக்குமுறை, கொலை வெறியாட்டத்தை எதிர்த்து, "நக்சல்பாரி பாதையே விவசாயப் புரட்சியின் பாதை! கொலைகார முதல்வர் அஜாய் முகர்ஜியே பதவி விலகு!" என்று கல்கத்தா நகரச் சுவர்களைப் புரட்சிகர மாணவர்கள் முழங்க வைத்தனர்.

ஜூன் மாதத்தில் நக்சல்பாரி விவசாயப் புரட்சிக் கமிட்டி 80 இடங்களில் நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பறித்தெடுத்தது. 13 பெரு நிலப்பிரபுக்களின் வீடுகள் சூறையாடப்பட்டன. விவசாயிகள் - உழைக்கும் மக்களின் நீதிமன்றத்தில் கொடிய எதிரிகளும் துரோகிகளும் தண்டிக்கப்பட்டனர்.

ஜூலை 12-ஆம் நாளில் மீண்டும் மே. வங்க போலீசு, மிருகபலத்துடன் நக்சல்பாரியை முற்றுகையிட்டுத் தாக்கத் தொடங்கியது. முன்னணித் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு, விவசாயப் போராளிகளில் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மே. வங்க கூட்டணி அரசில் அங்கம் வகித்த 'மார்க்சிஸ்டு'கள், நக்சல்பாரி புரட்சியின் எதிரிகளோடு சேர்ந்துகொண்டு அடக்குமுறையை ஏவி, தமது துரோகத்தை நிரூபித்துக் காட்டினர். இதை எதிர்த்து 'மார்க்சிஸ்டு' கட்சியிலுள்ள புரட்சியாளர்கள் கலகம் செய்து, அதிலிருந்து வெளியேறி அனைத்திந்திய கம்யூனிசப் புரட்சியாளர்களின் ஒருங்கிணைப்புக் கமிட்டியை நிறுவி, நாடெங்குமுள்ள புரட்சியாளர்களை ஐக்கியப்படுத்தினர்.

1967 ஜூலையில் கடுமையான அடக்குமுறையால் நக்சல்பாரி எழுச்சி ஒடுக்கப்பட்டது. ஆனால் அது மடியவுமில்லை; மறையவுமில்லை. ஆந்திரம், பீகார், கேரளா, தமிழ்நாடு, மராட்டியம், உ.பி., அசாம் என நாடெங்கும் அது புரட்சிப் புயலாகச் சுழன்று வீசியது. அதன் தொடர்ச்சியாக, ஆளும் வர்க்கங்கள் அச்சத்துடனும், வெறுப்புடனும், ஆத்திரத்துடனும் குறிப்பிடும் நக்சல்பாரிகளின் கட்சியான இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) 1969 ஏப்ரல் 22-இல் உதித்தது. அன்றிலிருந்து தரகுப் பெருமுதலாளிகள் - நிலப்பிரபுக்கள் - ஏகாதிபத்தியவாதிகளைக் குலைநடுங்க வைக்கும் முன்னணி புரட்சிப் படையாக அது பீடுநடை போட்டு வருகிறது.

போர்முறைத் தவறுகளால், துரோகிகள் - ஓடுகாலிகளின் சீர்குலைவுகளால், எதிரிகளின் அடக்குமுறை - கொலைவெறியாட்டத்தால் பின்னடைவுகள் - பின்னடைவுகளைத் தற்காலிகமாகச் சந்தித்தபோதிலும், நக்சல்பாரி கட்சிதான் இந்திய மக்களின் ஒரே நம்பிக்கை நட்சத்திரம்!

புரட்சி வானிலே அதன் செம்பதாகையை உயர்த்திய ஆயிரமாயிரம் தியாகிகளின் வழி நடப்போம்! புதிய ஜனநாயகப் புரட்சியில் வெல்வோம்!



படிப்பகம்

www.padippakam.com

## மருத்துவக் கருவிகள் இறக்குமதி மோசடி

# ஏழைகளின் பெயரில் எத்தர்கள் கொள்ளை

**வங்கி** - பங்குச் சந்தை மோசடி, ஹவாலா மோசடி, சர்க்கரை ஊழல், யூரியா ஊழல், தொலை தொடர்பு ஊழல், கால்நடை ஊழல், காலணி ஊழல், சுடுகாட்டு ஊழல் என நாடே ஊழல் மாக்கடலில் மூழ்கிக் கொண்டிருக்கும்போது, 5000 கோடி ரூபாயை விழுங்கி ஏப்பம்விட்ட மருத்துவக் கருவி இறக்குமதி தீர்வை மோசடி இப்போது மெதுவாக வெளியே தலைகாட்டியுள்ளது. வெளிநாடுகளிலிருந்து அதிநவீன மருத்துவச் சாதனங்களைச் சுங்கத் தீர்வை ஏதுமின்றி இறக்குமதி செய்த வகையில், கடந்த 7 ஆண்டுகளில் ரூ.5000 கோடிக்கும் மேலாக தரகுப் பெருமுதலாளிகளும், அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் சுருட்டியுள்ளனர்.

பாசிச ராஜீவின் 'பொற்கால' ஆட்சியில் தனியார் ஐந்து நட்சத்திர மருத்துவமனைகள் காளான்களாகப் பரவிய நேரமது. அரசு மருத்துவமனைகளைச் சவக் கிடங்குகளாக்கி விட்டு, மேட்டுக்குடியினர் நலனுக்காக அதிநவீன சாதனங்களைக் கொண்ட தனியார் சொகுசு மருத்துவமனைகளை மேலைநாட்டுப் பாணியில் நிறுவும் நோக்கத்துடன், இம் மருத்துவமனைகள் இறக்குமதி செய்யும் மருத்துவக் கருவிகள் - சாதனங்களுக்கு சுங்கத் தீர்வை விலக்கு அளிக்கப்பட்டது.

இதைச் சாதகமாக்கிக் கொண்டு இரகசிய உலக கிரிமினல் பேர்வழிகளும், கறுப்புப் பண முதலாளிகளும் பெருநகரங்களில் சொகுசு மருத்துவமனைகளைக் கட்டி எழுப்பினர். நவீன மருத்துவச் சாதனங்களை வெளிநாடுகளிலிருந்து சுங்கத் தீர்வையின்றி இறக்குமதி செய்து குவித்தனர். அரசு சார்பு மருத்துவமனைகள், தனியார் அறக்கட்டளை மருத்துவமனைகள், ஏழைகளுக்கு இலவச சேவை செய்யும் மருத்துவமனைகள் முதலானவற்றுக்குச் சுங்கத் தீர்வை விலக்கு அளிக்கலாம் என்ற விதியைக் கேடாகப் பயன்படுத்தி, கணக்கற்ற ஐந்து நட்சத்திர மருத்துவமனைகளுக்கும், பெயர்ப்பலகை மருத்துவமனைகளுக்கும் இச்சலுகையை அதிகாரிகள் வாரியிறைத்தனர்.

உதாரணமாக, அணு காந்த ஒலிப் படக் கருவிகள், நுரையீரல் - இதயம் ஆகிய வற்றை ஆராயும் தானியங்கி பகுப்பாய்வுக் கருவிகள் முதலானவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தால் 120% சுங்கத் தீர்வை உண்டு. ஐந்து நட்சத்திர மருத்துவமனைகளுக்கு இத்தீர்வையிலிருந்து முற்றாக விலக்கு அளிப்பது, இம்மோசடிக்காக 25% முதல் 50% வரை கமிஷன் - கையூட்டுப் பெறுவது என்பதை சுகாதாரத் துறை அமைச்சரும் அதிகாரிகளும் நீண்டகாலமாகச் செயல்படுத்தி வந்துள்ளனர்.

''நாளொன்றுக்கு 3 கோடி ரூபாய் மதிப்புள்ள மருத்துவக் கருவிகளும் - சாதனங்களும் சுங்கத் தீர்வை விலக்குச் சான்றிதழுடன் இறக்குமதியாகின்றன. எனில், கடந்த 10 ஆண்டுகளில் நடந்துள்ள சுங்கத் தீர்வை மோசடி 10,000 கோடிகளைத் தாண்டி விடும். இப்போதைக்கு, குறைந்தபட்சம் 5000 கோடி ரூபாய்க்கும் மேலாக மோசடி நடந்துள்ளதென்று நாங்கள் அறுதியிட்டுக் கூறமுடியும்'' என்கின்றனர் சுகாதாரத் துறையின் கீழ்நிலை அதிகாரிகள்.

இந்த உண்மைகள்கூட, கடந்த ஆண்டு டெல்லி உயர்நீதி மன்றத்தில் ஒரு பொதுநல வழக்கு தொடரப்பட்ட பிறகுதான் மெதுவாகக் கசியத் தொடங்கியது. அதன்பிறகே, டெல்லி உயர்நீதி மன்றம், மத்திய சுகாதார அமைச்சகத்தின் கண்காணிப்புத் துறை இணைச் செயலாளர் தலைமையில் ஒரு குழுவை நிறுவி மருத்துவ சாதன இறக்குமதி ஊழல் பற்றிய விசாரணையை மேற்கொண்டது. ஆரம்ப விசாரணையிலேயே ராவ் அரசில் சுகாதாரத் துறை மத்திய அமைச்சராக இருந்த சங்கரானந்தும், மருத்துவ சேவைத் துறையின் தலைமை இயக்குனரான முகர்ஜியும் முதன்மைக் குற்றவாளிகளாக அம்பலப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து, மருத்துவ சாதன இறக்குமதி மோசடியில் அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை மதிப்பிட்டு அதைத் திரும்பப் பெறுவதற்கான குழு, மற்றும் இந்த ஊழல் எவ்வாறு நடந்துள்ளது என்பதைக் கண்டறியும் ஆய்வுக் குழு என இரு குழுக்களை டெல்லி உயர்நீதி மன்றம் நியமித்தது. அதன் ஆரம்ப விசாரணையிலேயே, ''கோட்டு - சூட்டு'' போட்ட அதிகாரிகளான கே.கே. ஜெயின், ராஜாராம், தாரண் முதலான சுகாதாரத் துறை இயக்குனர்களும், 300-க்கும் மேற்பட்ட சொகுசு மருத்துவமனை அதிபர்களும் கோடிகோடியாய் மோசடி செய்த விபரங்கள் சிக்கின.

இரகசிய உலக ஆயுத வியாபாரியான கஷோகியுடனும், கிரிமினல் சாமியாரான சந்திராசாமியுடனும் நெருங்கிய தொடர்புடைய சென்னை - அப்போலோ சொகுசு மருத்துவமனைக்கும், கல்கத்தா - பியர்லெஸ் மருத்துவமனைக்கும் முன்னாள் காங்கிரசு அமைச்சர் சங்கரானந்த், ஏழைகளுக்கான மருத்துவமனை என்று சான்றிதழ் அளித்து, சுங்கத் தீர்வை விலக்கு அளித்துள்ளார். இதன்மூலம் அப்போலோ மருத்துவமனைக்கு மட்டும் ரூ.100 கோடிக்குமேல் ஆதாயம் கிடைத்துள்ளது.

1993 மார்ச் மாதத்தில் இவ்வாறு சுங்கத் தீர்வை விலக்கு அளிப்பது நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனாலும், 1994-இல் பங்குச் சந்தை ஊழல் மோசடிகளில் அம்பலப்பட்டு பதவி விலகிய பின்னரும்கூட, முன் தேதியிட்ட சான்றிதழ்களை — அதாவது 1993 மார்ச்சுக்கு முன்தேதியிட்ட சான்றிதழ்களை — பியர்லெஸ் உள்ளிட்டு பல மருத்துவமனைகளுக்கு அளித்து, மோசடி அமைச்சர் சங்கரானந்த் கோடிகோடியாய் சுருட்டியுள்ளார்.

இவையெல்லாம், ஆரம்ப விசாரணையில் அம்பலமான தகவல்கள்தான். இன்னும் யார்யார் இக்கொள்ளையில் ஈடுபட்டார்கள், எவ்வளவு கோடிகளை விழுங்கினார்கள் என்ற உண்மைகள் இன்னும் வெளிவரவில்லை. அதற்குள்ளாகவே, ஆரம்ப விசாரணையை மேற்கொண்ட சுகாதார அமைச்சகத்தின் கண்காணிப்புத் துறை செயலாளரான சந்திர மௌலி, உ.பி.க்கு பதவிமாற்றம் செய்யப்பட்டு விரட்டியடிக்கப்பட்டுள்ளார். டெல்லி உயர்நீதி மன்றத்தால் நியமிக்கப்பட்ட இரு விசாரணைக் குழுக்களும் போதுமான தகவல்கள் - ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்று நத்தை வேகத்தில்தான் விசாரணையை நடத்துகின்றன.

முன்பு, தலைநகர் டெல்லியை டெங்கு காய்ச்சல் தாக்கி பலர் மாண்டபோது, அந்நோய்க்கு இந்தியாவில் உரிய மருந்து இல்லாத நிலையில், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளுக்கு சுங்கத் தீர்வை செலுத்தாமல் எடுத்துச் செல்ல அனுமதிக்க முடியாது என்று அரசு பிடிவாதம் செய்தது. இதனால் உரிய நேரத்தில் மருந்து கிடைக்காமல் அரசு மருத்துவமனைகளில் பல ஏழைகள் மாண்டு போயினர். ஆனால் அதே காலகட்டத்தில், அதே இந்திய அரசு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளையடிக்க சொகுசு மருத்துவமனைகளுக்குத் தாராள அனுமதி அளித்துள்ளது. தரகு முதலாளிகள் என்றால் சலுகைகள், வரிவிலக்குகள்; ஏழைகளுக்கான அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் என்றால் சுங்கத் தீர்வை கெடுபிடி!

முன்னாள் அமைச்சர் சங்கரானந்த், தேர்தல் தோல்விக்குப் பிறகு அரசியலில் பதுங்கிக் கொண்டு விட்டார். சுகாதாரத் துறை இயக்குனரான முகர்ஜி, பதவி விலகி இப்போது உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) ஆலோசகராகிவிட்டார். அம்பலப்பட்டுப் போன அதிகாரிகள்மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வது, மோசடிசெய்த மருத்துவமனைகளிடமிருந்து சுங்கத் தீர்வைத் தொகையை திரும்பப்பெற உத்தரவிடுவது என்று விசாரணை ஏறத்தாழ முடிவுக்கு வந்து விட்டது.

ஆனால் கோடிகோடியாய் விழுங்கிய முன்னாள் அமைச்சர் சங்கரானந்த் மீது எந்த நடவடிக்கையுமில்லை. மோசடியில் ஈடுபட்ட கறுப்புப் பண மருத்துவமனை அதிபர்களுக்கு எந்த தண்டனையுமில்லை. விசாரணையை வரைமுறையின்றி நீட்டித்து வழக்கை நீர்த்துப்போகச் செய்வது, அல்லது குற்றவாளிகளைத் தப்புவிப்பது என்பதுதான் ஒவ்வொரு ஊழல் - மோசடி விவகாரத்தின் தலைவிதியாக உள்ளபோது, மருத்துவ சாதன இறக்குமதி மோசடி மட்டும் விதிவிலக்காகிவிட முடியுமா என்ன?

• குமார்.



படிப்பகம்

www.padippakam.com



## கோதுமை நெருக்கடி: நாட்டைக் கவ்விய பேரபாயம்

இந்தியாவின் கோதுமைக் களஞ்சியமான பஞ்சாப், அரியானா, ராஜஸ்தான் மாநில விவசாயிகள் கோதுமைக்கு கூடுதல் விலை நிர்ணயம் செய்யக் கோரி நடத்தி வரும் போராட்டத்தால், அரசுக் கொள்முதல் கிடங்குகள் வெறிச்சோடி கிடக்கின்றன. கோதுமை அறுவடைக் காலம் முடிந்துள்ள இத்தருணத்தில், மத்திய அரசு கூடுதல் விலை தராததால், இம்மாநில விவசாயிகள் எவரும் அரசு கொள்முதலுக்கு கோதுமையை விற்க முன் வரவில்லை. இப்பருவத்தில் குறைந்த பட்சம் 85 லட்சம் டன்களுக்கு மேலாக கொள்முதல் நடந்திருக்க வேண்டும். ஆனால் இன்று வரை ஒரு கோதுமை மணி கூட கொள்முதலாகவில்லை.

மத்திய அரசின் உணவு - விநியோகக் கழக கொள்முதல் கிடங்குகளிலிருந்துதான் ரேஷன் கடைகளுக்கும், வறட்சி நிவாரணத் திட்டப் பணிகளுக்கும் கோதுமை விநியோகிக்கப்படுகிறது. இப்போது சேமிப்பில் குறைந்த பட்சம் 50 லட்சம் டன்கள் இருந்தால்தான் அடுத்த இரு மாதங்களில் ரேஷனில் கோதுமையைத் தர முடியும். ஆனால் சேமிப்புக் கிடங்குகளில் இருப்பு 15 லட்சம் டன்னுக்கும் கீழாக உள்ளது. இதனால் ரேஷனில் கோதுமையை தர முடியாமல் தட்டுப்பாடு ஏற்பட்டு வெளிச்சந்தையில் கோதுமை விலை உயர்ந்து மிகப் பெரிய நெருக்கடியும் உணவுக் கலகங்களும் உருவாகும்.

பஞ்சாப் - அரியானா விவசாயிகளோ ஒரு டன்னுக்கு ரூ. 550 வீதம் விலை கோருகின்றனர். மத்திய அரசோ ரூ. 475 தான் தர முடியும் என்கிறது. விவசாயிகளின் ஓட்டுக்களை இழக்க நேரிடும் என்பதால் பஞ்சாப் - அரியானா மாநில அரசுகள் விவசாயிகளின் கோரிக்கையை ஆதரித்து நிற்கின்றன. மத்திய விவசாய அமைச்சராக உள்ள போலிக் கம்யூனிஸ்டு சதுரனன் மிஸ்ரா, விவசாயிகளின் கோரிக்கையை ஏற்க மறுத்துள்ளதோடு, இது பணக்கார விவசாயிகளின் கோரிக்கை என்று சாடுகிறார். கோதுமைக்கு கூடுதல் விலை நிர்ணயம் செய்தால், மத்திய அரசுக்கு பெருமளவு நிதிப் பற்றாக்குறை ஏற்படும் என்பதால் இக்கோரிக்கையை ஏற்க முடியாது என்று ஆளும் வர்க்கத்தின் குரலை கிளிப்பிள்ளை போல உச்சரிக்கிறார். நெல்லுக்கும் கரும்புக்கும் கடலைக்கும் கூடுதல் விலை நிர்ணயம் செய்யக் கோரி விவசாயிகள் போராடும்போது, அவற்றை ஆதரிப்பதாக நாடகமாடிய போலிகள், பதவியைப் பிடித்ததும் தமது உண்மைச் சொருபத்தை வெளிக்காட்டி விட்டனர். கூடுதல் விலை கோரும் பணக்கார விவசாயிகளின் போராட்டம் நியாயமானதா, இல்லையா என்று பார்க்காமல் வர்க்கத்தைக் காட்டி திசை திருப்ப முயற்சிக்கின்றனர். ஒருபுறம் விவசாயிகளின் கோரிக்கையால் அரசுக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்படும் என்று கூறிக் கொண்டே, மறுபுறம் ஒரு டன் ரூ. 700 வீதம் 10 லட்சம் டன் கோதுமையை இறக்குமதி செய்ய மத்திய அரசு தீர்மானித்துள்ளது.


பஞ்சாப் - அரியானா விவசாயிகளோ அரசு கொள்முதல் நிலையங்களுக்கு கோதுமையை விற்பதை முற்றாகப் புறக்கணித்துள்ளதோடு, மே - 6 முதலாக டெல்லி செல்லும் சாலையை மறித்து, உணவுப் போக்குவரத்தை தடை செய்யப் போவதாக எச்சரித்துள்ளனர்.

## அநியாய மின்கட்டண உயர்வு: இருளில் தள்ளப்பட்ட சிறுதொழில் நிறுவனங்கள்

இந்தியாவின் தொழில்மயமான மாநிலமான மகாராஷ்டிராவில், கடந்த ஜூலை மாதத்திலிருந்து மின்கட்டணம் தாறுமாறாக உயர்ந்ததைத் தொடர்ந்து அம்மாநிலத்தின் இரண்டரை லட்சம் சிறுதொழில் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டு மூடுவிழாவை எதிர் நோக்கியுள்ளன. 20% விருந்து 45% வரை மின் கட்டணம் உயர்ந்துள்ளதையடுத்து மகாராஷ்டிராவில் ஏற்கனவே 5-ல் ஒரு பங்கு சிறுதொழில் நிறுவனங்கள் மூடிக் கிடக்கின்றன. இச்சிறு தொழிலகங்களில் பணியாற்றி வந்த 3 லட்சம் தொழிலாளர் குடும்பங்களின் எதிர்காலம் இன்று கேள்விக்குறியாகி விட்டது.

மகாராஷ்டிராவில் இந்துவெறி ஆட்சியாளர்கள் திணித்துள்ள இக்கட்டண உயர்வானது — ஒரு யூனிட் ரூ. 4.50 — இந்தியாவிலேயே மிக அதிகமானது மட்டுமல்ல; உலகிலேயே மிக அதிகமானதாகும். மொத்த உற்பத்திச் செலவில் பாதிக்கும் மேற்பட்ட தொகையை மின் கட்டணமே விழுங்கி விடுவதால், என்ஜினீரிங், உலோகத்தகடு உருட்டு நிறுவனங்கள், பிளாஸ்டிக் உருக்கு - வார்ப்பட நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இதுதவிர புனே, தானே, பிவாண்டி பகுதிகளில் உள்ள விசைத்தறி நிறுவனங்களும் மூடுவிழாவை எதிர்நோக்கியுள்ளதால், பல்லாயிரக் கணக்கான நெசவாளர்கள் வேலையிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மகாராஷ்டிராவில், தனியார் மின் நிறுவனமான அமெரிக்காவின் என்ரான் நிறுவனம் வருமாண்டில் மின் உற்பத்தியைத் தொடங்கிவிடும். அதன் கட்டணமோ மிக அதிகமானது. அதற்கிணையாக, அரசு மின் வாரியமும் கட்டணத்தை உயர்த்தினால்தான் மக்களிடம் என்ரான் எதிர்ப்பு குறையும். எனவே, ஆண்டுக்கு 15 முதல் 20% வரை உயர்த்துமாறு உலக வங்கி உத்தரவிட்டுள்ளது. இதுதவிர மானிய விலையில் விவசாயிகளுக்கு தரப்படும் மின்சாரத்தை ரத்து செய்து மின்வாரியப் பற்றாக்குறையை ஈடு செய்யுமாறு நிர்பந்திக்கிறது.



மின் கட்டண உயர்வு அக்கிரமம்: இயங்க முடியாமல் துருப் பிடித்துக் கிடக்கும் சிறு தொழில் நிறுவனம்.

மகாராஷ்டிரா மட்டுமல்ல; எங்கெல்லாம் அந்நிய - தனியார் மின் நிலையங்கள் தொடங்கப்படுகிறதோ, அங்கெல்லாம் மின் கட்டண உயர்வு இப்போதே திணிக்கப்படுகிறது. ஒரிசாவில் இன்று மின்கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 4 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழகத்தில் நெய்வேலி ''சீரோ'' - யூனிட்டை அமெரிக்காவுக்கு தாரை வார்த்ததோடு, 5 தனியார் நிறுவனங்கள் மின் உற்பத்தி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளன. இதன்படி மகாராஷ்டிரா, ஒரிசா வழியில் நாளை தமிழகமும் மின்கட்டண உயர்வால் சிக்கித் திணறப் போவது நிச்சயமாகிவிட்டது.

## அல்பேனிய அராஜகம் முதலாளித்துவத்தின் மகிமை!

ஐரோப்பாவிலுள்ள சிறிய நாடான அல்பேனியாவில் நிதி நிறுவனங்களின் மோசடியால் மக்கள் போராட்டம் பெருகியதைத் தொடர்ந்து எங்கும் கலகமும் குழப்பமும் கொந்தளிப்பும் தீவிரமாகி அந்நாட்டு அரசே செயலிழந்து முடமாகிக் கிடக்கிறது. இதைச் சாதகமாக்கிக் கொண்டு போஸ்னியா, செர்பியா வழியில்



படிப்பகம்

www.padippakam.com



பன்னாட்டு 'அமைதிப் படை'யின் பெயரால் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அல்பேனியாவில் மேலாதிக்கம் செய்யக் கிளம்பியுள்ளன.

கடந்த ஜனவரியில் மோசடி நிதி நிறுவனங்களால் ஓட்டாண்டிகளான அல்பேனிய மக்களின் போராட்டம், ஊழல் - ஒடுக்குமுறை ஆட்சியாளர்களுக்கு எதிராகத் திரும்பி, பிப்ரவரியில் நாடு தழுவிய போராட்டமாக சுழன்றடித்தது. போராட்டத்தைத் தணிக்க முடியாமல் அரசு தனது கட்டுப்பாட்டை முற்றாக இழக்கத் தொடங்கியது. போலீசும், ராணுவப் படைகளும் சிதைந்து சிதறின. நாட்டின் பாதுகாப்பு அமைச்சரே குடும்பத்துடன் தப்பியோடினார். ராணுவத்திடமிருந்து அதி நவீன துப்பாக்கிகளை மக்களும் சமூக விரோத மாஃபியா கும்பலும் பறித்துக் கொண்ட பிறகு நிலைமை மேலும் மோசமடைந்தது. கொலைகளும் சூறையாடலும் பெருகியது. துப்பாக்கி ஏந்திய சமூக விரோத கும்பலின் பிடியில் நாடும் மக்களும் சிக்கித் தவித்தனர். பீதியடைந்த மக்கள் உயிர் பிழைக்க பல்லாயிரக்கணக்கில் அண்டை நாடுகளுக்குத் தப்பியோடினர். அகதிகள் பெருக்கம் காரணமாக கிரீசும் இத்தாலியும் எல்லையை மூடி, அல்பேனிய அகதிகளைத் துரத்துகிறது.

நாட்டின் வடபகுதியில் முதலாளித்துவ ரௌடிகளும் மாஃபியாக்களும் ஆயுதங்களைப் பறித்துக் கொண்டு, முன்னாள் போலிக் கம்யூனிஸ்டுகளை ஆட்சிக்கு வர விடமாட்டோம் என்று அராஜகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதேபோல தென்பகுதியில் செல்வாக்குடன் உள்ள முன்னாள் போலிக் கம்யூனிஸ்டுகள் ஆயுதங்களைப் பறித்துக் கொண்டு, தற்போதைய சர்வாதிகார அதிபர் சாலிபெரிஷாவுக்கு எதிராக கலகம் செய்கின்றனர். இதனால் அன்றாடம் கொலைகளும் சூறையாடல்களும் வழமையாகிப் போய்விட்டது. கடந்த இரு மாதங்களில் மட்டும் 400 பேர் கொல்லப்பட்டு, 2000-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். தற்போது, மக்களிடம் நம்பிக்கையூட்டுவதற்காக அனைத்து கட்சிகளும் சேர்ந்து சர்வகட்சி இடைக்கால அரசை நிறுவியுள்ளன. ஐ.நா. மன்றத்தின் தலையீட்டுக்குப் பிறகு, அமைதிப் படைகள் மூலம் மக்களுக்கு உணவுப் பொருட்களை விநியோகிப்பது, ஆயுதக் குழுக்களை நிராயுதபாணியாக்குவது, ஜூன் மாத இறுதியில் பொதுத் தேர்தலை நடத்துவது என்று சமரச உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

ஆனால் தேர்தலே அமைதியாக நடக்குமா என்பதே கேள்விக்குறியாகி விட்டது. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் மாஃபியாக்களும், சமூக விரோத ஆயுதக் கும்பல்களுமே ஆதிக்கம் செலுத்துவர் என்பது நிச்சயமாகிவிட்டது.

## பீகார் முதல்வரின் 'சமூகநீதி' ரௌடித்தனம்

பீகாரில் தொடரும் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான வன்முறை கொலை வெறியாட்டத்தைத் தடுக்கவோ, தட்டிக் கேட்கவோ வக்கற்ற முதல்வர் லல்லு, இவற்றுக்கெதிராகப் போராடிய டெல்லி மாணவர்கள் மீது தனது குண்டர் படையை ஏவி அண்மையில் தாக்குதலை நடத்தியுள்ளார். பீகாரில் மேல் சாதிவெறி குண்டர் படைகள் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது நடத்தி வரும் கொலை வெறியாட்டத்தைக் கண்டித்து ''லிபரேஷன்'' குழு எனப்படும் போலிக் கம்யூனிஸ்டுக் கட்சி, மாநிலம் தழுவிய கடையடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தது. இப்போராட்டத்தை விளக்கி, டெல்லி - நேரு பல்கலைக் கழக முன்னாள் மாணவர் சங்கத் தலைவரும், ''லிபரேஷன்'' குழுவின் செயல் வீரர்களில் ஒருவருமான சந்திரசேகர் பிரசாத், கடந்த மார்ச் 31 அன்று பீகாரிலுள்ள சிவானில் பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த போது, ஜனதா தள குண்டர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். மேடையிலிருந்த மற்ற இரு செயல்வீரர்களும் இத்துப்பாக்கிச் சூட்டில் மாண்டனர். நால்வர் படுகாயமடைந்தனர்.

இப்படுகொலையை அறிந்ததும், டெல்லி - நேரு பல்கலைக் கழக மாணவர்களும் ஆசிரியர்களும் போராட்டத்தில் இறங்கினர். அப்போது டெல்லியில் முகாமிட்டிருந்த பீகார் முதல்வர் லல்லுவை நேரில் சந்தித்து, தமது கண்டனத்தைத் தெரிவித்து, விசாரணை கோரும் மனுவைக் கொடுப்பதற்காக அவர்கள் பெரும் ஊர்வலமாகச் சென்றனர்.

பீகார் பவனத்தில் லல்லுவுடன் தங்கியிருந்த அவரது மைத்துனரும், குண்டர்படைத் தளபதியுமான சாது யாதவ், மாணவர் ஊர்வலத்தைக் கண்டு ஆத்திரமடைந்து தனது அடியாட்களுடன் வெளியே வந்தான். முதல்வர் லல்லுவுக்கு எதிராக முழங்கிக் கொண்டு, பீகார் பவனத்தை மாணவர்கள் முற்றுகையிடத் தொடங்கியதும், காவலுக்கு நின்ற போலீசாரிடமிருந்து துப்பாக்கியைப் பறித்து அவன் கண்மூடித்தனமாகச் சுடத் தொடங்கினான். பல மாணவர்கள் குண்டுக் காயமுற்று சரிந்து விழுந்தனர். இதுதவிர சாது யாதவின் அடியாட்கள் இரும்புக் கம்பிகளால் மாணவர்களைத் தாக்கி விரட்டினர். இக்காட்டுமிராண்டித் தனமான தாக்குதலால் 10-க்கும் மேற்பட்ட மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.



கொலைகார லல்லு கும்பலுக்கு எதிராக, மாண்டு போன மாணவர் தலைவர் படத்தை ஏந்தி தில்லிப் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

''என்னைக் கொல்ல மாணவர்கள் போர்வையில் மேல்சாதிக் குண்டர்கள் ஊர்வலமாக வந்தனர். தற்காப்புக்காக எனது மைத்துனர் அவர்களை விரட்டினார்'' என்று ரௌடித்தனத்துக்கு வக்காலத்து வாங்குகிறார் முதல்வர் லல்லு. அதற்கேற்ப, டெல்லி ஜனதா தளக் கட்சியினர், ஆர்.எஸ்.எஸ்-ம் ரன்பீர் சேனையும் லல்லுவைக் கொல்ல முயற்சித்ததாகக் கூறிக் கொண்டு, கோமாளித்தனமாக ஆர்ப்பாட்டமும் நடத்தியுள்ளனர்.

டெல்லியில் நடந்த ஆட்சி மாற்ற பரபரப்பில், இந்த ரௌடித்தனம் பின்னுக்குத் தள்ளப்பட்டு லல்லு கும்பல் தற்காலிகமாக இப்போது தப்பித்து விட்டது. ஆனால் இடதுசாரி சிந்தனை கொண்ட டெல்லி - நேரு பல்கலைக் கழக மாணவர்கள், லல்லு கும்பலின் 'சமூகநீதி' அட்டூழியங்களுக்கு எதிராக அடுத்த கட்ட போராட்டத்திற்கு அணிதிரண்டு வருகிறார்கள்.

## இனவெறி இஸ்ரேலுக்கு எதிராக பாலஸ்தீன மக்களின் உரிமைப்போர்

பாலஸ்தீன சுயாட்சி துரோக ஒப்பந்தம் கழிப்பறைக் காகிதமாகிப் போனதையடுத்து, யூதர்களுக்கும் பாலஸ்தீனியர்களுக்குமிடையே அவ்வப்போது நடந்து வந்த மோதல்கள் அண்மைக் காலமாக உக்கிரமடைந்துள்ளன. கடந்த மார்ச் மத்தியில், ஜெருசலேம் எல்லையை ஒட்டியுள்ள குன்றுப் பகுதியான ஜீபெல் அபுஹீரான்ய் பகுதியில் யூதர்களுக்கான குடியிருப்புகளைக் கட்ட இஸ்ரேலிய இனவெறி அரசு முற்பட்டதும், தமது பாரம்பரிய



படிப்பகம்

www.padippakam.com



மண்ணை யூதர்களுக்கு விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று பாலஸ்தீன மக்கள் போராட்டத்தில் இறங்கினர்.

கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து பாலஸ்தீனியர்களுக்கும் யூத இனவெறி போலீசுக்குமிடையே கல்வீச்சு, குண்டு தாக்குதல், துப்பாக்கிச் சூடு என மோதல்கள் தொடர்கின்றன. துப்பாக்கிச்சூட்டில் 2 பாலஸ்தீனியர்கள் மாண்டதும் அதற்குப் பழிவாங்கும் நோக்கத்தோடு, இஸ்லாமியத் தீவிரவாத ஹமாஸ் குழுவின் தலைமையில் பெருமளவில் இளைஞர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் - கல்வீச்சுத் தாக்குதல் போராட்டத்தை நடத்தினர். மறுபுறம், ஜிஹாத் குழுவினர் தலைநகர் டெல் அவிவ் -ல் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தி 3 யூதர்களைக் கொன்றொழித்தனர். யூதர்களுக்கு வீடுகள் கட்டப்படவுள்ள குன்றுப் பகுதியில் பாலஸ்தீனியர்கள் முகாம் அமைத்துக் கொண்டு தொடர்ந்து போராடி வருகின்றனர்.

1967-ல் நடந்த மத்தியக் கிழக்குப் போரின் போது பெத்லகேம் மற்றும் கிழக்கு ஜெருசலேம் பகுதிகளை இஸ்ரேல் கைப்பற்றிக் கொண்ட பிறகு, ஜெருசலேம் நகர் முழுவதையும் தனது பிளவுபடாத தலைநகரமாக அது கருதி வருகிறது. மறுபுறம், பாலஸ்தீனியர்களோ எதிர்காலத்தில் அமையவுள்ள தமது சுயாட்சிப் பிரதேசத்தின் தலைநகராக கிழக்கு ஜெருசலேமைக் கருதி வருகின்றனர். 1935-லேயே இக்குன்றுப் பகுதியை பாலஸ்தீனியர்கள் அனுபவித்து வந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. ஆனால் 1967 போருக்குப் பிறகு அதை தமது ஆட்சிக்குட்பட்ட பகுதியாக இஸ்ரேல் அறிவிக்கிறது. பாலஸ்தீனிய பகுதிகளில் யூத இன வெறியர்களைக் குடியமர்த்தி ஆக்கிரமித்துக் கொள்வதே இஸ்ரேலின் நோக்கமாக உள்ளது.

இப்பிரச்சினையையொட்டி இஸ்ரேலிய அரசுக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அராபத்துக்குமிடையே அமெரிக்க அதிபர் கிளின்டன் முன்னிலையில் நடந்த சமரசப் பேச்சு வார்த்தைகள் இன்னமும் இழுபறியிலேயே நிற்கிறது. யூதர்களுக்கு வீடு கட்டித் தரும் இஸ்ரேலின் திட்டத்தை எதிர்த்து ஐ.நா. பாதுகாப்பு சபையில் ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தபோது, அமெரிக்கா தனது ''வீட்டோ'' அதிகாரத்தைப் பயன்படுத்தி அதை ரத்து செய்து தனது விசுவாசியான இஸ்ரேலுக்கு ஆதரவாக நின்றது. இந்நிலையில் அமெரிக்காவின் சமரசக் கட்டைப் பஞ்சாயத்து எப்படியிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.



மின்வெட்டினால் பாதிக்கப்பட்ட ஆந்திர விவசாயிகள் அரசுக்கு எதிராக நடத்தும் போராட்டம்.

பாலஸ்தீன மக்களின் போராட்டம் தீவிரமடைந்ததும், அதற்கெதிராக யூத இனவெறி சக்திகளை ஐக்கியப்படுத்தவும், நெருக்கடிகளிலிருந்து தப்பிக்கவும் எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து ''தேசிய ஐக்கிய அரசு'' அமைக்க இஸ்ரேலிய இனவெறி பிரதமர் முயற்சித்து வருகிறார். மறுபுறம், பாலஸ்தீன சுயாட்சி பிரதேசங்களிலிருந்து இஸ்ரேலியப் படைகள் ஒப்பந்தப்படி முற்றாக விலகவில்லை. சுயாட்சி நிர்வாகத்துக்கு போதிய அளவு நிதி உதவியும் தரப்படவில்லை. கடைசியில், அராபத் கையெழுத்திட்ட பாலஸ்தீன சுயாட்சி ஒப்பந்தம் வெறும் காகிதக் கனவாகிப் போய்விட்டது. இந்நிலையில் துரோகிகளை முறியடித்து, தற்போதைய போராட்டத்தை விடுதலைக்கான போராட்டமாக முன்னெடுத்துச் செல்வதன் மூலமே பாலஸ்தீன மக்கள் தமது சொந்த மண்ணை இனவெறியர்களிடமிருந்து மீட்க முடியும்.

## ஆட்சியாளர்களைப் பீதியூட்டிய ஆந்திர விவசாயிகளின் போராட்டம்

ஆந்திராவில் கடந்த இரு மாதங்களாகத் தொடரும் கடுமையான மின்வெட்டு காரணமாக அம்மாநிலத்தின் தொழிலும் விவசாயமும் தீவிரமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மோட்டார் பம்பு செட்டுகளைக் கொண்டு விவசாயம் செய்து வரும் விவசாயிகளால் கடுமையான மின்வெட்டு காரணமாக விவசாயமே செய்ய முடியாமல் போய்விட்டது. பல சிறிய, நடுத்தர விவசாயிகள் கடன் வாங்கி பொருத்திய மோட்டார் பம்பு செட்டுகளும் குறைந்த மின் அழுத்தம் - மின் தடை காரணமாக எரிந்து போய்விட்டன. வாயை, வயிற்றைக் கட்டியும், கடன் வாங்கியும் மின்சார மோட்டார் பொருத்திய விவசாயிகளுக்கு அது குறைந்த மின் அழுத்தம் காரணமாக எரிந்து போனால் எப்படித்தான் வாழ முடியும். இந்த வேதனை தாளாமல் மேடக் மாவட்டம், செரிகுஞ்சனபள்ளி கிராமத்தைச் சேர்ந்த துர்கையா என்ற விவசாயி தற்கொலை செய்து கொண்டார். இதுதவிர, நல்கொண்டா பகுதியில் மேலும் இரு விவசாயிகள் மோட்டார் எரிந்து போனதால் வேதனையடைந்து தற்கொலை செய்து கொண்டனர்.

இத்தொடர் கொலைகளைக் கண்டு ஆத்திரமடைந்த மேடக், நல்கொண்டா, வாரங்கல் வட்டார விவசாயிகள், மின்சார வாரியத்தின் துணைமின் நிலையங்களைத் தன்னெழுச்சியாகத் திரண்டு தாக்கினர். மின் வாரிய ஊழியர்களை சிறைபிடித்துச் சென்று தமது கிராமங்களில் அடைத்து வைத்தனர்.

''மின் நிலையங்களைத் தாக்கி அழித்தால், அவற்றைச் சீரமைக்க பல ஆண்டுகளாகும்; இதனால் உங்களுக்கு மின்சாரம் விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டு விவசாயம் பாதிக்கப்படும், எனவே மின் நிலையங்களைத் தாக்காதீர்கள்; மின் வாரிய ஊழியர்களை விடுதலை செய்யுங்கள்'' என்று அரசும் மின்துறையும் கெஞ்சிய பிறகு மின்வாரிய ஊழியர்களை விவசாயிகள் விடுவித்தனர். பின்னர், விவசாயிகள் தமது எரிந்து போன மோட்டார்களுடன் தலைநகர் ஐதராபாத்தில் திரண்டு ஊர்வலம் நடத்தியதோடு, சட்டமன்றம் முன்பாக ஆர்ப்பாட்டமும் நடத்தினர்.

மறுபுறம் மின்வாரிய ஊழியர்களோ, ஆந்திர அரசு மின்துறையை தனியார்மயமாக்க மேற்கொள்ளும் முயற்சிகளால் மின் வாரியம் புறக்கணிக்கப்படுவதாகவும், போதிய மின்சாதனங்கள் இல்லாததாலேயே மின் அழுத்தம் குறைந்து பாதிப்பு ஏற்படுவதாகவும் கூறி, தனியார் மயமாக்கும் கொள்கையை எதிர்த்து போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

தொழிலாளர் - விவசாயிகளைப் பிரித்து மோதவிட முடியாமல், இரு வர்க்கங்களுமே இப்போது அரசுக்கு எதிராக அணிதிரள்வதைக் கண்டு ஆந்திர அரசு பீதியில் உறைந்து போயுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## கொல்லைப்புற ஆதிக்கம்

இந்தியப் பங்குச் சந்தையில் நுழைந்துள்ள அந்நிய முதலீட்டு நிறுவனங்கள், கொல்லைப்புற வழியாக அரசுத்துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களை விழுங்கி வருகின்றன. இந்திய ரிசர்வ் வங்கி சமீபத்தில் 21 நிறுவனங்களின் பெயர்களை வெளியிட்டு, அந்நிறுவனத்தின் பங்குகளை இனியும் அந்நிய முதலீட்டு நிறுவனங்களுக்கு விற்கக் கூடாது என உத்தரவிட்டுள்ளது. இந்நிறுவனங்களுள் இந்திய அரசு வங்கியும் ஒன்று. இவ்வங்கியின் 20 சதவீதப் பங்குகள் தற்பொழுது அந்நிய முதலீட்டு நிறுவனங்களின் கைகளில் உள்ளன.

## மாஃபியாக்களுக்கு ஓட்டுக் கட்சிகளின் சன்மானம்

மகாராட்டிரா மாநில காங்கிரசு கட்சி, அருண் காவ்லி என்ற மாஃபியா தலைவனின் மருமகனான சசின் ஹரை, தனது கட்சி சார்பான ராஷ்ட்ரிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராக நியமித்தது. இதற்குப் போட்டியாக பா.ஜ.க. - சிவசேனா கூட்டணி அரசு, பம்பாய் மாநகராட்சி கல்விக் கமிட்டியின் தலைமைப் பதவியை நீதா நாயக் என்பவருக்கு வாரி வழங்கியுள்ளது. நீதா நாயக் யார் தெரியுமா? அருண் காவ்லியின் பரம விரோதியான அஷ்வின் நாயக் என்ற மாஃபியா தலைவனின் மனைவி. சபாஷ் சரியான போட்டி!

## குழந்தைகளின் கோரிக்கை

பீகார் மாநிலத்தில் பிராம்பூர் கிராமத்திலுள்ள இடைநிலைப் பள்ளியில் 3,4,5 ஆம் வகுப்புகளில் பயிலும் சிறார்கள் அனைவரும் தங்கள் ஆசிரியர்களிடம், "பாடங்களை வாய் வழியாக நடத்தாதீர்கள்; கரும்பலகையில் எழுதிப் போட்டு நடத்துங்கள்" எனக் கோரி வருகின்றனர். ஒவ்வொரு நாளும் அக்குழந்தைகள் இதை ஒத்த குரலில் சொன்ன பின்னர் தான், அப்பள்ளியில் வகுப்புகளே தொடங்கும். நான்கு வருடங்களாக இந்த அவலம் தொடர்வதற்கு ஆசிரியர்களைக் குறை கூற முடியாது. அப்பள்ளியில் கரும்பலகையோ, சாக்பீஸ் போன்ற எழுது பொருட்களோ, துடைப்பானோ இல்லை என்பதுதான் உண்மை. அப்பள்ளிக்கு லல்லு அரசு கொடுக்கும் வருடாந்திர உதவித் தொகை எவ்வளவு தெரியுமா? வெறும் 200 ரூபாய்!

## ரசியப் போலிகளுக்கு எதிராக...

லெனினின் 128-ஆவது பிறந்த தினமான ஏப்ரல் 22 அன்று, லெனினது உடலுக்கு அஞ்சலி செலுத்த பல்லாயிரக்கணக்கான மக்கள் செஞ்சதுக்கத்தில் திரண்டனர். அப்பொழுது ரசிய போலி கம்யூனிஸ்ட் கட்சி தலைவரான கென்னடி ஜுகானவும் அங்கு வந்தார். அவரைக் கண்டவுடன் பல இளைஞர்கள் "யெல்ட்சினின் கூட்டாளி ஜுகானவ்" என முழக்கமிட்டு, அத்துரோகியின் மீது அழுகிய முட்டைகளையும், உருளைக் கிழங்குகளையும் வீசியெறிய முனைந்தனர். பதறிப் போன ஜுகானவின் பாதுகாவலர்கள், அவ்விளைஞர்களைச் சுற்றி வளைத்து தங்கள் தலைவனைக் காப்பாற்றிச் சென்றனர்.

## சந்திரிகாவின் குரூரப் புத்தி

ஈழத் தமிழர்களை தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பிச் செல்ல நிர்ப்பந்தம் கொடுக்கும் முகமாக, வவுனியாவிலுள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருக்கும் 15,500 ஈழ அகதிகளுக்கு நிவாரணப் பணம் கொடுத்து வந்ததை சந்திரிகா அரசு நிறுத்தி விட்டது. மறுபுறம், இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள யாழில், தமிழ் மக்களுடன் நல்லுறவைப் பேணுவது என்ற பெயரில் தமிழ் வருடப் பிறப்பன்று அழகிப் போட்டியொன்றை நடத்தி தனது வக்கிர முகத்தையும் காட்டிக் கொண்டது, சிங்கள இனவெறி அரசு. இதோடு, தமிழ் படிக்கும் சிங்கள இராணுவ வீரர்களுக்கு 750/- ரூபாய் வரை 'ஊக்கத் தொகை' வழங்கும் பாசிசக் கோமாளித் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தி வருகிறது.

ஈழத் தமிழர்களின் அகதி வாழ்க்கைக்கு என்றுதான் முடிவு?



## இந்துமத வெறிக்கா மக்களின் வரிப்பணம்?

மக்களுக்குத் தேவையான குடிநீர், சுகாதாரம், மருத்துவ வசதிகளைச் செய்து தர பணம் இல்லை என நீலிக் கண்ணீர் வடித்து வருகின்றனர் ஆட்சியாளர்கள். ஆனால், இந்து மதவெறி வானரங்கள் பாபர் மசூதியை இடித்து விட்டு, அவ்வளாகத்தில் சட்ட விரோதமாகக் கட்டியுள்ள இராமர் கோயிலின் பாதுகாப்புக்காக மட்டும் மாதமொன்றுக்கு 1.25 கோடி ரூபாயைச் செலவிடுகிறது அம்மாநில அரசு. கடந்த ஏழு ஆண்டுகளில் இப்பிரச்சினைக்காக மக்களின் வரிப் பணத்தில் இருந்து செலவழிக்கப்பட்ட நூறு கோடி ரூபாயை இந்து மதவெறி அமைப்புகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து ஈடுகட்ட வேண்டும்.

## அரசைத் திவாலாக்குகிறார்கள்

இரு பெரும் நிறுவனங்கள் ஒன்றாக இணையும்பொழுது, அவற்றின் சொத்து மதிப்பில் 10 சதவீதம் பத்திர வாரியாகச் செலுத்த வேண்டும் என்ற சட்டம் மகாராஷ்டிராவில் இருந்து வந்தது. இந்த ஆண்டு பட்ஜெட்டில், இச் சட்டத்தைத் தளர்த்தி வரலாறு காணாத வரிச் சலுகையை அறிவித்தது பா.ஜ.க. - சிவசேனா கூட்டணி. இதனால், இவ்வரிச் சலுகை அறிவிக்கப்பட்ட பின் இணைந்த இந்துஸ்தான் லீவர் - ப்ரூக் பாண்ட் நிறுவனங்களுக்கு 610 கோடி ரூபாய் வரி கட்ட வேண்டிய தேவையில்லாமல் போய்விட்டது. அடுத்து இணையவுள்ள எஸ்.சி.ஐ.சி.ஐ - ஐ.சி.ஐ.சி.ஐ. நிறுவனங்கள் 112 கோடி ரூபாய் இலாபமடையப் போகின்றன.

## டியு பாண்டின் ஆள் கடத்தல்

கும்மிடிபூண்டிக்கு அருகேயுள்ள மொடரப்பாக்கத்தைச் சேர்ந்த இளைஞர் கார்த்திகேயன், அப்பகுதியில் தொடங்கவுள்ள தாபர் - டியுபாண்ட் ஆலையில் பயிற்சியாளராகப் பணியில் சேர்ந்தார். கர்நாடக மாநிலம் தார்வாரில் பயிற்சி பெறச் சென்ற இவர், கடந்த 18.2.96 தொடங்கி பயிற்சிக்கு வரவில்லை எனக் கூறி வருகிறது, நிர்வாகம். ஒரு வருடத்துக்கு மேலாகியும் இன்னும் இவர் வீடு திரும்பவில்லை. "டியுபாண்ட் ஆலையால் சுற்றுப்புறச் சூழல் மாசுபடலாம்" எனச் சந்தேகம் கொண்டிருந்த இவரை, நிர்வாகமே சட்டவிரோதமாகக் காவலில் அடைத்து வைத்திருக்கலாம் எனக் குறிப்பிட்டு, ஆள் கொணர்வு மனுவொன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் இம்மனுவிற்குப் பதில் அளிக்கும்படி டியுபாண்ட் நிர்வாகத்திற்கு ஆணையிட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# கேள்வி பதில்



● *சென்னை - கும்மிடிப்பூண்டி ஆலையை எதிர்க்கும் கூட்டு நடவடிக்கைக் குழுவில் தன்னார்வக் குழுக்களோடு முற்போக்கு இளைஞர் அணியும், உலக அழகிப் போட்டியை எதிர்த்து மதுரையில் தன்னார்வக் குழுக்களோடு தமிழ்நாடு பெண்ணுரிமைக் கழகம் என்ற அமைப்பும் சேர்ந்து போராடுகின்றனர். புதிய ஜனநாயகப் புரட்சியை ஆதரிப்பதாகக் கூறும் இவர்கள் தன்னார்வக் குழுக்களோடு சேரக் கூடாது என்பதை துச்சமாக மதிப்பது ஏன்?*

**- கிரி, சென்னை-11.**

★ "தன்னார்வக் குழுக்களுடன் கூட்டுச் சேருவதை எதிர்க்கிறோம். அதாவது நேரடியாகவும் அவர்களோடு மட்டும் கூட்டு சேருவதையும் தான் எதிர்க்கிறோம். ஆனால் பிற அமைப்புகளோடு சேர்ந்து கூட்டு நடவடிக்கைக்குப் போகும்போது தன்னார்வக் குழுக்களும் அவற்றில் இருந்தால் புரட்சிகர அமைப்புகள் பங்கேற்பதில் தவறில்லை" என்பதுதான் முற்போக்கு இளைஞர் அணி போன்ற அமைப்புகளின் நிலைப்பாடு என்று விளக்குகின்றனர். "இதன்மூலம் தன்னார்வக் குழுக்கள் புரட்சிகர இயக்கங்களுக்குள் ஊடுருவுவதையும் அரசியல், சித்தாந்த, அமைப்பு பூர்வமாக சீர்குலைப்பதையும் தடுத்து விடமுடியும்; அதேசமயம் புரட்சிகர சக்திகளை வென்றெடுத்து வளர்க்கவும் முடியும்" என்று வாதிடுகின்றனர். தன்னார்வக் குழுக்கள் வேண்டுவதெல்லாம் புரட்சிகர சக்திகளுடன் "ஒரு உரையாடல்"தான். அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு ஒரு வாய்ப்பு மட்டும்தான். அதைத் தனியாகவும் நேரடியாகவும் செய்ய முடியாது என்றால் பிற அமைப்புகளையும் இணைத்துக் கொண்டு வருவதில் தயக்கமோ, சிக்கலோ எதுவுமில்லை. ஆனால் முற்போக்கு இளைஞர் அணி தன்னார்வக் குழுக்களுடன் கூட்டுச் சேர்வதை நியாயப்படுத்தும் ஒரு உப்புச்சப்பற்ற வாதம்தான் பேசுகிறது என்பது வெளிப்படை. தனித்த முறையில் பணியாற்றி மக்களை அணிதிரட்ட முடியும் என்கிற அரசியல் ஆளுமையின் மீது தன்னம்பிக்கையற்ற நிலைதான் இதற்குக் காரணம். ராமதாஸ், நஞ்சுண்ட சாமி என்று யாரையாவது பிடித்துத் தொங்கினால் கரையேறிவிடலாம் என்ற நம்பிக்கையின் நீட்டிப்புதான் இது. இங்கை விட கர்நாடகா, மராட்டிய மாநிலங்களில் எல்லாம் தன்னார்வக் குழுக்களின் இளைய பங்காளிகளாகக் கூட இவர்களின் கிளை அமைப்புகள் இயங்குவதை என்ன சொல்வது!

**★ தன்னார்வக் குழுக்களுடன் சேர்ந்து போராடலாமா?**

**★ புதிய ஜனநாயகம் என ஏன் வடமொழி எழுத்தைப் பயன்படுத்துகிறீர்கள்?**

**★ தீண்டாமை - சாதி ஒழிப்பிற்கும், புதிய ஜனநாயகப் புரட்சிக்கும் இடையேயான இயங்கியல் உறவு பற்றி....**

● *சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம் தமிழ் மொழியை சிதைப்பதையும், மேலாண்மை செய்வதையும் எவ்வகையில் எதிர்க்கிறீர்கள்? எதிர்க்கிறீர்கள் என்றால் புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் என இதழ் பெயர்களை வைத்திருப்பது ஏன்?*

**— சுகம. செந்தில், திருப்பழனம்.**

● *தங்களுடைய அரசியல் ஏடான புதிய ஜனநாயகத்திற்கு. அதன் பெயரை தமிழில் போட்டால் என்ன? புதிய ஜனநாயகம் என ஏன் வடமொழி எழுத்தைப் பயன்படுத்த வேண்டும்?*

**— ப.சு. மகாதேவன், பருக்கல்.**

★ வடமொழி (சமசுக்கிருதம்) இந்தி, ஆங்கிலமும் தமிழ் மொழியைச் சிதைப்பதையும், மேலாண்மை செய்வதையும் எதிர்க்கும் பணிகளை தோழமை அமைப்பான ம.க.இ.க மேற்கொண்டு வருகிறது. தமிழ் மொழி, தமிழினத்தின் மீது மொழி - இன, பார்ப்பனிய ஆதிக்கத்தை எதிர்த்து "இந்து - இந்தி - இந்தியா" என்ற தலைப்பில் ம.க.இ.க. அணிகளிடையே வகுப்புகள், விவாதங்கள் நடத்தியும், அதையே புதிய கலாச்சாரத்தில் தொடராக எழுதியும் அதன் அடிப்படையில் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறோம். கருவறை நுழைவுப் போராட்டத்திலும், ஆண்டுதோறும் நடத்தும் தமிழ் மக்கள் இசை விழாவையொட்டியும் இந்தப் பணி ஓர் அங்கமாக உள்ளது. தொடர்ந்து ஐந்து நட்சத்திர ஆபாச - அந்நியக் கலாச்சார எதிர்ப்பில் ஆங்கில மோகம் அம்பலப்படுத்தப்படுகிறது. "கிசுகிசு" ஏடுகளின் "மணிப்பிரளவ" நடையின் மூலம் ஆங்கிலத்தை திணித்து தமிழைக் கொச்சைப்படுத்துவதை எதிர்க்கிறோம்.

*சரியான பொருள் தருபவை, பிரபலமாக புழக்கத்தில் உள்ளவை என்பதால்தான் ஜனநாயகம், கலாச்சாரம் போன்றவற்றைப் பயன்படுத்துகிறோமே தவிர, வடமொழி - இந்தி மோகத்தால் அல்ல; தமிழ் மீதான பற்றுக் குறைவினால் அல்ல.*

எமது பத்திரிக்கைப் பெயர்கள் பற்றிய இதே கேள்விக்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே பதிலளித்துள்ளோம். சரியான பொருள் தருபவை, பிரபலமாகப் புழக்கத்தில் உள்ளவை என்பதால் தான் ஜனநாயகம், கலாச்சாரம் போன்றவற்றை பயன்படுத்துகிறோமே தவிர வடமொழி, இந்தி மோகத்தால் அல்ல; தமிழ் மீதான பற்றுக்குறைவினால் அல்ல. ஜனநாயகம், கலாச்சாரம் ஆகிய சொற்களுக்குத் தரப்படும் மாற்றுச் சொற்கள் அவற்றின் முழுமையான பொருளைத் தரவில்லை. தென்மொழி போன்ற தனித்தமிழ் ஏடுகளே கூட சரியான முழுமையான பொருள்தர முடியாமற்போகும்போது அடைப்புக் குறிக்குள் ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துவதைக் காணலாம். மாற்றுமொழித் திணிப்பைத்தான் எதிர்க்கிறோமே தவிர, வெவ்வேறு மொழியினர் இயல்பாகக் கலந்துறவாடும்போது மொழிக்கலப்பு ஏற்படுவதை நாம் எதிர்ப்பதில்லை. சுகதுக்கம்,



படிப்பகம்

www.padippakam.com

கோவணம் போன்றவை வடநாட்டு மக்களிடையே சிறிது பிறழ்ந்து பயன்படுத்தப்படுவதைக் காணும் போது வியப்பாக உள்ளது. அப்படிப் புழக்கத்தில் வந்ததை ஏற்பது தவறில்லை.

● ***திருமாவளவன் தலைமையிலான தலித் சிறுத்தைகள், தலித் போராட்டத்தை தலித் தலைமையில் முதன்மையாகக் கொண்டு நடத்திய பின்தான் வர்க்கப் போராட்டம் நடத்தவேண்டும் என்றும் வர்க்கப் போராட்டம் பேசும் மார்க்சிய லெனினியவாதிகள் மக்கள் விரோதிகள், தலித்துகளின் துரோகிகள் என்றும் குற்றம் சாட்டுகிறார்கள். எடுத்துக்காட்டாக: சென்னை செல்ல வேண்டும் என்றால் திண்டிவனம் வழியாகத்தான் செல்லவேண்டும், அப்படி செல்ல மாட்டோம்; (பைபாஸ்) புறவழிச் சாலை வழியாகத் தான் செல்வோம் என்பது சரியல்ல என்கிறார்கள். புரட்சி என்பது இரத்தக் கலரியில் நடத்தப்படுவது, ஆனால் இவர்கள் தலித் போராட்டத்துக்கு இரத்தம் சிந்த மறுப்பது, என்ன அரசியல் சித்தாந்தம் தெரியும் இவர்களுக்கு என்று சாடுகிறார்கள். இதுபற்றிய உங்கள் கருத்தென்ன?***

— செல்வன், நெய்வேலி.

★ இதையாவது அரசியல் ரீதியான விமர்சனம் என்று கருதலாம். ஆனால் இதைவிட எமது அமைப்புகளுக்கும் அவற்றின் தலைமைகளுக்கும் எதிராக சில அரசியலற்ற சில அவதூறுகளை திருமாவளவன் கதைத்து வருவதாக அறிகிறோம். இருக்கட்டும். ''தலித் விடுதலை''ப் போராட்டமும் வர்க்கப் போராட்டமும் தனித்தனியானது; ஒன்றை முடித்து, மற்றொன்றை எடுப்பது என்று வேறுவேறு கட்டத்துக்கானது; முதலில் தீண்டாமை ஒழிப்பு அப்புறம் சாதி ஒழிப்பும் வர்க்கப் போராட்டமும்; வர்க்கப் போராட்டம் முதலில் பிறகு தீண்டாமை, சாதி ஒழிப்பு என்ற திட்டத்தில் எல்லாம் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. ஏகாதிபத்திய ஆதிக்கத்தோடு, நிலப்பிரபுத்துவம் உட்பட முதலாளித்துவத்துக்கு முந்திய எல்லா சமுதாய அமைப்பு - ஒழுங்கு முறைகளையும் தகர்த்திடும் சமுதாயப் புரட்சியை இறுதி இலட்சியமாகக் கொண்ட புதிய ஜனநாயக புரட்சியே எங்கள் திட்டம்.

புதிய ஜனநாயகப் புரட்சி செய்வது - அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பதே, தற்போதுள்ள அரசியல் - சமுதாய அதிகாரம் - ஆதிக்கத்தைத் தகர்ப்பதிலிருந்துதான் தொடங்குகிறது. சாதி, தீண்டாமை அமைப்பை அப்படியே வைத்துக் கொண்டு தனியே புதிய ஜனநாயகப் புரட்சி நடத்துவதைப் பற்றி யாரும் கற்பனை கூடச் செய்ய முடியாது. தலித் சிறுத்தைகள் உட்பட அம்பேத்காரிய - பெரியாரியவாதிகள் எவரிடமாவது அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான, சாதி - தீண்டாமை ஒழிப்புக்கான திட்டமோ வழிமுறையோ ஏதாவது இருக்கிறதா?

போலிக் கம்யூனிஸ்டுகளின் வாதமாகிய, ''பொருளாதார மாற்றம் வரவர சாதி அமைப்பு தானாகத் தகர்ந்துவிடும், சமுதாய சமத்துவத்தைக் கொண்டு வருவதற்கு பொருளாதார சமத்துவம் முன் நிபந்தனை'' போன்றவற்றை நாங்கள் ஒரு போதும் ஏற்றதில்லை. அதேபோல பெரியாரிய, அம்பேத்காரியவாதிகளின் வாதமாகிய, ''உலகின் பிற நாடுகளில் இருந்து விதிவிலக்காகிய சாதிய அமைப்புக் கொண்ட இந்தியாவில் சமுதாய மாற்றம் - சாதிப் பிரச்சினை தீர்ந்தால் தான் வர்க்கப் போராட்டத்தை நடத்திட முடியும், சமுதாயப் புரட்சி வர்க்கப் போராட்டத்துக்கு முன் நிபந்தனை'' போன்றவற்றை நாங்கள் ஏற்றதில்லை.

பொருளாதார மாற்றமா? சமுதாய மாற்றமா? எது பிரதானமானது, முதன்மையானது? என்கிற கேள்விகளை எழுப்பி இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்வதே தவறானது. இப்படிச் செய்வது இரண்டு மாற்றங்களுக்குமே முன் நிபந்தனையான, முதன்மைப் பணியாகிய அரசியல் புரட்சியைப் புறக்கணிப்பதாகும். இதைத்தான் ஒருபுறம் போலிக் கம்யூனிஸ்டுகளும் மறுபுறம் அம்பேத்காரிய - பெரியாரிய வாதிகளும் செய்கின்றனர். இவ்விரு தரப்பாருமே தாம் முன்னிறுத்தும் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு முன் வைக்கும் வழிவகைகளில் வியத்தகு ஒற்றுமை இருப்பதைக் கவனித்தீர்களா! அதாவது, நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு வரம்புக்குட்பட்டு அதன் மூலமாகவே நிவாரணங்கள் - சலுகைகள் பெறுவது, தொழிற் சங்கவாத இயக்கங்கள் — கோரிக்கைகளை நடத்துவது, கூட்டணி அரசுத் திட்டங்கள் மூலமாகவே பொருளாதார மாற்றங்களைப் படிப்படியாகக் கொண்டுவருவது போலிக் கம்யூனிஸ்டுகளின் திட்டம் - செயல்பாடாக உள்ளது; அதே வரம்புக்குட்பட்டு இட ஒதுக்கீடு, இலவசப்பட்டா போன்ற சீர்திருத்தங்கள் மூலமாகவே சமுதாய மாற்றத்தை, சாதி-சமத்துவத்தை அடைவது பெரியாரிய - அம்பேத்காரியவாதிகளின் திட்டம் - செயல்பாடாக உள்ளது.

இவற்றுக்கு மாறாக நாங்கள் முன் வைக்கும் புதிய ஜனநாயகப் புரட்சி ஏற்கனவே உள்ள அதிகார வர்க்க - இராணுவ அரசியல் அமைப்பைத் தகர்த்து புதிய, புரட்சிகர ஜனநாயக அரசை நிறுவும் அரசியல் புரட்சியை பிரதானமான, முதன்மையான பணியாகக் கொண்டுள்ளது. விவசாயிகளின் விவசாயப் புரட்சியை சாராம்சமாகக் கொண்டுள்ள இந்தப் புதிய ஜனநாயகப் புரட்சி சாதி, தீண்டாமை ஒழிப்பை உள்ளடக்கமாகக் கொண்டிருக்கும். புதிய ஜனநாயகப் புரட்சி நடந்தால் சாதி, தீண்டாமை போன்றவை தானாகவே ஒழிந்து விடும் என்று நாங்கள் கூறவே இல்லை. முதலில் வர்க்கப் புரட்சி பிறகு சாதி, தீண்டாமை ஒழிப்பு என்று இரண்டு கட்டமாக நடத்துவதாகவும் கூறவில்லை. புதிய ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றும் முன்னணி அரசியல், இராணுவ அமைப்பு உட்பட பிற மக்கள் திரள் அமைப்புகளே சாதி, தீண்டாமை பாராட்டுவதாக இருக்க முடியாது. புதிய ஜனநாயகப் புரட்சி செய்வது - அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பதே தற்போதுள்ள அரசியல் - சமுதாய அதிகாரம் - ஆதிக்கத்தைத் தகர்ப்பதில் இருந்துதான் தொடங்குகிறது. சாதி, தீண்டாமை அமைப்பை அப்படியே வைத்துக் கொண்டு தனியே புதிய ஜனநாயகப் புரட்சி நடத்துவதைப் பற்றி யாரும் கற்பனை கூடச் செய்ய முடியாது. புதிதாக நிறுவப்படும் அரசு அதிகாரத்தின் கீழ் சாதி, தீண்டாமை பாராட்டுவது கடும் குற்றமாகக் கருதப்பட்டு தண்டிக்கப்படும். புதிய அரசு அதிகாரத்தில் பங்கேற்கும் உழைக்கும் மக்களில் மிகப் பெரும்பான்மையானோர் முந்தைய சமுதாயத்தின் ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் இப்போதுள்ளதைப் போன்று அத்தகைய தண்டனைச் சட்டங்கள் வெறும் சடங்காக இல்லாமல், உண்மையில் அமலாக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

இதற்கு மாற்றாக, தலித் சிறுத்தைகள் உட்பட அம்பேத்காரிய - பெரியாரியவாதிகள் எவரிடமாவது அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான, சாதி - தீண்டாமை ஒழிப்புக்கான திட்டமோ, வழிமுறையோ ஏதாவது இருக்கிறதா என்று கவனியுங்கள். அப்போது புரியும் ''இரத்தம் சிந்துவது'', ''இரத்தக் கலரி'', ''புரட்சி'' என்றெல்லாம் இந்தச் ''சிறுத்தைகள்'' உறுமுவது வெறும் சவடால்தான்! தலித் மக்களுக்கான ஆயுதந்தாங்கிய நடவடிக்கைகள் என்பது கூட மார்க்சிய - லெனினிய அமைப்புகள் நடத்துபவைதாமே தவிர ''தலித்தியம்'' பேசுபவர்களிடம் இருந்து இப்படிப்பட்ட சவடால்களைத்தானே கேட்க முடிகிறது!

☆ ☆ ☆



படிப்பகம்

# குழந்தை உழைப்பாளர் கணக்கெடுப்பு

## முதலாளிகளுக்குச் சாதகமாய் முடிந்தது

சிவகாசி என்றாலே தீப்பெட்டியும் பட்டாசு, அச்சகங்களும் உடனே நினைவில் வரும். குட்டி ஜப்பான் என பெருமைப்பட்டுக் கொள்வார்கள்.

ஆனால் அந்த கந்தக பூமியில் பிழைக்க வேறு வழியின்றி தீப்பெட்டி, பட்டாசு ஆலைகளில் தீயில் எரிந்தும், வெடி விபத்தில் வெடித்துச் சிதறியும் சாகின்ற ஆயிரக்கணக்கானவர்கள் பற்றி யாருக்கும் தெரியாது. இதில் மிகப் பெரும் கொடுமை என்னவென்றால் சாகின்றவர்களில் மிகப் பெரும்பாலவர்கள் குழந்தைத் தொழிலாளர்கள். ஆனால் இவர்களின் கணக்கே வெளியில் வராது.

பல்லாயிரக்கணக்கான குழந்தைத் தொழிலாளர்கள் சிவகாசி தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலும் பட்டாசுத் தொழிற்சாலைகளிலும் வேலை செய்கின்றனர். இவர்கள் கொடூரமாகச் சுரண்டப்படுகின்றனர். இவர்களின் நலனுக்குப் போடப்பட்ட சட்டங்கள் இருட்டறைகளில் கிடக்கின்றன. இந்தியா முழுவதிலும் இதே போன்ற நிலைதான்.

குழந்தைத் தொழிலாளரின் நலனை நிலைநாட்ட மேத்தா என்பவர் டில்லி உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். அதன் அடிப்படையில் நாடு முழுவதும் உள்ள குழந்தைத் தொழிலாளர் பற்றிய புள்ளி விவரங்களை ஜூன் இறுதிக்குள் தரவேண்டும் என எல்லா மாநிலங்களுக்கும் உத்தரவிட்டது உச்ச நீதிமன்றம்.

இதை நிறைவேற்ற காமராஜ் மாவட்ட ஆட்சியர், வருவாய்த் துறை அதிகாரிகளைக் கொண்ட 52 குழுக்களைக் கூட்டினார். இவர்கள் பிற பகுதிகளில் கணக்கெடுத்த போது பிரச்சினை ஏதுமில்லை. ஆனால் சிவகாசியில் கணக்கெடுப்பைத் தொடங்கியதுமே முதலாளிகள் எதிர்க்கத் தொடங்கிவிட்டனர்.

சிவகாசியில் மட்டும் 500 பெரிய தீப்பெட்டி தொழிற்சாலைகள் உள்ளன. சுற்றுப்பட்டு கிராமங்களில் 1000 தொழிற்சாலைகள் உள்ளன. அதிகாரிகள் முதலில் நகருக்குள் உள்ள பெரிய தொழிற்சாலைகளில் அதிரடியாக நுழைந்தனர். உடனடியாக குழந்தைத் தொழிலாளர்களை மறைத்து வைக்கவோ, வேட்டி, சேலை அணிவித்து பெரிய ஆட்களாக வேசம் போடவோ வழியின்றி மாட்டிக் கொண்டனர். குழந்தைத் தொழிலாளர்கள் தமது உண்மை வயதை சொல்ல, அதை மறுத்தது நிர்வாகம்.

எனவே அதிகாரிகள் அக் குழந்தைத் தொழிலாளர்களிடமே கையெழுத்து வாங்கி வயதைப் பதிவு செய்தனர். முதலாளிகள் சங்கம் இதைக் கடுமையாக எதிர்த்தது. அதிகாரிகள் தொழிலாளர்களை மிரட்டி, எழுதி வாங்கி விட்டனர் என கூசாமல் பொய் சொன்னது மட்டுமின்றி போராடுவதாக அறிவித்தனர்.

மாவட்ட கலெக்டர் முன்னிலையில் இரண்டு சுற்று பேச்சு நடத்தும் முடிவுக்கு வரவில்லை. எனவே ஏப்ரல் 12-ல் வேலை நிறுத்தம் தொடங்கியது. எல்லா தீப்பெட்டி தொழிற்சாலைகளும், இவர்களுக்கு ஆதரவாக பட்டாசு தொழிற்சாலைகளும் இழுத்து மூடப்பட்டன. சுமார் 3.75 லட்சம் தொழிலாளர்கள் வேலை இழந்தனர்.

கிராமப்புற அன்றாடங் காய்ச்சி விவசாயிகளைப் போலவே தொழிலாளிகளில் மிகப் பலரும் தினசரி கூலி வாங்கிதான் வீட்டில் உலை வைக்கின்றனர். அவர்களின் வயிற்றிலடித்து முதலாளிகள் கதவடைப்புப் போராட்டம் நடத்தினர். எதற்காக? குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய உண்மைகள் வெளியாகக் கூடாது என்பதற்காக!

மீண்டும் பேச்சு வார்த்தை நடந்தது. ஆறாவது நாள் அமைச்சர் நேரில் வந்தார். 'தீப்பெட்டி தொழிற்சாலைகளை அரசு பாதுகாக்கும். அதற்குரிய நடவடிக்கைகளை அரசு நிச்சயம் எடுக்கும்' என்று மந்திரி உறுதியளித்தார். முதலாளிகளின் கோரிக்கை ஏற்கப்பட்டது.

1. குழந்தைத் தொழிலாளர்கள் கணக்கெடுப்பு உடனடியாக நிறுத்தி வைக்கப்படும்.
2. கணக்கெடுப்பு நடந்தால் அதன் பிரதி ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் அனுப்பப்படும்.
3. படிவம் 5-ஐ ஏற்றுக் கொள்வது பற்றி பின்னர் முடிவு செய்யப்படும்.

ஆக, உச்ச நீதிமன்றம் உத்தரவு குப்பைக் கூடையில் போடப்பட்டது. முதலாளிகளுக்கு ஆதரவாக தமிழக அரசு செயல்படுகிறது. தொழிலாளிகள் போராடினால் துப்பாக்கித் தோட்டாக்களைப் பரிசளிக்கும் அதே தமிழக அரசுதான்!

ஜெயலலிதா ஆட்சியின் போது தமிழகத்திலுள்ள கொத்தடிமைகள் பற்றிய புள்ளி விவரம் கேட்டது உச்ச நீதிமன்றம். கொத்தடிமைகளே இல்லை என்றது 'ஜெ' அரசு. உச்ச நீதி மன்றம் கமிஷனர் சிராஜ் கேட் என்பவரைக் கொண்டு நேரடியாக விசாரணை நடத்தியது. ஓராண்டுக்குப் பின் தமிழகத்தில் 10 லட்சம் கொத்தடிமைகள் உள்ளதாக அவர் கண்டறிந்தார். சேலம், தர்மபுரி, புதுக்கோட்டை, கோவை, வடாற்காடு, திருச்சி மாவட்டங்களில் அதிகளவு கொத்தடிமைகள் உள்ளனர். வேறு மாநிலங்களிலும் தமிழர்களே அதிகளவு கொத்தடிமைகளாக உள்ளனர்.

இதில் ஆகக் கொடுமையானது சிவகாசி தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் 3,200 குழந்தைத் தொழிலாளர்களே கொத்தடிமைகளாக உள்ளனர் என்பதுதான்.

குழந்தைத் தொழிலாளர்கள் கூடாது என்கிறது சட்டம். இங்கோ குழந்தைத் தொழிலாளர்கள் கொடூரமாக சுரண்டப்படுகின்றனர். அதிக வேலை நேரம்; உழைப்பு கூலியோ மிகக் குறைவு. மேலும் பாலியல் வன்முறைகளுக்கும் ஆளாக்கப்படும் அவலம். உயிருக்கும் உத்தரவாதமில்லை. கல்வி மறுக்கப்படுகிறது. உரிய சலுகைகள் கிடையாது. இக் குழந்தைத் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாகவும் உள்ளனர் என்றால் அக் கொடுமைகளை எழுத்தில் வடிக்க முடியாது.

இந்த அவலம் பற்றி அறியவும், நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட்ட உச்சநீதிமன்ற உத்தரவை நிறுத்தவே முதலாளிகள் போராடினர். வெற்றி பெறச் செய்துள்ள தமிழக அரசின் 'கருணை'யை என்னென்பது!

உச்ச நீதிமன்றம்

இலவசக் கல்வி கேட்டுப் போராடும் குழந்தைத் தொழிலாளர்கள். பறித்துக் கொள்ளப்பட்ட குழந்தைப் பருவத்து ஆசைகள் இன்னும் ஏராளம்!



www.padippakam.com

சட்டத்தை நிலைநாட்ட, குழந்தைத் தொழிலாளரின் அவலத்தைப் போக்க இந்நடவடிக்கையை எடுத்துள்ளது என யாரும் மயங்கி விட வேண்டாம். ஏற்கனவே உலக வர்த்தகக் கழகம் (WTO) குழந்தைத் தொழிலாளரைக் கொண்டு உற்பத்தியான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுவதை தடை செய்துள்ளது. ஆயத்த ஆடைகள் உற்பத்தி செய்வதை வாங்க மாட்டோம் என அறிவித்து நெருக்கடி ஏற்படுத்தியது. சர்வதேச அளவில் குழந்தைத் தொழிலாளர்கள் கூடாது என்கிறது. அப்படியானால் உலக வர்த்தகக் கழகமும் அதை நடத்தும் அமெரிக்கா போன்ற ஏகாதிபத்தியங்களும் உத்தமர்களா என்றால் அதுவும் இல்லை.

அமெரிக்கா, இத்தாலி, இங்கிலாந்து, ஸ்பெயின், போர்த்துக்கல் போன்ற நாடுகளிலும் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர். இவர்கள்தான் இந்தியா போன்ற மூன்றாம் உலகிலுள்ள குழந்தைத் தொழிலாளர்கள் அவலத்தைப் போக்க வந்த உத்தமர்களாக வேடம் போடுகின்றனர்.

**மேற்குலக ஏகாதிபத்தியங்கள், குழந்தை உழைப்பைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் பொருட்களை ஏழை நாடுகள் ஏற்றுமதி செய்வதை, உலக வர்த்தகக் கழகத்தின் மூலம் தடை செய்து வருகின்றன. தனது ஏற்றுமதி வர்த்தகம் பாதிக்கப்படும் என்று பயந்து போய்தான், குழந்தை உழைப்பைச் சட்டத்தின் மூலம் தடுத்துவிட முயன்று வருகிறது இந்திய அரசு.**

உண்மை என்னவென்றால், ஆயத்த ஆடைகள், பனியன் மற்றும் டெக்ஸ்டைல்கள், தீப்பெட்டிகள், பட்டாசுகள், கண்ணாடிப் பொருட்கள் போன்ற பல பொருட்களை சர்வதேச சந்தையில் குறைந்த விலையில் விற்கின்றன ஏழை நாடுகள். இதில் பெரும் உழைப்பு குழந்தைத் தொழிலாளிகளுடையது. இந்த குழந்தைத் தொழிலாளிகளைத் தடை செய்துவிட்டால் சர்வதேச சந்தையிலுள்ள போட்டியை ஒழித்துக் கட்ட முடியும். இதுதான் ஏகாதிபத்திய முதலாளிகளின் லாபக் கணக்கு.

சிவகாசி போன்ற கந்தக பூமியில் விவசாயம் பயனில்லை. எனவே மக்கள் தீப்பெட்டி, பட்டாசு ஆலைகளில் தள்ளப்படுகின்றனர். இது போன்ற நிலைதான் இந்தியாவின் பல இடங்களில் பல தொழில்களில் உள்ளது. அம்மக்களின் உழைப்புக்கு கூலியோ மிக அற்பம். இந்நிலையில் அக்குடும்பத்திலுள்ள குழந்தைகள் கூட உழைத்தால்தான் சோறு என்ற அவல நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இப்படித்தான் குழந்தைத் தொழிலாளர் என்ற கொடுமை உருவாக்கப்படுகிறது.

இந்த அவலத்தை ஒழிக்க மாற்று திட்டமிடாமல் வெறுமனே குழந்தைத் தொழிலாளரை ஒழிப்பதென்பது பகற் கனவு. மீறி நடைமுறைப்படுத்தினால் விளைவு இன்னும் மிக மோசமாகும். மாற்று தீர்வு இன்றி குழந்தை உழைப்பை ஒழிப்பது விபச்சாரம் போன்ற மிக கொடிய வழிக்கு குழந்தைகளைத் தள்ளும்.

● பச்சையப்பன்

### மெட்ரிக்குலேஷன் - மழலையர் பள்ளிகள்

# மெக்காலேயின் உண்மையான வாரிசுகள்

ஒரு தேசிய இனத்தை முற்றாக அழிக்க வேண்டுமெனில் "அவர்களின் மொழியை முதலில் அழி" என்பது தேசிய இன ஒடுக்குமுறையாளர்களின் பாதை.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்!"

என்ற வரிகளின் பொருள் என்னவாகி விட்டது? சொந்த மண்ணில் பிழைக்க வழி இல்லை, பிழைப்பு தேடி எட்டுத்திக்கும் ஓடி பிறந்த மண் பக்கம் திரும்பிகூடப் பார்க்க வேண்டாம் என்கிற நிலைதானே நிலவுகிறது!

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே ம.பொ.சி. அவர்களும், சி. சுப்பிரமணியம் அவர்களும் "தமிழால் முடியும்" "தமிழால் முடியாதது"? எது என்று தமிழின் வலிமையை உணர்த்திடும் வகையில் எடுத்துக் கூறினர். மறைமலையடிகள், பெருஞ்சித்திரனார் போன்ற தமிழ் மொழிப் போராட்ட தியாகிகள் சாகும்வரை தமிழை ஆட்சி மொழி, பயிற்றுமொழி, வழிபாட்டு மொழி என சகல துறைகளிலும் தமிழை அரியணை ஏற்றிட அரும்பாடுபட்டனர். திராவிட கட்சிகள் ஆட்சிக்கு வந்ததும் சமஸ்கிருதமயமான பார்ப்பனத் தமிழும், ஆங்கில மோகமும் கொஞ்சம் மறைந்து தூய தமிழ் வளரத் தொடங்கியது. ஒரு கட்டத்தில் இவ்வளர்ச்சி தேக்கமடைந்ததோடு நில்லாமல் "மெல்லத் தமிழினிச் சாகும்; அந்த மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்!" என்ற நிலையை இன்று கண்கூடாகக் கண்டு வருகிறோம். தமிழ்மொழியோடு தமிழ் இனமும் அழிந்து அதன் சொந்த அடையாளங்களை மெல்லமெல்ல இழந்து வருகிறது. அதற்கு இந்த மெட்ரிக்குலேசன் வணிக நிறுவனங்கள் பிரதான பங்காற்றி வருகின்றன.

கலை, இலக்கியம், தொலைக்காட்சி, திரைப்படம், வழக்குமொழி, விளையாட்டு, பயிற்று மொழி, பொழுது போக்கு என்று எல்லாத் துறைகளிலும் தமிழ் "தமிங்கிலமாக" (தமிழும் ஆங்கிலமும் கலந்ததாக) மாறி அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. தமிழன் பிறப்பால் மட்டும் தமிழனாக இருந்து கொண்டு, பேச்சு, நடை உடை, பண்பாடு, வாழ்க்கை முறை, சிந்தனை போன்ற ஒரு சமூகத்தின் அனைத்து அடையாளங்களையும் இழந்து வருகிறான்.

நீண்ட காலப் போராட்டத்திற்குப் பிறகு பேராசிரியர் தமிழ்க்குடிமகன், பேராசிரியர் அன்பழகன் போன்றோரின் விடாமுயற்சியால் தி.மு.க. அரசு மருத்துவம், பொறியியல் கல்வியை இந்தக் கல்வி ஆண்டு 96 - 97 முதல் தமிழில் கொண்டு வந்திருக்கிறது.

ஆனால் தமிழினத்தின் தனித்தன்மையை சகல துறைகளிலும் அழிக்க, குழி தோண்டி புதைக்க தமிங்கில இனப் பிரிவினர் முயற்சி எடுத்து வருகின்றனர். கடந்த ஐம்பதாண்டுகளில் கடின உழைப்பால் பெற்ற பலனை ஒரு சில நொடிகளில் அழித்துவிடக் கூடிய அசுர வேகத்தில் இந்த மெட்ரிக்குலேசன், மழலையர் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

கல்வித் துறையில் இந்த மழலையர் பள்ளிகளும், மெட்ரிக்குலேசன் பள்ளிகளும் தமிழினத்தின் அடையாளம்கூடத் தெரியாத அளவிற்கு, எதிர்கால தலைமுறையினரை உருத்தெரியாமல் சிதைக்கும் ஒரு பெரிய இன விரோத யுத்தத்தை மிக அமைதியாக நடத்தி வருகின்றன.

**புற்றீசலாகப் பெருகிவரும் மழலையர் - மெட்ரிக் பள்ளிகள்**

கடந்த சில ஆண்டுகளில் மழலையர் பள்ளிகள் புற்றீசலாகப் பெருகி எண்பத்தி ஐந்தாயிரத்தை எட்டிவிட்டது. பட்டிதொட்டி தோறும் பால்மணம் மாறாத பிஞ்சுகளுக்கு ஆடுகளுக்கு மாட்டியிருக்கிற வேலித்தடுப்பு போன்று ஒரு டை, காலணி (ஷூ). நடை உடையில் மட்டுமல்ல, சிந்தனையிலும் பிஞ்சிலேயே தாய்மொழிச் சிந்தனையை இழக்கச் செய்யும் மிகக்கொடிய, அறிவுபூர்வமற்ற, இயற்கைக்கு விரோத அமைதித் தாக்குதல் ஏறத்தாழ ஒரு கோடி சிறார்கள் மீது தொடுக்கப்பட்டு வருகிறது.

இந்த மம்மி, டாடி கலாச்சாரம் சிறு வயதிலேயே எதிர்காலத் தலைமுறையினரை பிறந்த மண்ணிலேயே தாய்மொழி, தமிழ் பண்பாடு, சொந்த அடையாளங்களை இழக்கச் செய்து தமிழி

**மேற்கத்திய மிடுக்கில் மெட்ரிக்குலேஷன் பள்ளி மாணவர்கள். மெக்காலே தொடங்கி வைத்தது தடையின்றித் தொடர்கிறது.**





படிப்பகம்

www.padippakam.com

னத்திற்கு எதிராக உருவாக்கும் விசச் செயலாகும். வேறு வழி இல்லை என்று விபரம் அறியாத பெற்றோர்களும், படித்த மக்களில் ஒரு பிரிவினரும் இதை ஏற்கவேண்டிய நிலை உருவாகி விட்டது.

தமிழகத்தில் ஏறத்தாழ ஆயிரத்து ஐநூறு மெட்ரிக்குலேசன் பள்ளிகள் உள்ளன. 1980-க்குப் பிறகு இவை பதினைந்து மடங்காக அதிகரித்து இருக்கிறது. இந்த 1500 மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் குறைந்தது ஐநூறு மாணவர்கள் எனில், ஏழரை லட்சம் இளம் தலைமுறையினர் தமிழே தெரியாமல் ஆங்கிலம், இந்தியில் கல்வியூட்டி வளர்க்கப்படுகிறார்கள்.

மதிப்பெண் மட்டுமே குறிக்கோள் என்பதால் பயிற்று மொழி ஆங்கிலம். அதோடு மொழிப் பாடப் பிரிவு ஒன்று மற்றும் இரண்டில் ஆங்கிலம் மற்றும் இந்திக்கே அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. பெயரளவில் பத்தாம் வகுப்பு அரசு தேர்வுக்காக தமிழ் ஒரு பாடமாக இருந்து வருகிறது.

இத்தகைய மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் தமிழ் மட்டுமல்ல, தமிழாசிரியர்களும் புறக்கணிக்கப்படுகிறார்கள். கல்வித் தகுதியும், இருபதாண்டுகள் ஆசிரியர் அனுபவமும் அதே பள்ளியில் பத்தாண்டுகள் துணை முதல்வர் என்ற அனுபவமும் இருந்த போதிலும் தமிழாசிரியரை ஆங்கில வழிப் பள்ளிக்குத் தலைமையாசிரியராக போடுவது எப்படி என்று புறக்கணிக்கிறார்கள்.

கேட்டால் "இது என்ன அரசு உதவி பெறும் தமிழ்வழிப் பள்ளியா, அரசு விதிகளை ஏற்க? மெட்ரிக்குலேசன் பள்ளிகள் சுயநிதிப் பள்ளிகள். அரசு ஒரு நயா பைசாகூட தருவதில்லை. இதில் அரசு தலையிட என்ன இருக்கிறது" என்கிறது மெட்ரிக்குலேசன் பள்ளிகளின் நிர்வாகம்.

**மெட்ரிக் பள்ளிகளின் சுரண்டல் கொள்ளை**

இந்த மெட்ரிக்குலேசன் வணிக நிறுவனங்கள் ஆங்கில மோகம் கொண்ட, நல்ல வருவாய்கொண்ட நடுத்தர பிரிவினரின் பிள்ளைகளுக்காகவே பள்ளியை நடத்தி வருகின்றன. சுயநிதியைக் கொண்டு கல்விக்காக செய்துவரும் சேவை என்று சொல்லிக் கொண்டு, லட்சம் லட்சமாக பணம் சம்பாதிக்க மிகவும் லாபகரமான தொழில் வணிக நிறுவனமாக தமிழக மெட்ரிக்குலேசன் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.

நடுத்தர மெட்ரிக்குலேசன் பள்ளிகள் ஒரு பையனுக்கு ஆண்டுக்கு பத்து முதல் பதினைந்தாயிரத்தை கறந்து விடுகின்றன. இப்பள்ளிகளை கிராமப்புற, நகர்ப்புற ஏழை எளிய மக்கள் திரும்பிக்கூடப் பார்க்க இயலாது.

திட்டமிட்டே மிக உயர் வருவாய் பிரிவினருக்கு ஊட்டி, கொடைக்கானல், டூன் போன்ற இடங்களில் சி.பி.எஸ்.சி. பள்ளிகள், நடுத்தர வருவாய் பிரிவினருக்கு இந்த மெட்ரிக்குலேசன் பள்ளிகள். ஏழை எளிய மக்களுக்கு அரசு மற்றும் கார்ப்பரேஷன் பள்ளிகள் என்ற நிலை எழுதப்படாத விதியாகி விட்டது.

இத்தகைய மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் கலை, அறிவியலைப் படித்த வேலையற்ற பட்டதாரிகள், பெண்கள் மிகக் கீழ்த்தரமான முறையில், எந்தவித விதிமுறைகளும் இன்றி மிகக் குறைந்த சம்பளத்திற்கு மூளை உழைப்புச் சுரண்டலுக்கு ஆளாகிறார்கள். ஏறத்தாழ தமிழகத்தில் இருபது முதல் முப்பதாயிரம் பட்டதாரிகள் இத்தகைய பள்ளிகளில் கொத்தடிமைப் பட்டதாரி ஆசிரியர்களாக இருந்து வருகின்றனர்.

+2 முடித்துவிட்டு இரண்டாண்டுகள் பட்டய (டிப்ளமோ) ஆசிரியர் கல்வி படித்தவர்கள் அரசு பள்ளிகளில் வேலைக்குச் சேர்ந்த இரண்டாண்டுகளில் நாலாயிரத்து ஐநூறு ஊதியமாகப் பெறுகிறார்கள். ஆனால் மெட்ரிக்குலேசன் பள்ளிகளில், எம்.ஏ., எம்.எஸ்.சி., பி.எட்., எம்.எட்.; எம்.பில் என்று ஒரு மைல் நீளத்திற்குப் படித்தவர்களும் பத்தாண்டுகள் பணிபுரிந்தாலும் பெரும்பான்மையான பள்ளிகளில், ஆயிரம் அல்லது இரண்டாயிரம் மட்டுமே ஊதியமாகப் பெறுகிறார்கள்.

எந்தவித படிப்புமே இல்லாமல் ஒரு ஆசாரி, ஒரு கொத்தனார், ஒரு மெக்கானிக் மாதம் மூவாயிரம் - ஐந்தாயிரம் சம்பாதிக்கும்போது, இந்த பட்டதாரிகள் கூட்டம் மட்டும் கோட், சூட், டை என்று வேடமிட்டும், சம்பளமோ ஆயிரம் இரண்டாயிரத்தை தாண்டாத நிலை நிலவுகிறது.

மெட்ரிக்குலேசன் பள்ளிகள் ஒரு மாணவனிடம் ஓராண்டுக்கு பத்து முதல் பதினைந்தாயிரத்தை வசூல் செய்கிறது. ஆசிரியர் - மாணவர் விகிதமோ ஒன்றுக்கு நாற்பது, ஐம்பது என்ற அளவில் உள்ளது. குறைந்தது ஐநூறு மாணவர்கள் எனில் நிறுவன வருவாயோ ஐம்பது லட்சம், ஆசிரியர்களுக்கான ஊதியமோ 750 - 1500 வரைதான், பத்து, பதினைந்து ஆசிரியர்கள் என்றாலும் ஊதியச் செலவு ஒன்றரை முதல் இரண்டரை லட்சம்தான். இதர செலவு பத்து லட்சம் என்றாலும் நிறுவனத்திற்கு முப்பது லட்சத்திற்குக் குறையாமல் லாபம் கொட்டுகிறது.

இந்த லாபத்தைக் கொண்டு ஆண்டுக்காண்டு புதிய கிளைகள், பேருந்துகள், கட்டிடங்கள், வேன்கள், நிலம், ரியல் எஸ்டேட், வீடு என்று சொத்து சேர்த்து பகற் கொள்ளையடிக்கிறார்கள்.

ஆனால் இந்த லாபத்திற்கான பிரதான உழைப்பாளர்கான ஆசிரியர்களுக்கு எந்தவித வேலை உத்திரவாதமோ, உரிய ஊதியமோ, அரசு ஊழியரைப் போன்ற சலுகையோ எதுவுமின்றி முப்பதாயிரம் ஆசிரியர்கள் அடிமைகளாக வாழ்ந்து வருகின்றனர்.

வேலை உத்திரவாதம், ஊதியம், இதர சலுகைகள் என்ற பிரச்சனை வரும் என்பதால் பல மெட்ரிக்குலேசன் நிறுவனங்கள் ஒவ்வொரு ஆண்டும் புதிதாக ஆசிரியர்களை எடுப்பார்கள், இறுதியில் போகச் சொல்லி விடுவார்கள். கோடை விடுப்புகால ஊதியம் கிடையாது. மீறிபேச, கேட்க அவர்களுக்கான சங்கமோ, அமைப்போ கிடையாது. அப்படி அவர்கள் யோசித்தாலே வேலை கிடையாது என்ற கொடுமை நிலவுகிறது, இந்த மெட்ரிக்குலேசன் பள்ளிகளில்.

சில மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் ஒவ்வொரு ஆண்டும் வேலைக்கான புது உத்தரவும், மே மாதத்தில் வேலையிலிருந்து விடுவித்ததற்கான கடிதமும் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். பூர்த்தி செய்யப்படாத ஊதிய கணக்கு நோட்டில் கையெழுத்து வாங்கி விடுவர். கையிலோ குறைந்த ஊதியம் கொடுக்கப்படும், கணக்கில் வேறொன்று இருக்கும். சில ஆசிரியர்கள் ஒவ்வொரு ஆண்டும் பெற்ற வேலைக்கான கடிதங்கள் பத்து, பதினைந்து வைத்திருக்கிறார்கள்.



அரசு தொடக்கப் பள்ளி ஒன்றின் அவலம். இதில் பயிலும் சிறுவர்களின் உயிருக்கும் உத்தரவாதமில்லை.

மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் படித்த வேலையற்ற பட்டதாரிகள், குறிப்பாகப் பெண்கள், அதே ஊரைச் சார்ந்தவர்கள், அழகான, திறமையும் அனுபவமும் கொண்டவர்களை அதிகமாக ஆசிரியர்களாக அமர்த்திக் கொள்கிறார்கள். காரணம், பெண்கள் சொன்னபடி செய்வார்கள். எதிர்த்து ஏன், எதற்கு என்று கேட்க மாட்டார்கள். கொடுக்கிற சம்பளத்தைப் பெற்றுக் கொள்வார்கள். உரிமை, போராட்டம், சங்கம் என்ற பேச்சுக்கே இடமில்லை. மீறி யாரேனும் பேசினால் அவர்களின் நடத்தை சரியில்லை என்று எளிதில் வெளியேற்றி விடலாம். மேலும் பாலியல் அயோக்கியத்தனத்திற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் கருதுகிற மோசமான நிறுவனங்களும் நிறைய இருக்கின்றன.

தமிழ் மொழி - பண்பாட்டைச் சிதைத்து, ஆங்கில மோகத்தையும் மேற்கத்திய சீரழிவுக் கலாச்சாரத்தைம் திணித்து வரும் மெட்ரிக்குலேசன் பள்ளிகளில் இளைய தலைமுறை எவ்வாறு சீரழிகிறது, மாணவர்களின் மொழி உணர்வுகள் எவ்வாறு முடக்கப்படுகிறது, இப்பள்ளிகளின் தேர்வு முறை எவ்வாறு மோசடியானது என்பனவற்றை அடுத்த இதழில் பார்ப்போம்.

(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

போராடத் தயாராக வேண்டும் என்றார்.

எட்டு மணி நேர வேலைக்காக தொழிலாளி வர்க்கம் செய்த அளப்பரிய தியாகங்களைத் தொட்டுப் பேசிய ம.க.இ.க. முன்னாள் பொதுச் செயலர் தோழர் கதிரவன், ''தாராளமயமாக்கலின் பின் இந்தியப் பாராளுமன்றம் போலீசுக்காரன் வேலையைத்தான் செய்து வருவதாக''க் குறிப்பிட்டார். ''இறால் பண்ணைகளையும், பழத் தோட்டங்களையும் புகுத்தி, விவசாயத்தை நாசமாக்கி, பட்டினிப் பட்டாளத்தை உருவாக்கி வரும் நாசகாரக் கொள்கைதான் இத்தனியார்மயம் - தாராளமயம் - உலக மயம்'' என விளக்கினார்.

பு.மா.இ.மு.வைச் சேர்ந்த தோழர் சேகர், ''இறால் பண்ணைகள், ஸ்டெலர்லைட், டியுபாண்ட், கூடங்குளம் அணு உலை எனச் சுற்றுப்புறச் சூழலுக்கு கேடு விளைவிக்கும் தொழில்களையும் ஆலைகளையும் இங்கே தொடங்கி நடத்த அனுமதித்த ஓட்டுக் கட்சிகளின் துரோகத்தை அம்பலப்படுத்தியதோடு, இதன்மூலம் நமது உயிர் வாழும் உரிமையைப் பறிக்கிறார்கள்'' என்றார்.

இறுதியாக உரையாற்றிய ம.க.இ.க. மாநில இணைச் செயலாளர் தோழர் காளியப்பன், ''மே நாளன்று மறியலா செய்கின்றீர்கள்? மே நாளை மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டும் என உபதேசிக்கும் வலது - இடது போலிகளின் கையாலாகாத்தனத்தையும், ஏகாதிபத்திய தாசர்களாக மாறிப்போன அவர்களின் புதிய அவதாரத்தையும்'' சாடினார்.

தஞ்சையில் இம்மறியலை முன்னிட்டு நடந்த ஆர்ப்பாட்டத்தைப் பார்த்த நெய்வேலி நிலக்கரிக் கழக ஊழியர் ஒருவர் 'தனியார்மயத்தை எதிர்க்க இங்கே கட்சிகள் இருக்கின்றனவா?'' என வியந்ததை நினைவுகூர்ந்து ''புரட்சியாளர்களால்தான் நாடு மறுகாலனியாவதைத் தடுக்க முடியும்'' என்றார்.

பொதுக்கூட்டம் முடிந்தபின், தடையை மீறி மறியலுக்கு அணிவகுத்துச் சென்ற அப்போராளிகளை, மந்தாரக் குப்பத்தைத் தாண்டிவிடாதபடி இடையிலேயே தடுத்து நிறுத்தி, கைது செய்தது தமிழகப் போலீசு. பின்னர், கைதான தோழர்கள் அன்று மாலையே வழக்கின்றி விடுவிக்கப்பட்டனர்.

பிரளயமொன்றை எதிர்பார்த்து தமிழகப் போலீசு பெரும் பட்டாளத்தையே குவித்திருந்தது. ஆனால் போராட்டமோ அமைதியான முறையிலே நடந்து முடிந்தது. தோழர் காளியப்பன் தனது உரையில் குறிப்பிட்டபடி, இந்த அமைதி - புயலின் அமைதியாகும். தொழிற்சங்கவாதத்தில் மூழ்கடிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களின், அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளால் அலைக்கழிக்கப்படும் உழைக்கும் மக்களின் மௌனங்கள் உடைபடும்பொழுது, இந்த அமைதியின் சீற்றம் எத்துணை வலியது என்பதை எதிரிகள் உணருவர். • செல்வம்.



**நெய்வேலியில் தடையை மீறி மறியல் செய்ய அணிவகுத்துச் செல்லும் தோழர்கள்**

# ''இந்திய இராணுவத்தின் இன்னுமொரு கோரமுகம்''

## — ஒரு முன்னாள் இராணுவ வீரரின் சாட்சியம்

வீரன் அழகுமுத்துகோன் மாவட்டத்திலுள்ள கம்பம் நகரைச் சேர்ந்த இளைஞர் ஆர். சசிகுமார். இவரது தந்தை சுமைதூக்கும் தொழிலாளி. 12-ஆம் வகுப்பு வரை படித்துள்ள சசிகுமார், கோயம்புத்தூரிலுள்ள இராணுவ ஆள் சேர்ப்பு மையத்தில் 96-ஆம் ஆண்டு சனவரி மாதம் நடந்த உடற்கூறு தகுதி மற்றும் கல்வித் தகுதி சோதனைகளில் தேர்ச்சி பெற்றார். எனினும், ''இம்மையத்தில் வேலை பார்க்கும் கடைநிலை ஊழியர் மூலம் 20,000 ரூபாய் இலஞ்சமாகத் தந்தால்தான், பயிற்சிக்கு அனுப்பி வைப்போம்'' என சசிகுமாரிடம் அதிகாரிகள் கூறிவிட்டனர். பின்னர், தனது வீட்டை அடமானமாக வைத்து, இருபதாயிரம் ரூபாய் இலஞ்சம் கொடுத்து, பயிற்சிக்காக மகாராஷ்டிரா செல்லும் உத்தரவைப் பெற்றுள்ளார் இவர்.

மகாராஷ்டிராவில் நாசிக் சாலையில் உள்ள சிறுபீரங்கி இராணுவ மையத்தில் 26.02.96 அன்று பயற்சிக்காகச் சேர்ந்த இவருக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி காத்திருந்தது. தமிழன் என்ற காரணத்தினாலும், இந்தி மொழி தெரியாததாலும் இவரை, ''விடுதலை புலி தம்பி, குண்டு பயலே இங்கே வா'' என ஏளனமாக அழைப்பதையே வழக்கமாக்கிக் கொண்டனர்.

அம்மையத்தில் நடைபெறும் கொடுமைகளைத் தாளாது, சசிகுமாருடன் பயிற்சியில் சேர்ந்த ஆந்திராவைச் சேர்ந்த இருவரும், சென்னையைச் சேர்ந்த இருவரும் தப்பியோடி விட்டனர். அவர்கள் ஓடிச் சென்றதற்கு சசிகுமார்தான் காரணம் எனச் சந்தேகங்கொண்ட அதிகாரிகள், சசிகுமாரின் ஆடைகளைக் களைந்துவிட்டு, உள்ளாடையுடன் கையையும் காலையையும் சேர்த்துக் கட்டித் தாக்கினர்.

தனது மகனுக்கு நேர்ந்த கொடுமைகளைக் கடிதம் மூலம் அறிந்துகொண்ட சசிகுமாரின் தந்தை, அவரைக் காண நாசிக் சாலைக்குச் சென்று, அதிகாரிகளிடம் முறையிட முயன்றார். ஆனால் அவர்களோ, ''நடந்ததை வெளியே சொன்னால் சிறையில் தள்ளவிடுவோம்'' என மிரட்டியதோடு, அவரது கண் முன்னாலேயே சசிகுமாரின் வாயினுள் கம்பை நுழைத்து, சித்திரவதை செய்து அவமானப்படுத்தினர். மேலும், ''இங்கு எந்தவொரு பிரச்சினையுமில்லை; என்னை விடுவித்து விடுங்கள்'' என சசிகுமாரை நிர்பந்தமாகச் சொல்ல வைத்து, பயிற்சியில் இருந்து துரத்தியடித்து விட்டனர்.

ஒழுங்கு, கட்டுப்பாடு என்ற பெயரில், இரும்புத் திரையிடப்பட்ட இராணுவத்தினுள் நடக்கும் அக்கிரமங்களுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் பலியானோர் பட்டியல் சசிகுமாரோடு முடிவடைந்துவிடவில்லை. கோவாவில் பயிற்சியை முடித்த நிலக்கோட்டை - மட்டப்பாறையைச் சேர்ந்த இராசேந்திரன், பயிற்சியை முடித்துவிட்டு மீண்டும் பணியில் சேர விருப்பமில்லாமல், விஷமருந்தி தூக்குபோட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இராணுவத்திற்கு ஆளெடுப்பதற்காக தினசரிகளில் வெளிவரும் விளம்பரங்களில், ''இராணுவத்தில் சேருங்கள்; தேசத்திற்குப் பணியாற்றுங்கள்'' என்ற 'வேண்டுகோள்' இருக்கும். ஆனால், தனது கீழ்மட்ட ஊழிர்களையே கொஞ்சமும் இரக்கமின்றி அடக்கி ஒடுக்கி வரும் இந்திய இராணுவத்திடமா மக்கள் சேவையை எதிர்பார்க்க முடியும்?

தகவல்:
ஆர். சசிகுமார், முன்னாள் இராணுவவீரர்.

Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, IInd Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGARAJ

படிப்பகம்

# இதுதான் இன்றைய இந்தியா



தி.மு.க.வின் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை, மே 1 அன்று சென்னையில் நடத்திய மே தினப் பேரணியில் கலந்துகொண்ட அக்கட்சியின் தலைவர் - தமிழக முதல்வர் கருணாநிதி, மே தினச் சுடரைத் தொண்டர்களிடம் இருந்து பெறுவதுதான் இந்தப் படம். வாண வேடிக்கைகள், அலங்கார வண்ண விளக்குகள், கட்-அவுட்டுகள் என்று ஓட்டுக் கட்சிகளுக்கே உரிய கவர்ச்சிகரமான கலாச்சாரத்தோடு நடந்த இந்தப் பொதுக்கூட்டத்தில் பேசிய கருணாநிதி, எட்டு மணி நேர வேலைக்காக தொழிலாளி வர்க்கம் நடத்திய போராட்டம் பற்றி தனக்கிருக்கும் வரலாற்று அறிவை வெளிக்காட்டிக் கொண்டார். ''தொழிலாளர்களுக்கு ஏழு மணி நேர வேலையே போதுமானது என்று விருதுநகர் மாநாட்டில் திராவிட இயக்கம் தீர்மானம் நிறைவேற்றியது'' என்ற சுயபுராணத்தை அவிழ்த்து விட்டார். ''உரிமைக்காகப் போராடும் உங்கள் பக்கம் நாங்கள் இருப்போம்'' எனப் பேசி, தொண்டர்களின் கை தட்டலைப் பெற்றுக் கொண்டு, அற்ப சலுகைகளை அள்ளி வீசிச் சென்றார்.

இதோ ஒப்பாரி போராட்டம் நடத்துகிறார்களே சத்துணவு சமையல் தொழிலாளர்கள், அவர்களிடம் கேட்டுப் பாருங்கள், பாட்டாளியின் அண்ணன் கருணாநிதி தங்கள் வயிற்றிலடித்ததை எடுத்துச் சொல்வார்கள். இவர்கள் பெறும் அற்பக் கூலியிலும் பத்து ரூபாயைப் பிடித்துக் கொண்டு, கஜானாவை நிரப்பி வருகிறார், கருணாநிதி. அதை எதிர்த்துதான் இந்தப் போராட்டம். நெருப்பில் வேகாமலும், வியர்வை சிந்தாமலும், மடிப்புக் களையாமலும் சமைத்து இறக்கிவிட முடியுமா? ஒரு குடும்பத் தலைவியின் பொறுப்புணர்வையும், ஒரு தாயின் அக்கறையையும் நாம் இந்தப் பணியாளர்களிடம் காண முடியுமே! அரிசி தொடங்கி விறகு வாங்குவது வரை, கருத்தடைக்கு ஆள் பிடிப்பது என அதிகார வர்க்கம் காலால் இடும் வேலையை இவர்கள் தலையால் செய்து முடிக்க வேண்டும்; எதிர்த்துக் கேட்டால் திருட்டுப் பட்டம் தானே மிஞ்சும். ''நிரந்தரமான வேலை; நியாயமான சம்பளம்'' — இவைதானே இவர்கள் கோரிக்கைகள். இதைக்கூட செய்து தர மறுக்கும் ஓட்டுக் கட்சி தலைவர்களுக்குப் பாட்டாளியின் நண்பன் என்ற பட்டமெதற்கு?



ஓட்டுப் பொறுக்க வேண்டி அற்ப சலுகைகளை அள்ளி வீசுவது; உரிமைக்காக தொழிலாளர்கள் எழுந்து நின்றால் போலீசையும், குண்டர்களையும் ஏவி அடக்கி ஒடுக்குவது — இதுதானே ஓட்டுக் கட்சிகளின் உண்மை முகம். கருணாநிதியும் இதற்கு விதிவிலக்கல்லவே. அப்படிப்பட்ட இந்த நயவஞ்சக நரிகளிடமா நாம் நியாயத்தை எதிர்பார்க்க முடியும்?